# சைவ நெறி

## ஒன்பதாம் வகுப்பு



கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | உழைப்பும் பயிரும் | 1 |
| 2. | பாடுபடுபவர்க்கே | 7 |
| 3. | உழைக்கும் கரங்கள் | 9 |
| 4. | வைகுறனம் பிறந்தது | 13 |
| 5. | தேசிய விளையாட்டு விழா | 20 |
| 6. | அம்மா நான் விளையாடப் போறேன் | 26 |
| 7. | உணவு அறிந்து உண் | 29 |
| | மொழிப் பயிற்சி I | 35 |
| 8. | நாங்கள் உடைகள் | 41 |
| 9. | துருக்கித் தொப்பி | 46 |
| 10. | கை கொடுப்போம் | 54 |
| 11. | சின்ன மகளின் சின்னக் கைகள் | 56 |
| 12. | புத்தாண்டு பிறந்தது | 61 |
| 13. | புதையல் யாருக்கு | 68 |
| 14. | உலக நீதி | 73 |
| | மொழிப் பயிற்சி II | 74 |
| 15. | சித்திரக் குன்றம் | 79 |
| 16. | நாங்களும் செய்வோம் | 86 |
| 17. | நோன்புப் பெருநாள் | [illegible] |
| 18. | மகிழ்ந்தான் பையன் | [illegible] |
| 19. | இராமன் | 103 |
| 20. | சின்னவன் வென்றான் | 115 |
| 21. | ஒரு தீர்ப்பு | 121 |

| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| | மொழிப் பயிற்சி III ... | ... 126 |
| 22. | புதிய ஆத்திசூடி ... | ... 132 |
| 23. | பொய் சொல்லமாட்டேன் | ... 135 |
| 24. | மக்கா யாத்திரை ... | ... 139 |
| 25. | கதிர்காமம் ... | ... 146 |
| 26. | கடன்காரன் ... | ... 152 |
| 27. | வளரும் பயிரை முளையிலே தெரியும் | ... 153 |
| 28. | ஒன்று பட்டால் உண்டு வாழ்வு | ... 159 |
| | மொழிப் பயிற்சி IV ... | ... 168 |
| 29. | இஸ்லாமிய ஆண்டு பிறந்த கதை | ... 173 |
| 30. | மணி மொழி ... | ... 178 |
| 31. | சிவப்பு றோசா ... | ... 179 |
| 32. | துடிப்பான சிறுவன் ... | ... 185 |
| 33. | கொடுத்தாருக்குக் குறைவில்லை | ... 193 |
| 34. | மேன்மக்கள் ... | ... 197 |
| 35. | கடதாசி பேசுகிறது ... | ... 201 |
| 36. | எங்கள் நாடு ... | ... 206 |
| | மொழிப் பயிற்சி V ... | ... 207 |
| | மாதிரி வினாப்பத்திரம் ... | ... 211 |

# 1

## உழைப்பும் பயிரும்

மார்கழி மாதக் குளிர் காற்றுச் சில்லென்று வீசியது. பாயிலே சுருண்டு படுத்திருந்த நல்லதம்பி கண்களைக் கசக்கிக்கொண்டு எழுந்தார். மரத்தில் ஏறியிருந்த சேவல் இடைவிடாது கூவியது. மரஞ்செடிகளில் மறைந்து இருந்த குருவிகளின் இனிய ஓசை காற்றுடன் கலந்தது. விடிவெள்ளி கிழக்கு வானில் ஒரு பனை உயரத்திலே தெரிந்தது.

பிள்ளையார் கோவிலின் கண்டாமணியோசை ஊரெல்லாம் பரவியது. மணியோசையைக் கேட்ட நல்லதம்பி, "நேரம் நான்கு மணியாகிவிட்டது" என்று சொல்லிக்கொண்டு மாட்டுக் கொட்டிற் பக்கம் போனார்; கோடியிற் கிடந்த புல்லில் ஒரு திரளை அள்ளித் தொட்டியிற் போட்டார்; பின்னர் காலைக் கடன்களை முடிக்கச் சென்றார்.

கிணற்றடிக்குப் போன நல்லதம்பி துலாக் கொடியைப் பற்றித் தண்ணீர் அள்ளினார். சில்லிடும் நீரிலே முகத்தைக் கழுவினார். தோளிற் கிடந்த துண்டை எடுத்துத் துடைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார்.

அப்பொழுது அயல் வீட்டு ஆறுமுகம் நாதசுரம் வாசிக்கத் தொடங்கினான். அந்த இனிய இசை எங்கும் பரவியது. அதைக் கேட்ட நல்லதம்பி "தம்பி, குணம் எழும்படா; ஆறுமுகம் கூட நாதசுரம் வாசிக்கத் தொடங்கிவிட்டான். நேரம் நாலரை ஆகிவிட்டது. எழும்பு, எழும்பு" என்று மகனை எழுப்பினார்.

அவன் எழுந்து முகம் கழுவிக்கொண்டு வந்தான். தாய் தேநீர் கொண்டு வந்தாள். எல்லாரும் பனங் கட்டியைக் கடித்துக்கொண்டு தேநீர் குடித்தார்கள். சூடான தேநீர் உற்சாகத்தைக் கொடுத்தது. குணம் தேநீரைக் குடித்துவிட்டு படிக்கத் தொடங்கினான். நல்லதம்பி சால்வையை எடுத்துத் தலைப்பாகை கட்டினார். தோட்டத்திற்குச் செல்ல ஆயத்தமானார்; கோடிப் புறத்திலுள்ள கொட்டிலில் நின்ற மாடுகளை அவிழ்த்து வந்து வண்டியிற் பூட்டினார்.

மிளகாய்ச் செடிகளுக்கு மருந்தடிக்க வேண்டுமென்ற நினைப்பு அப்பொழுதுதான் அவருக்கு வந்தது. அவர் வீட்டினுள்ளே சென்று மருந்தடிக்குங் கருவியையும் மருந்தையும் நீர்ப்பம்பியையும் எடுத்துக் கொண்டு வந்து வண்டியில் வைத்தார்; அன்றைய வேலைக்குரிய பொருள்கள் யாவுஞ் சரியாய் இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு வண்டியிலேறினார். மகனைக் கூப்பிட்டு "தம்பி குணம், பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும், மத்தியானச் சாப்பாட்டைக் கொண்டு வா. எனக்கு நிறைய வேலை இருக்கிறது" என்று சொன்னார்.

வீட்டுப் படலையை மனைவி திறந்துவிட்டாள். மாடு விரைந்துகொண்டு வீதியிலேறியது. வண்டிச் சக்கரங்கள் வேகமாக உருண்டன. தெருவிளக்குகள் இன்னமும் அணைந்துவிடாது மினுங்கிக்கொண்டிருந்தன. தாங்கள் பழக்கப்பட்ட பாதையிலே, கலீரிடுஞ் சதங்கை ஒலியுடன் மாடுகள் விரைந்து சென்றன.

நல்லதம்பியின் தோட்டம் தெருக்கரையிலேயே இருந்தது. வண்டி தோட்டத்தை அடைந்ததும் அவர் மாடுகளை அவிழ்த்துத் தொட்டிலிலே கட்டினார்; வைக்கோற் கற்றை ஒன்றை அவிழ்த்து உதறிப் போட்டார்.

புகையிலைக் கன்றுகள் நடுவதற்கு நல்லதம்பி நிலத்தைப் பண்படுத்தத் தொடங்கினார். குழை தாழ்க்கப்பட்ட நிலத்தை மண்வெட்டியினாற் சாறி, நிலத்தைப் பண்படுத்தினார். நல்லதம்பி மளமளவென்று வேலையைச் செய்தார். அவருடைய உடலெங்கும் வியர்வை வடிந்தது. அவர் மிகுந்த உற்சாகத்துடன் வேலை செய்தார்.

கீழ்வானிலே சூரியன் உதித்தது. பொன் வெயில் எங்கும் பரவியது. ஆண்களும் பெண்களும் பெட்டிகளிலுங் கடகங்களிலுங் காய்கறிகளைச் சுமந்து கொண்டு ஆலடிச் சந்தைக்குச் சென்றார்கள்; வாழைக் குலைகளை வண்டிகளிற் கொண்டுசென்றனர்.

நல்லதம்பி, நிலத்தைச் சாறும் வேலையை முடித்து விட்டுக் கடகத்துடன் கத்தரித் தோட்டத்திற்குச் சென்றார். பூவும் பிஞ்சும் நிறைந்த செடிகளைக் காண அவருக்கு மகிழ்ச்சி பொங்கியது. அவர் கடகம் நிறைந்த கத்தரிக்காய்களுடன் பக்கத்திலுள்ள ஆலடிச் சந்தைக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றார்.

சந்தையில் வியாபாரம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. நல்லதம்பி கொண்டுசென்ற ஒரு கடகம் கத்தரிக்காய் நாற்பது ரூபாவிற்கு விலைப்பட்டது. நல்லதம்பி காசை மடித்துக் கொட்டைப் பெட்டிக்குள் வைத்துப் பக்குவமாக மடியிற் கட்டினார். சந்தையிற் காலைத் தினசரிப் பத்திரிகைகளை விற்றுக்கொண்டிருந்த நடராசாவிடம் அன்றைய பத்திரிகையை வாங்கிய பின் தோட்டத்திற்குச் சென்றார். அங்கு அவருடைய மனைவியும் வந்து சேர்ந்துவிட்டாள்.

அவள் அன்றைய உணவுக்குத் தேவையான காய்கறிகளைப் பறித்தாள்; வீட்டிலுள்ள பசுவுக்குத் தேவை

யான புல்லைப் பிடுங்கிக் கடகத்தில் அடைந்துகொண்டிருந்தாள். கணவனைக் கண்டதும் "இன்றைக்குச் சந்தையிலே கத்தரிக்காய் விலை எப்படி?" என்று கேட்டாள்.

"நல்ல சூடு; நாற்பது ரூபாவிற்கு விற்றேன்" என்று கூறி, காசை எடுத்து மனைவியிடங் கொடுத்தார் நல்லதம்பி.

"சரி, கைகாலைக் கழுவிக்கொண்டு சாப்பிட வாருங்கள்" என்று அவள் அழைத்தாள். கிணற்றடிப் பூவரசின் கீழ் இருவரும் அமர்ந்தனர். அவள் காலை உணவாகப் பழஞ்சோற்றைப் பிசைந்து திரட்டிக் கொடுத்தாள். அவர் அதைச் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்டார்.

சாப்பாடு முடிந்ததும் கிணற்றுக்கட்டில் இருந்தபடி பத்திரிகையை அவர் வாசிக்கத் தொடங்கினார். அப்பொழுது மனைவி புல்லுக் கடகத்தையுங் காய்கறிகளையும் எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டாள். பத்திரிகையை வாசித்த பின் நல்லதம்பி, மிளகாய்ச் செடிகளுக்கு மருந்தடிக்க ஆயத்தமானார். மருந்தை அளவாகத் தண்ணீருடன் கலந்தார். பின் மருந்தடிக்கும் கருவியுள் அதனை நிரப்பி அடித்தார். அந்த வேலை முடிந்ததுஞ் சிறிதுநேரம் இளைப்பாறினார்.

பின்னர், அவர் நீர்ப் பம்பியை எடுத்து வந்து குழாயுடன் பொருத்திப் பூட்டினார்; பம்பியை இயக்கிவிட்டார். நீர் 'குபு குபு' என்று வாய்க்காலில் ஓடியது. அவர் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு வெங்காயத்துக்குத் தண்ணீர் கட்டச்சென்றார். அப்போது அடுத்த தோட்டத்துத் தணிகாசலம் அந்தப் பக்கமாக வந்தார்.



படம் 1. நீர் 'குபு குபு' என்று பாய்ந்தது.

''என்ன, நல்லதம்பி பெரிய வாய்க்கால் உடைந்து விட்டது. தெரியவில்லையோ?'' என்று கேட்டார்; தம் கையிலிருந்த மண்வெட்டியால் மண்ணைக் கோலி உடைப்பை அடைத்தார்.

அப்பொழுது நல்லதம்பியின் மகன் குணம் சாப்பாடு கொண்டு அங்கே வந்தான்; ''அப்பா, நீங்கள் வந்து சாப்பிடுங்கள். நான் தண்ணீர் மாறுகிறேன்'' என்றான்; தகப்பனிடம் மண்வெட்டியை வாங்கித் தண்ணீர் மாறத் தொடங்கினான். நல்லதம்பி சாப்பிடச் சென்றார்.

## வினாக்கள்

I. 1. நேரம் நான்கு மணியாவதைத் தெரிவித்த ஓசை எது?

2. நல்லதம்பி ஆலடிச் சந்தையில் விற்ற பொருள் யாது? வாங்கிய பொருள் யாது?

3. நல்லதம்பி பயன்படுத்திய கருவிகள் எவை?

4. விவசாயிகளிடமுள்ள ஒற்றுமையுணர்வை விளக்கும் நிகழ்ச்சி எது?

5. நல்லதம்பி ஊக்கமுள்ள விவசாயி என்பதை எவ்வாறு விளக்குவீர்?

II. பின்வருவனவற்றிற்குச் சரியான திருந்திய வடிவமுள்ள சொல்லைத் தருக.

1. தேனீர்
2. வேர்வை
3. தலைப்பா
4. வாய்கால்
5. பொயிலை

III. பின்வருவனவற்றிற்கு ஒத்த கருத்துள்ள சொற்களைத் தருக

1. ஓசை
2. பூ
3. உணவு
4. வீடு
5. சூடு

## 2

## பாடுபடுபவர்க்கே...

பாடு படுபவர்க்கே—இந்தப்
பாரிடம் சொந்தமையா!
காடு திருத்தி நல்ல—நாடு
காண்ப தவரலவோ?

மந்திர மோதுவதால்—எங்கும்
வயல்வி ளைவதுண்டோ?
தந்திரப் பேச்சாலே—அரிசி
சாத மாயிடுமோ?

கட்டும் ஆடையாகப்—பருத்தி
காய்த் தளிப்ப துண்டோ?
சட்டி பானையெலாம்—மண்ணில்
தாமே எழுவதுண்டோ?

உழுது பயிர்செய்வோன்—வயிற்றுக்
குணவு பற்றாமல்
அழுத முதுநிதம்—நிற்ப
தறியீ ரோஜயா!

ஆடை நெய்திடுவோன்—போர்க்கும்
ஆடை யில்லாமல்
வாடை கொண்டுநிதம்—கிடந்து
வருந்த லாமோ ஐயா!

வீடு கட்டுமொரு—கொத்தன்
விடுதி யில்லாமல்
ஆடு மாடுகள்போல்—உலகில்
அலைய லாமோ ஐயா!

கோடி கோடியாக—நீங்கள்
குவித்திடும் லாபம்
வாடும் எம்மக்கள்—உண்ணா
வயிற்றுச் சோறலவோ?

மனம் திரியாமல்—காலை
மாலை யெப்பொழுதும்
குனிந்து வேலைசெய்வோர்—கும்பி
கொதிக்க லாமோ ஐயா!

வாழ வேண்டுமெனில்—தொழில்கள்
வளர வேண்டுமையா!
ஏழை என்றொருவன்—உலகில்
இருக்க லாகாதையா!

தேசிகவிநாயகம்பிள்ளை

### விளக்கக் குறிப்புகள்

பார் - பூமி; தந்திரம் - உபாயம்; சாதம் - சோறு;
ஆடை - உடை; நிதம் - தினம்;
கொத்தன் - கட்டிட வேலை செய்வோன்;
கும்பி - வயிறு.

### வினாக்கள்

1. இந்தப் பூமி எவருக்குச் சொந்தம்?
2. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தொழில்கள் மூன்றினைக் கூறுக.
3. தொழில்கள் ஏன் வளர வேண்டும்?
4. மந்திரம் ஓதுவதால் காங்கும் வயல் விளைவதுண்டோ என்னும் அடிகளிலிருந்து நீங்கள் விளங்கிக்கொள்வது யாது?
5. இப்பாடல்கள் மூலம் ஆசிரியர் வலியுறுத்தும் பிரதான கருத்துக்கள் எவை?

3

## உழைக்குங் கரங்கள்

ஒரு நாள் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பள்ளி வாசலின் விறாந்தையிலே இருந்தார்கள். அவர்களைச் சுற்றி அவர்களின் தோழர்கள் இருந்தார்கள். அவர்கள் மார்க்க சம்பந்தமான விடயங்களைப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அங்கே ஒரு புதிய மனிதர் போனார். அவருக்கு வயது ஐம்பது இருக்கும். நல்ல உயரமும் பருப்பமும் உடையவர். ஆனால் உடல் காய்ந்து கறுத்து இருந்தது. வெயிலிலே அதிக நேரம் உழைப்பவர் என்பது அவருடைய தோற்றத்தைப் பார்க்கத் தெரிந்தது. அவர் முஸ்லிம்கள் உடுக்கும் உடையை உடுத்திருந்தார்.

நபி (ஸல்) அவர்களின் தோழர் ஒருவர் அவருக்குச் சலாம் சொல்லி வந்த விடயம் என்ன என்று கேட்டார். "முஹம்மது நபி (ஸல்) அவர்களைக் காண வந்தேன்" என்றார் அந்தப் புதியவர்.

"நீங்கள் யார்? உங்கள் இருப்பிடம் எது?" என்று கேட்டபோது "நான் ஓர் உழைப்பாளி. காடுதான் என் வீடு" என்றார் அந்த மனிதர். தோழர் அவரை நபி அவர்களிடம் அழைத்துச் சென்றார். நபி (ஸல்) அவர்கள் வழக்கம்போல் உபசரித்தார்கள். அவர் பல் வேறு விடயங்கள் பற்றி நபி (ஸல்) அவர்களுடன் உரையாடினார். அவர்களுடைய உரையாடலிலே தோழர்களும் கலந்துகொண்டார்கள். உரையாடல் முடிந்தபின் அந்த மனிதர் விடைபெற்றுச் செல்வதற்கு எழுந்தார்; முஹம்மது நபி (ஸல்) அவர்களின் திருக்கரங்களைப் பற்றிச் சலாம் சொன்னார்.

அப்போது அம்மனிதரது கைகளின் கடினத்தைக் கண்டு நபி (ஸல்) அவர்கள் வியப்படைந்தார்கள். கொஞ்சம் கூட மென்மையின்றி மரத்தைப் போலச் 'சொர சொர' என்றிருந்தன அக்கரங்கள். "நண்பரே, உமது கைகள் இவ்வளவு கடினமாக இருப்பதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்கள்.

"பெருமானார் அவர்களே, விபரம் தெரிந்த நாள் முதல் நான் என் உடல் உழைப்பாலேயே வாழ்க்கை நடத்தி வருகிறேன். இந்தக் கைகள் இல்லாவிட்டால் என் தொழிலைச் செய்ய முடியாது" என்றார் அம் மனிதர். இதைக் கேட்டவுடன் நபிகள் பெருமானார் அவர்கள் அந்த மனிதரின் கைகளை எடுத்துத் தமது கண்களிலே ஒற்றிக்கொண்டார்கள். அப்பொழுது நபிகள் பெருமானார் அவர்களின் கண்களிலிருந்து நீர் வடிந்தது.

இதைக் கண்ட நபிகள் பெருமானார் அவர்களின் தோழர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அந்த மனிதர் போன பின் தோழர்கள், நபி (ஸல்) அவர்களை நோக்கி "அந்த நாட்டுப்புற அறபியின் கரங்களைத் தங்கள் கண்களில் ஒற்றிய காரணத்தை அறியலாமா?" என்று கேட்டார்கள்.

உழைத்து உரமேறிய புனிதக் கைகள் அவை. அதனாலேதான் அவற்றைக் கண்களில் ஒற்றிக்கொண்டேன். "ஒரு தொழிலாளியின் கையை எனக்குக் காட்டு என்று இறைவனிடம் நான் பல நாட்களாகப் பிரார்த்தனை செய்து வந்தேன். இன்று அதை எனக்குக் காட்டிவிட்டான்" என்றார்கள் நபிகள் பெருமானார் அவர்கள்.

"தங்கள் கண்களிலிருந்து நீர் வந்தது ஏன்?" என்றார்கள் தோழர்கள்.

அது வெறுங் கண்ணீர் அன்று. ஆனந்தக் கண்ணீர். நான் இந்த உலகை விட்டு நீங்குமுன் எனக்கு இந்தப் பாக்கியம் கிடைத்ததால் எனக்கு ஆனந்தக் கண்ணீர் வந்தது. அப்படியான கைகளே நம் சமுதாயத்துக்குத் தேவை. பிச்சை எடுப்பதைவிட ஒரு தொழில் செய்து வாழ்வது எவ்வளவோ மேல்'' என்றார்கள்.

இவ்விடயத்தை மற்றொரு சம்பவத்திலும் நபி (ஸல்) அவர்கள் வற்புறுத்தியமை தெரிகிறது. ஒருநாள் ஒரு மனிதன் பெருமானாரிடம் பிச்சை கேட்டு வந்தான். அவர்கள், ''உன்னிடமுள்ள பொருள்கள் எல்லாவற்றையுங் கொண்டுவா'' என்றார்கள். அவன் திரும்பிச் சென்று ஒரு கம்பளிப் போர்வையையும், ஒரு கோப்பையையும் கொண்டு வந்தான். அவ்விரு பொருள்களும் ஏலத்தில் விற்கப்பட்டன. விற்ற பணத்தை அம்மனிதனிடங் கொடுத்து ''இதில் ஒரு காசுக்கு உணவு வாங்கிக்கொள். மிகுதிக் காசைக் கொண்டு ஒரு கோடரி வாங்கிக்கொள்'' என்றார்கள் பெருமானார். அவன் சிறிது நேரத்தில் ஒரு கோடரியுடன் வந்தான். ''இந்தக் கோடரியைக் கொண்டு காட்டுக்குப் போ. விறகுவெட்டிக் கொண்டு வந்து வில். இரண்டு நாட்களுக்கு இந்தப் பக்கம் வரக்கூடாது'' என்று சொல்லி அனுப்பினார்கள் நபி (ஸல்) அவர்கள். இரண்டு நாட்கள்கழிந்த பின் பத்துக் காசுகளுடன் வந்தான் அம்மனிதன்.

அவனைக் கண்டு மகிழ்ச்சியடைந்த பெருமானார் ''உன்கைகள் இருக்கும்போது ஏன் பிச்சை எடுக்க வேண்டும்? பிச்சை எடுத்துச் சீவிப்பதை விட உழைத்துவாழ்வது நல்லதல்லவா?'' என்றார்கள்.

''என் உடலிலே உயிர் இருக்கும் வரை பிச்சை எடுக்க மாட்டேன்'' என்று கூறிக்கொண்டு அப்பாற் சென்றான் அம்மனிதன்.

## வினாக்கள்

I. 1. முஹம்மது நபி (ஸல்) அவர்களைக் காணச் சென்ற மனிதரின் தோற்றம் எப்படிப்பட்டது?

2. உழைப்பாளியின் கரங்கள் எப்படியிருக்கும்?

3. நபிகள் பெருமானார் அவர்கள் உழைப்பாளியின் கரங்களை ஏன் கண்ணில் ஒற்றினார்கள்?

4. பிச்சை கேட்டு வந்தவருக்கு நபிகள் பெருமானார் அவர்கள் என்ன சொன்னார்கள்?

5. பிச்சை கேட்டு வந்த மனிதன் இறுதியாகச் செய்த முடிவு என்ன?

II. (அ) எதிர்க்கருத்துள்ள சொற்களைத் தருக.

1. புதிய
2. கடினம்
3. ஆனந்தம்
4. அப்பால்
5. விற்றல்

(ஆ) பின்வரும் சோடிச் சொற்களை அவற்றின் பொருள் புலப்படுமாறு தனித்தனி வாக்கியத்தில் அமைத்தெழுதுக.

1. ஒலி
ஒளி

2. அரை
அறை

3. மரை
மறை

4. மனம்
மணம்

5. மலை
மழை

## 4

# மைதானம் பிறந்தது

மாந்தோப்பு மகா வித்தியாலயம் கல்வியிலே திறமை காட்டி வந்தது. அதனால், அதன் புகழ் எங்கும் பரவியது. ஆனால், அங்கு விளையாட்டு முயற்சி எதுவும் நடைபெறுவதில்லை; ஏனென்றால் அங்கு விளையாட்டு மைதானம் இல்லை. இது பெருங் குறை என்பதைப் பெற்றார் ஆசிரியர் சங்கம் உணர்ந்தது; பக்கத்தில் உள்ள காணியை வாங்கித் தரும்படி அரசாங்கத்தைக் கேட்டது. அரசாங்கம் அதற்குரிய செலவில் ஒரு பகுதியை வழங்குவதற்கு ஒப்புக் கொண்டது. மிகுதியைப் பெற்றார் ஆசிரியர் சங்கமே பொறுக்கவேண்டி இருந்தது.

அதிபரும் பெற்றார் ஆசிரியர் சங்க உறுப்பினரும் வீடுவீடாகச் சென்று பணஞ் சேர்த்தனர். பொது மக்கள் மனமுவந்து பணங் கொடுத்தனர். அந்தப் பணத்தையும் அரசாங்கம் உதவிய பணத்தையுங் கொண்டு காணி விலைக்கு வாங்கப்பட்டது.

அந்தக் காணி பற்றைக் காடாய்க் கிடந்தது. அதனைத் திருத்தி மைதானமாக்கப் பணம் தேவைப்பட்டது. ஆனால், பெற்றார் ஆசிரியர் சங்கத்திடம் பணம் இல்லை. இருந்த பணம் எல்லாம் காணி வாங்குவதிலே செலவாகிவிட்டது. 'என்ன செய்யலாம்?' என்று அதிபர் சிந்தித்தார். ஆசிரியரையும் மாணவரையும் ஆலோசனைக்கு அழைத்தார். ஆலோசனைக் கூட்டத்திலே நிலைமையை விளக்கிக் கூறினார். ஒரு வழி சொல்லுமாறு கேட்டார்.

அப்பொழுது ஒரு மாணவன் எழுந்து "ஊர் மக்களை உதவி செய்யும்படி கேட்கலாம்" என்று கூறினான்.

''ஏன் ஊர் மக்களைக் கேட்க வேண்டும்? நாமே காணியைச் சிரமதான முறையிலே திருத்திவிடலாம் என்றான் மற்றொரு மாணவன்.

உப அதிபர் எழுந்து ''அதுவே நல்ல யோசனை. நமது பாடசாலை ஆசிரியரும் மாணவருஞ் சேர்ந்து சிரமதானம் செய்தால் ஒரு நாளில் வேலையை முடித்து விடலாம்'' என்றார்.

வேண்டுமானால் நாம் தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரியையுஞ் சந்திக்கலாம். அவர்கள் எமக்குப் பெரிதும் உதவுவார்கள்'' என்று ஓர் ஆசிரியர் ஆலோசனை கூறினார்.

''இது எல்லோருக்கும் சம்மதமா?'' என்று அதிபர் கேட்டார். ''சம்மதம், சம்மதம்'' என்று பல குரல்கள் ஒலித்தன. அந்த யோசனையை எல்லோரும் கைதட்டி வரவேற்றனர்.

''அப்படியானால் நாம் எப்பொழுது இந்த வேலையைத் தொடங்கலாம்?'' என்று அதிபர் கேட்டார்.

'வருகிற சனிக்கிழமையே நாம் செய்து முடித்துவிடலாம்'' என்று ஒரு குரல் கேட்டது. வேறு யோசனைகள் கூறப்படவில்லை. எனவே, சனிக்கிழமையே அந்த வேலையைச் செய்து முடிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரிக்கு அதிபர் ஒரு கடிதம் எழுதினார்; அதில் அவரது பூரண ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவுங் குறிப்பிட்டிருந்தார்; அக்கடிதத்தை ஓர் அசிரியர் மூலம் அனுப்பிவைத்தார்.

அவ்வாசிரியரை இளைஞர் சேவை மன்ற அதிகாரி அன்புடன் வரவேற்றார். ''எதிர்வரும் சனிக்கிழமை

எமது பாடசாலையிற் சிரமதானம் ஒன்று நடைபெற வுள்ளது. இதற்குத் தங்கள் உதவியும் ஒத்துழைப்பும் அத்தியாவசியந் தேவைப்படுகின்றது. இதோ அதி பரின் கடிதம்'' என்று கூறிக்கொண்டு அதிபரது கடிதத்தை ஆசிரியர் நீட்டினார்.

''மிகவும் நல்லது. இத்தகைய செயல்களில் ஒத் துழைப்பு வழங்குதல் எமது பணிகளில் ஒன்றாகும்; இப் பிரதேசத்தில் உள்ள இளைஞர் சேவை மன்றங்களுக்கு இது பற்றி அறிவிக்கின்றேன்; அவர்களை உங்கள் பாட சாலைக்குச் சனிக்கிழமை அதிகாலையிலேயே அனுப்பி வைக்கின்றேன்'' என்று இளைஞர் சேவை மன்ற அதி காரி கூறினார். ஆசிரியர் அவர்களுக்கு நன்றி தெரி வித்துவிட்டு விடை பெற்றுக்கொண்டார்.

சனிக்கிழமை அதிகாலையில் ஆசிரியரும் மாணவரும் புதிதாக வாங்கிய காணிக்கு வந்து சேர்ந்தார்கள். கத்தி, கோடரி, பிக்கான், மண்வெட்டி, கடகம், கயிறு, குப்பைவாரி முதலியவற்றையுங் கொண்டுவந் தனர். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு வேலை கொடுக்கப்பட்டது. அவ்வேலையைச் செய்விப்பதற்கு வகுப்பு ஆசிரியரே பொறுப்பாக இருந்தார்.

பல்வேறு இளைஞர் சேவை மன்றங்களைச் சேர்ந்த ஐம்பதுக்கும் அதிகமான இளைஞர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் சில குழுக்களாகப் பிரிந்தனர். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு வகுப்புடன் இணைந்து சிரமதான வேலைகளில் ஈடுபடத் தொடங்கியது.

மாணவர்கள் உற்சாகத்தோடு வேலை செய்யத் தொடங்கினர். ஐந்தாம் ஆண்டு மாணவர்கள் மண் வெட்டிகளையும் கடகங்களையும் எடுத்து வந்தனர். ஆசிரியர் அவர்களைப் பார்த்து ''அதோ பாருங்கள்;

அங்கே ஒரு பள்ளம் இருக்கிறது; அதை நிரவுவோம். அதற்கு மண் வேண்டும் அல்லவா? இந்த மேட்டிலிருந்து மண்ணை வெட்டிக் கொட்டுவோம்'' என்றார். முதலிலே ஆசிரியர் மண்வெட்டியை வாங்கி, மேட்டு நிலத்தை வெட்டி மண்ணைக் கடகங்களில் நிரப்பினார். பின்னர் அவரைப் பின்பற்றி இளைஞர் சேவை மன்றத்தினர் மண்ணை வெட்டினார்கள். மாணவரிற் சிலர் மண்ணைச் சுமந்து சென்று பள்ளத்திற் கொட்டினர். வேறு சிலர் அந்த மண்ணைப் பரவிச் சமப்படுத்தினர்.

ஏழாம் ஆண்டு மாணவர்கள் ஆங்காங்கு வளர்ந்திருந்த பற்றைகளை வெட்டினர். காரை, நாகதாளி, கிஞ்ஞா, கொய்யா, பன்னை, ஆவரசு முதலிய செடிகளை வெட்டி எறிந்தனர். வெட்டிய செடிகளை ஆறாம் ஆண்டு மாணவர்கள் ஒரு வெளியான இடத்திற் குவித்தனர். எட்டாம் ஆண்டு மாணவர்கள் அடிக்கட்டைகளைக் கிண்டி அகற்றினர். அங்கே ஓர் இடத்தில் ஒரு புற்று இருந்தது. மாணவர்கள் அந்தப் புற்றை வெட்டினார்கள். புற்றிலிருந்து பாம்பொன்று சீறிக்கொண்டு வந்தது. கோவிந்தனுங் குமரனும் மண்வெட்டிகளைப் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். ஆதவன் ''பாம்பு பாம்பு'' என்று கத்தினான். எல்லோரும் தங்கள் வேலையை விட்டுவிட்டு ஓடி வந்தார்கள்; பாம்பைக் கலைத்து அடித்தார்கள். பின்னர், முன்பு செய்த வேலையைத் தொடர்ந்து செய்தனர்.

நேரம் பதினொரு மணி ஆகிவிட்டது. அப்போது ''தேநீர் தயாராகிவிட்டது'' என்று பெண் பிள்ளைகள் அறிவித்தார்கள். உடனே எல்லோரும் வேலையை நிறுத்தினார்கள். எல்லோருக்குந் தேநீர் வழங்கப்பட்டது; தேநீரைப் பருகிப் பருகிச் சிறிது நேரம் ஆறினர். களை தீர்ந்த பின் திரும்பவும் வேலையைத் தொடங்கினர்.

காடாய்க் கிடந்த இடம் சிறிது நேரத்தில் வெட்டை வெளியாய்த் தோற்றமளித்தது. நாலாம் வருட மாண வர் சிலர் கற்கள், கலவோடுகள், பீங்கான் துண்டுகள் போன்றவற்றைப் பொறுக்கி ஒரு மூலையிலே குவித்த னர். மைதானம் சுத்தமாயிற்று.

ஆனால், மைதானத்தில் ஒரு மூலையில் ஒரு தென்னைமரம் நின்றது. ஒன்பதாம் வருட மாணவர் அதை வெட்ட ஆயத்தஞ்செய்தனர். அப்பொழுது உப அதிபர் ''சாப்பாட்டுக்கு நேரமாகிவிட்டது. சமைய லும் முடிந்துவிட்டது. சாப்பிட்ட பின் அதை வெட்டுவோம்'' என்றார். எல்லோரும் கைகால் கழு விக்கொண்டு பாடசாலைக்குட் சென்றனர். அங்கு அவர்களுக்குச் சாப்பாடு பரிமாறப்பட்டது.

சாப்பாடு முடிந்த பின் சிறிது நேரம் ஆறினர். ஆறிய பின், மரத்தை வெட்ட ஆயத்தப்படுத்தினர். ''மரத்துக்குக் கயிறு போட்டால் நல்லது'' என்று காந்தன் கூறினான். வரதன் ஒரு வடக் கயிற்றைக் கொண்டுவந்தான். குணாளன் மரத்தில் ஏறினான்; கயிற்றைக் கட்டிவிட்டு இறங்கினான். கயிற்றின் மறு நுனியைத் தூரத்தில் நின்ற ஒரு பனையின் அடியிலே வரதன் கட்டினான். பின்னர், மணாளனும் முகுந்த னும் ஆறுமுகமும் தென்னைமரத்தின் அடியைச் சுற்றி அதர் வெட்டினார்கள். வெட்ட, வெட்ட வேர்கள் வந்தன. அவற்றைக் காந்தன் கத்தியால் அறுத் தறுத்துவிட்டான். மணாளனும் ஆறுமுகமும் அந்த வேர்களையும் மண்ணையும் மண்வெட்டியாற் கோலி வெளியே போட்டனர். ஆழமாக வெட்டிய பின் மரத்தின் அடியைக் கோடரியாலே தறித்தனர். அதன் பின் எல்லோருஞ் சேர்ந்து கயிற்றைப் பிடித்து இழுத் துப் பார்த்தார்கள். மரம் சற்றே அசைந்துகொடுத் தது.



படம் 2. சிரமதான முறையிலே காணியைச் சுத்தஞ் செய்தல்.

"இன்னுங் கொஞ்சந் தறித்தால் மரம் விழும்" என்றான் முகுந்தன். அவ்வாறு தறித்த பின் கயிற்றை இழுப்பதற்காக எல்லோரும் போனார்கள். "மரஞ் சரியத் தொடங்க, கயிற்றை விட்டுவிட்டுத் தூரத்துக்கு ஓடிவிட வேண்டும்" என்று ஆசிரியர் எச்சரிக்கை செய்தார்.

பின்னர் எல்லோரும் ஒத்தபடி கயிற்றிற் பிடித்து "ஓஓ...!" என்று சத்தமிட்டபடி இழுத்தார்கள். மரஞ் சரிந்து விழுந்தது. விழுந்த மரத்தின் ஓலைகளைச் சிலர் வெட்டினர்; பின் வட்டை வெட்டிக் குருத்தை எடுத்தனர்; குரும்பைகளை வெட்டி இளநீர் குடித்தனர்; மரத்தைத் துண்டு போட்டனர்; வேறு சிலர் துண்டு

களை உருட்டிக் கொண்டுபோய் வேலியோரமாய் ஒதுக்கி விட்டனர்; அடி மரத்தை அகற்றிய பின் கிடங்கை நிரவினர். அங்கு காணப்பட்ட இலைகுழை களை எல்லாங் கூட்டிக் குப்பையுடன் சேர்த்தனர். குப்பைக்கு நெருப்பு வைத்தனர். குப்பை பெருஞ் சுவாலையுடன் எரியத் தொடங்கியது.

''கெட்டிக்காரப் பிள்ளைகள்; செலவில்லாமலே விளையாட்டு மைதானம் ஆக்கிவிட்டீர்கள். திங்கட் கிழமை தொடக்கம் இந்த மைதானத்தில் நீங்கள் விளையாடலாம். விளையாட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கித் தருவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்றார் அதிபர்.

## வினாக்கள்

I. 1. விளையாட்டு மைதானத்துக்கான காணி வாங்கப் பணம் எப்படிக் கிடைத்தது?

2. வாங்கிய காணியைப் பணமின்றித் திருத்தி யமைக்க நல்ல யோசனை கூறியது யார்?

3. நாலாம் வருட மாணவர்கள் செய்த வேலை என்ன? எட்டாம் வருட மாணவர்கள் செய்த வேலை என்ன?

4. தென்னை மரத்தை வெட்டி வீழ்த்துவதிற் பங்கு பற்றிய மாணவர்கள் யாவர்?

5. விளையாட்டு மைதானம் யார் முயற்சியாலே பிறந்தது?

II. பின்வருஞ் சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைக்குக.

அ. சிரமதானம்
ஆ. ஒத்துழைப்பு
இ. வணக்கம்
ஈ. சலாம்
உ. மைதானம்

5

# தேசிய விளையாட்டு விழா

இளம் விவசாயிகள் கழகம் புத்தாண்டுத் தினத்திற்காகத் தேசிய விளையாட்டு விழா ஒன்றை ஒழுங்கு செய்தது. அதற்காகக் கழக விளையாட்டு மைதானம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. மைதானத்தின் நடுவிலே இரு பெரிய கம்பங்களிலே தேசியக்கொடியும் கழகக் கொடியும் பறந்துகொண்டிருந்தன. இன்னிசைப் பாடல்கள் ஒலிபெருக்கியில் ஒலித்துக்கொண்டிருந்தன. மக்கள் அனைவரும் இரண்டு மணிக்கே அங்கு வந்து சேர்ந்தனர். மனோகரனும் வந்து சேர்ந்தான்.

தேசிய கீதத்தையும் கழகக் கீதத்தையும் கழக உறுப்பினர் பாடினர். ஊராட்சி மன்றத் தலைவர் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். சூரியன் இல்லம், சந்திரன் இல்லம் ஆகிய இரண்டு இல்லங்களின் விளையாட்டு வீரர்களும் தம் இல்லக் கொடிகளுடன் அணிவகுத்துச் சென்றனர். விளையாட்டுப் போட்டிகள் வெவ்வேறு இடங்களிலே நடைபெற்றன. மனோகரனும் தந்தையாரும் கிளித்தட்டு விளையாட்டு நடைபெறும் இடத்துக்கு முதலிலே சென்றனர்.

அங்கு அவ்விளையாட்டுக்கென குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகள் வரையப்பட்டிருந்தன. சூரிய இல்லத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் குறுக்குக் கோடுகளில் நின்றனர். அவர்களின் தலைவர் நடுக் கோட்டில் நின்றார். அவரைக் காட்டி, 'அவர்தான்



படம் 3. கிளித்தட்டு விளையாட்டு.

கிளி' என்று மனோகரனின் தந்தை கூறினார். மறு பிரிவினர் முதற் கோட்டிற்கு வெளியே நின்றனர். ஒவ்வொரு வீரரும் தத்தம் இல்லங்களுக்குரிய அடையாளங்களை அணிந்திருந்தனர். நடுவர்கள் இரு புறத்தும் நின்றனர்.

நடுவர் தலைவர் ஊதியை (ஊதுகுழலை) ஊதியதும் வெளியே நின்ற வீரர்கள் துள்ளிக் குதித்துக் கிளிக் கோட்டுள் நுழைந்தனர். கோடுகளில் நின்றவர்கள் இவர்களைத் தடுத்து நிறுத்தினர். தடுக்கப்பட்டவர்கள் அங்குமிங்கும் ஓடியும் உதைத்தும் குதித்தும் அப்பாற் செல்ல முயன்றனர்.

அவர்களுள் ஒருவன் மறித்தவனை 'உச்சிக்' கொண்டு எதிர்ப்பக்கம் பாய்ந்தான். மறித்தவன், அவனைத் தொட்டு 'அடி! அடி!' என்று கத்தினான். நடுவர் 'அடி சரி' என்று தீர்ப்புக் கூறினார். 'சூரியன்' இல்லத்தைச் சேர்ந்தவர்கள் கைதட்டி ஆரவாரஞ் செய்தனர்.

அடுத்து, சந்திரன் இல்லத்தினர் மறிக்க, சூரியன் இல்லத்தினர் புகுந்தனர். சிலர் தடைகளைக் கடந்து அப்பாற் சென்று 'பழம்' ஆயினர். பழமானவர்கள் திரும்பி நுழைந்தனர். விளையாட்டில் விறுவிறுப்பு உண்டாயிற்று. மனோகரன் வைத்த கண் வாங்காமற் பார்த்துக் கொண்டு நின்றான்.

திடீரென்று "காயும் பழமும்; காயும் பழமும்" என்று, மறித்தவர்கள் கூக்குரலிட்டனர்.

அப்பொழுது மனோகரன் "காய் என்றால் என்ன? பழம் என்றால் என்ன?" என்று தந்தையைக் கேட்டான்.

அதற்குத் தந்தை "முன்புறமிருந்து பின்புறம் செல்வோர் காய், பின்புறமிருந்து முன்னோக்கி வருவோர் பழம். உட்கோடொன்றில் இவ்விரு பிரிவினரும் கலந்தால், காயும் பழமும். அப்படிக் கலத்தல் கூடாது. பழமானவனில் ஒருவன் கிளியைத் தாண்டி முன்புறமாக வெளியேறிவிட்டால் அவனுடைய கட்சிக்கு ஒரு வெற்றி" என்று விளக்கிக் கூறினார்.

இன்னுமோர் இடத்திலிருந்து பெரிய ஆரவார ஒலி எழுந்தது. மனோகரன் தந்தையையும் கூட்டிக் கொண்டு அவ்விடத்துக்குச் சென்றான். அங்கே கிட்டிப் புள் அடித்துக் கொண்டு நின்றனர். சூரியன் இல்லத்தைச் சேர்ந்த ஒருவன் புள்ளைக் குழியில் வைத்துக் கிட்டியால் எற்றினான். சந்திரன் இல்லத்தார் பரந்து நின்று புள்ளைப்பிடிக்க முயன்றனர். பிடிக்க முடியவில்லை. எற்றியவன் கிட்டியைக் குழிக்குக் குறுக்கே வைத்தான். சந்திரன் இல்லத்தான் ஒருவன் புள்ளை எடுத்து அது விழுந்த இடத்தில் நின்றவாறே கிட்டியை நோக்கி எறிந்தான். ஆனால், புள் கிட்டியிற் படவில்லை. கிட்டிக்காரன் புள்ளைக்கையிற் பிடித்து

அடித்தான். புள் 'விர்' ரென்று பறந்து வெகுதூரத்தில் விழுந்தது. அதை ஒருவன் எடுத்துக் குழியை நோக்கி எறிந்தான். கிட்டிக்காரன் அந்தரத்தில் மறித்து அடித்தான். அது குழியிலிருந்து சிறிது தூரத்தில் விழுந்தது. கிட்டிக்காரன் குழியிலிருந்து புள் கிடந்த இடம் வரையுமுள்ள தூரத்தைக் கிட்டியால் அளந்தான். ''ஏழு!'' என்று சூரியன் இல்லத்தார் கத்தினர். அவன் புள்ளை இரு விரல்களின் மேல் வைத்து எற்றி அடித்தான். அது 'விண்' கூவிக் கொண்டு பறந்தது. ஆனால், சந்திர இல்லத்தாருள் ஒருவன் ஓடிச் சென்று பாய்ந்து பிடித்து விட்டான். ''பட்டான், பட்டான்'' என்று ஆரவாரித்தனர் சந்திரன் இல்லத்தார். இன்னும் ஒருவன் கிட்டியை எடுத்து ஆட வந்தான்.

''பார்த்தாயா, இதுதான் எங்கள் நாட்டுக் கிறிக்கெற் விளையாட்டு'' என்று மனோகரனின் தந்தை மகனுக்குக் கூறினார்.

அப்பொழுது மனோகரன்,

''ஆலையிலே சோலையிலே
ஆலம் பாடிய சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்க பாலாறு
பாலாறு ..... பாலாறு....
பாலாறு .... பாலாறு ....''

என்று பாடினான்.

தந்தையும் மகனும் அப்பாற் சென்றனர். அங்கு வாரோட்டம் நடந்து கொண்டிருந்தது. ஒவ்வோர் இல்லத்திலிருந்தும் பத்துப் பத்துப் பேர் பங்கு பற்றினர் அவர்கள் நூறு யார் தூரத்தில், எதிரும் புதிரு

மாகத் தத்தம் வரைகோட்டில் நின்றனர். சூரியன் இல்லத்தவன் ஒருவன், சந்திரன் இல்லத்தவன் ஒருவனுக்குக் 'கை கொடுத்தலு'டன் விளையாட்டு ஆரம்பமாயிற்று. கைகொடுத்தவன் சிட்டாய்ப் பறந்தான். மற்றவன் துரத்தித் தொடர்ந்தான். சூரியன் இல்லத்தான் வரை கோட்டை அடைந்ததும் அவனுக்குப் பக்கத்தில் நின்றவன், சந்திரன் இல்லத்தானைத் துரத்திக்கொண்டு ஓடினான். இடைவழியில் அவனைத் தொட்டான். உடனே "பட்டான், பட்டான்" என்று பார்வையாளர் சத்தமிட்டனர். சூரியன் இல்லத்தார் அவனை ஆரவாரத்தோடு பிடித்துச் சென்று மறியல் வைத்தனர். அவனை மீட்பதற்குச் சந்திரன் இல்லத்தார் முயன்றனர். விளையாட்டுத் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

இன்னொரு புறத்தில் 'போரடி' நடந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு பக்கத்திலும் நூற்றுக் கணக்கான தேங்காய்கள் குவிக்கப்பட்டிருந்தன. தேங்காய்கள் 'பட் பட்' என்று உடையும் சத்தம் எழுந்து கொண்டிருந்தது.

இந்தப் போட்டியிலே பங்குபற்றாத சிறுவர் சிலர் தூரத்திலே கெந்தியடித்தல், பசுவும் புலியும், கொழுத்த ஆடு பிடித்தல், ஊஞ்சலாடல், கோலாட்டம், கும்மி, கழங்கு, கொம்பு முறித்தல் முதலிய விளையாட்டுகளை ஆடி மகிழ்ந்தனர்.

"இவைகளைப் பார்த்தது போதும். வண்டிச் சவாரி தொடங்கப்போகிறது. வா அங்கே போவோம்" என்று தந்தையார் மனோகரனைக் கூப்பிட்டார். இருவரும் வண்டிச் சவாரி நடைபெறும் இடத்துக்குப் போயினர். அங்கே ஆறு வண்டிகள் வரிசையில் ஆயத்தமாய் நின்றன. வண்டியிற் பூட்டப்பட்ட காளைகள் ஓடத் துடித்

துக்கொண்டு நின்றன. வண்டிக்காரர் நாணயக் கயிற்றை இழுத்துப் பிடித்திருந்தார். கொடி காட்டியவுடன் காளைகள் வாலைக் கிளப்பிக்கொண்டு அம்பு போற் பாய்ந்தன. பார்வையாளர் கைதட்டி ஆரவாரஞ் செய்தனர்.

''கழுகன் சோடிக்கு வெற்றி, கழுகன் சோடிக்கு வெற்றி'' என்ற ஒலி வானைப் பிளந்தது.

''வண்டிச் சவாரியும் முடிந்தது. இனி வீட்டுக்குப் போவோம் வா!'' என்றார் தந்தை.

புத்தாண்டு விழாவின் இனிய நினைவுகளோடு மனோகரன் வீடு சென்றான்.

## வினாக்கள்

I
1. புத்தாண்டு தினத்திற்காகத் தேசிய விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கு செய்தவர் யாவர்?
2. தேசிய விளையாட்டுகள் ஐந்து கூறுக.
3. புத்தாண்டுக்காக விளையாட்டு மைதானம் எவ்வாறு அலங்கரிக்கப்பட்டிருந்தது?
4. 'நம் நாட்டுக் 'கிறிக்கெற்' என்பது யாது? இவ்வாறு யார் யாருக்குக் கூறினார்?
5. விளக்குக:-
   உச்சுதல், காயும் பழமும், ப்ட்டான், நடுவர்.

II பின்வருஞ் சொற்றொடர்களை வைத்து வாக்கியம் அமைக்குக:-

1. குறுக்கும் நெடுக்கும்
2. [illegible]திரும் புதிரும்
3. அங்கும் இங்கும்
4. பத்துப் பத்து
5. சீருஞ் சிறப்பும்

6

# அம்மா நான் விளையாடப் போறேன்

அம்மா நான் விளையாடப் போறேன்— கையில்
அன்புடன் பட்சணம் தந்தனுப் பென்னை
சும்மா நான் உட்கார மாட்டேன்— நல்ல
தோழர் அழைக்கின்றார் நாழிகை ஆச்சு.

பூப்பறித் தாடுவோம் கொஞ்சம்— சாமி
பூசைசெய் தாடுவோம் பூரதம் கட்டி
வேப்ப மரத்தடி மண்ணில்—சிறு
வீடுகள் கட்டி விருந்துகள் செய்வோம்.



படம் 4. பாட்டுக் கச்சேரி.

பாட்டுக்கச் சேரிகள் செய்வோம்— நான்
பாடுவேன் மத்தளம் போடுவான் கிட்டு
கேட்டுச் ''சபாஷ்'' எனச் சொல்வார்—பின்பு
கிண்கிணி கட்டி நடனங்கள் செய்வோம்.



படம் 5. நாடகம்.

வேட்டிக ளால்திரை கட்டிப்—பல
வேடங்கள் போட்டொரு நாடக மாடிக்
காட்டுவோம் பாரதக் காட்சி—நான்
கண்ணனின் சொற்படி காண்டீப னாவேன்.

அம்மா நான் விளையாடப் போறேன்—கையில்
அன்புடன் பட்சணம் தந்தனுப் பென்னை
சும்மா நான் உட்கார மாட்டேன்—நல்ல
தோழர் அழைக்கின்றார் நாழிகை ஆச்சு.

சுத்தானந்த பாரதியார்

### விளக்கக் குறிப்புகள்

பட்சணம்— சிற்றுண்டி; உட்கார்தல்— இருத்தல்;
அழைக்கின்றார்—கூப்பிடுகின்றார்; நாழிகை—நேரம்;
பறித்தல் — பிடுங்குதல்; இரதம் — தேர்;
விருந்து செய்தல் — புதியவர்களுக்கு உணவு கொடுத்தல்; கிண்கிணி—கால் சதங்கை;

* பூரதம் - பூந்தேர்

வினாக்கள்

1. இங்கு கூறப்பட்ட விளையாட்டுக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

2. பாரதக் கதையில் இடம் பெறுவதாகக் குறிப்பிடப்படும் இரு கதாபாத்திரங்களும் எவை?

3. விளையாட்டு வீடுகளை எங்கே கட்டினர்?

4. இப்பாடலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள பிள்ளைகளின் இயல்புகள் எவை?

5. பாரதக் காட்சியை நடிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள் எவை?

7

## உணவு அறிந்து உண்


பொழுது மாலையாகிவிட்டது. பனையடி விளையாட்டுத் திடலிலே கைப்பந்தாட்டம் தொடங்கிவிட்டது. மோகனின் மாமனார் மயில்வாகனன், கட்டிலிலே சோம்பலுடன் படுத்திருந்தார்.

''மாமா, விளையாட்டுத் தொடங்கி விட்டதே! போகவில்லையா? என்று மோகன் கேட்டான்.

''எனக்கு ஒரே சோம்பலாயிருக்கிறது. எழுந்து நடக்க முடியவில்லை. அந்தத் தண்ணீர்க் குவளையை எடுத்துத் தா'' என்று மயில்வாகனன் அனுங்கிக் கொண்டு சொன்னார்.

''தண்ணீர்க் குவளை கட்டிலின் கீழேதான் இருக்கிறது. அதைக் கூட எழுந்து எடுக்க அலுப்பாக இருக்கிறதா?'' என்று கூறி, மோகன் சிரித்தான். அதை எடுத்துக் கொடுத்தான்.

அப்போது ஆசிரியர் ஞானமூர்த்தி அவ்விடத்தை அடைந்தார். ''வணக்கம் வாருங்கள்'' என்று கூறி மோகனும் மாமனாரும் ஆசிரியரை அன்புடன் வரவேற்றார்கள். ஆசிரியரும் ''வணக்கம்'' என்று கூறிக் கொண்டு கதிரையில் அமர்ந்தார்.



படம் 6. ஆசிரியரை அன்புடன் வரவேற்றார்கள்.

''மாலைப்பொழுது மகிழ்ச்சிக்குரியது. உற்சாகமாக விளையாட வேண்டிய நேரத்திலே என்ன படுக்கை?'' என்று ஆசிரியர் ஞானமூர்த்தி மயில்வாகனனைப் பார்த்துக் கேட்டார்.

''கடந்த மாதம் வெளியூர் சென்றிருந்தேன்; சத்துள்ள உணவுகளைச் சாப்பிட முடியாமற் போய்விட்டது; பசித்தபொழுது பாணைச் சாப்பிட்டு வெறுந் தேநீரைக் குடித்துக்கொண்டு திரிந்தேன். அதனால்,

உடம்பு மெலிந்துவிட்டது; உற்சாகம் குன்றிவிட்டது'' என்று மயில்வாகனன் சொன்னார்.

''ஓ, அப்படியானால் இனி நீங்கள் சத்துள்ள உணவுகளைச் சாப்பிட வேண்டியது தானே'' என்று ஆசிரியர் சொன்னார்.

''சத்துள்ள உணவு என்றால் என்ன?'' என்று மோகன் ஆவலுடன் கேட்டான்.

''எமது உடலைப் பாதுகாக்க வேண்டும். அதனை வளர்க்க வேண்டும். எமக்கு வரும் நோய்களை எதிர்க்க வேண்டும். உடலை நன்கு இயங்கச் செய்ய வேண்டும். இவற்றுக்காக நல்ல நல்ல உணவுகளை உண்ண வேண்டும். அவையே சத்துள்ள உணவுகள்'' என்று ஆசிரியர் கூறினார்.

''உனக்குப் பிடித்த உணவு யாது?'' என்று ஆசிரியர் மோகனைப் பார்த்துக் கேட்டார்.

''ஐஸ் பழம்'' என்றான் மோகன். மாமா விழுந்து விழுந்து சிரித்தார்.

''ஐஸ் பழம் மட்டும் சாப்பிட்டாற் போதாது. சோறு, காய்கறி, கீரை, பருப்பு, இறைச்சி, முட்டை, மீன், பழம் முதலியவற்றைச் சாப்பிட வேண்டும். அவை சத்து மிக்க உணவுகள்'' என்றார் ஆசிரியர்.

''கேட்டாயா, மோகன்? ஆசிரியர் சொன்னதைக் கேட்டாயா? வெண்டிக்காய் பிடிக்காது; மீன் சுவைக்காது; உருளைக்கிழங்கு உவப்பில்லை' என்று இனிமேல் ஒதுக்காமல் எல்லாவற்றையும் சாப்பிட வேண்டும்'' என்று மோகனின் மாமனார் சொன்னார்.

''சிலர் சோற்றை மட்டும் அதிகம் உண்கிறார்களே! அதனால் நன்மை உண்டா?'' என்று மோகன் கேட்டான்.

''அரிசி, கோதுமை, குரக்கன், சாமை முதலிய தானியங்களில் மாச் சத்து அதிகம் உண்டு. வேலை செய்வதற்கு வேண்டிய சக்தியை மாச் சத்துத் தருகின்றது. கடுமையாக வேலை செய்பவர்கள் மாச் சத்துள்ள உணவுகளை அதிகமாக உண்ண வேண்டும். அத்துடன் வேறு சத்துள்ள உணவுகளையுஞ் சேர்த்துக் கொள்ள வேண்டும்'' என்று ஆசிரியர் விளக்கினார்.

''வர வர மெலிந்து போகிறாய். கொஞ்சமாவது கொழுக்க வேண்டாமா? என்று அம்மா அடிக்கடி கேட்பார். கொழுப்பதற்கு என்ன உணவுகளை உண்ண வேண்டும்?'' என்று மோகன் கேட்டான்.

''அதற்குக் கொழுப்புச் சத்துள்ள உணவுகளை அதிகம் உண்ண வேண்டும். எண்ணெய், நெய், வெண்ணெய், பாலாடை, இறைச்சி முதலிய உணவுகளிலே கொழுப்புச் சத்து அதிகம் உண்டு'' என்று ஆசிரியர் ஞானமூர்த்தி சொன்னார்.

''பாலாடை'' என்றதும் மோகனுடைய நாவிலே நீர் சுரந்தது. அவனுடைய தாய் பால் காய்ச்சுவாள். அப்பொழுது பாலின்மீது திரைபோற் பாலாடை படரும். அவன் கரண்டியினாலே பாலாடையினை வாரித் தின்று சுவைத்திருக்கிறான். அந்த நினைவு வந்ததும் அவன் அடுப்படிக்கு ஓடினான்.

சிறிது நேரம் கழிந்தது. ஆசிரியரும் மாமாவும் உண்பதற்கு, மோகன் வாழைப்பழம் கொண்டு வந்தான். அது அவன் வீட்டுத் தோட்டத்திலே முற்றிப்

பழுத்த கப்பல் வாழைப்பழம். எல்லாரும் பருகுதற்குக் கிண்ணங்களிலே பாலை ஏந்திய வண்ணம் மோகனின் தாய் வந்தாள்.

பாலைப் பருகிய மயில்வாகனன் ''சூடான பாலைப் பருகும்பொழுது உற்சாகம் பிறக்கிறது'' என்று சொன்னார்.

''பாலும், முட்டையும் நாங்கள் தினமும் சாப்பிட வேண்டும். நாம் உண்ணும் உணவிலே ஏதேனும் சத்துக் குறைவாக இருந்தால் அதனைப் பாலும் முட்டையும் நிறைவு செய்துவிடுகின்றன'' என்றார் ஆசிரியர்.

''அந்த உண்மை எமது ஊரிலுள்ள விவசாயிகளுக்கு நன்கு தெரியும். அதனை அறிந்துதான் கமக்காரர், பசுவும் கோழியும் வளர்க்கிறார்கள்'' என்று மோகனின் தாய் கூறினாள்.

அப்பொழுது ''கற முற'' என்ற சத்தம் பிறந்தது. மாடொன்று வேலியைப் பிரித்துக்கொண்டு கீரைப் பாத்திக்குள்ளே போனது. மோகனின் தாய் மாட்டைப் பிடித்துக் கட்டுவதற்கு ஓடினாள்.

''கீரை, பொன்னாங்காணி, வல்லாரை, முதலியவற்றை நான் விரும்பிச் சாப்பிடுவேன். நான் நட்ட கீரைகள் பாத்திகளிலே நன்றாக வளர்ந்திருக்கின்றன'' என்று மோகன் ஆசிரியரைப் பார்த்துச் சொன்னான்.

''கீரைகளில் இரும்புச் சத்து நிரம்பவுண்டு. அவை எமது உடலுக்கு உறுதி தரும்'' என்று கூறிய ஆசிரியர், ''உங்கள் வீட்டுத் தோட்டத்திலே வேறென்ன பயிர்கள் வளருகின்றன?'' என்று கேட்டார்.

''துவரை, சோயா அவரை முதலியன செழித்து வளர்ந்துள்ளன'' என்று மோகன் சொன்னான்.

''பருப்பு வகைகள் வாய்க்குச் சுவையாக இருப்பதுடன், உடலுக்கு நன்மையும் பயக்கின்றன'' என்றார் ஆசிரியர்.

மாலை மங்கி இருள் கவிந்தது. மோகனின் தாய் அறையுள் விளக்கேற்றினாள். நேரமாகிறது; நான் போய் வருகிறேன்'' என்று கூறி ஆசிரியர் விடை பெற்றார்.

## வினாக்கள்

I.
1. மயில்வாகனனுக்கு ஏன் சோம்பல் ஏற்பட்டது
2. சத்துள்ள உணவு என்றால் என்ன?
3. கொழுப்புச் சத்துள்ள உணவுகள் யாவை?
4. ஊரிலுள்ள விவசாயிகளுக்குத் தெரிந்த உண்மை யாது?
5. மோகனின் வீட்டுத் தோட்டத்திலே வளர்ந்த பயிர்கள் யாவை?

II. (அ) பின்வருவனவற்றிற்கு எதிர்ப்பால் உள்ள சொற்களைத் தருக.

1. ஆசிரியன் 2. உழத்தி
3. கணவன் 4. தோழி
5. பெருமான்

(ஆ) பின்வருவனவற்றை வைத்து வாக்கியம் அமையுங்கள்

1. சல சல 2. கற முற
3. கலீர் கலீர் 4. கட கட
5. மள மள

## மொழிப் பயிற்சி I

அ. பொருத்தமான சொற்களை வைத்து வாக்கியங்களை நிறைவு செய்க.

உதாரணம்: கண்மணி <u>எழுந்தாள்.</u>

1. மோகன் ..........................
2. பசு ..........................
3. பறவைகள் ..........................
4. பாட்டனார் ..........................
5. நாங்கள் ..........................
6. அது ..........................
7. அவர்கள் ..........................
8. அவை ..........................
9. நீங்கள் ..........................
10. நீ ..........................
11. நான் ..........................
12. அன்னம்மா ..........................
13. வண்டிகள் ..........................
14. அமீன் ..........................
15. சிறுவர் ..........................

ஆ. பொருத்தமான முடிக்குஞ் சொற்களை வைத்து வாக்கியங்களை ஆக்குக.

1. கோயில் மணி ..........................
2. பெருங் காற்று ..........................
3. தாய் நிறைகுடம் ..........................
4. தாயும் மகளும் ..........................

5. தந்தையும் தாயும் மகளும் கோவிலுக்குச்.........

6. நீங்கள் எடுத்துக் ................

7. நீயே தண்ணீரை எடுத்துக் ..............

8. கழக உறுப்பினர் தேசிய கீதத்தைப் .........

9. நான் விளையாடப் ...............

10. சிறுவர் சிறுமியர் வேப்ப மர நிழலில் ஊஞ்சலாடி ..............

இ. பொருத்தமான சொற்களை அமைத்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

உதாரணம்: மனோகரன் அவ்விடத்திற்குச் சென்றான்.

1. ..................கேட்டான்.

2. ...................உதித்தது.

3. ...................பிறக்கும்.

4. ...................பாட்டுப் பாடினர்.

5. ...................சரிந்து விழுந்தது.

6. .............. தண்ணீரை எடுத்துக் குடித்தனர்.

7. ...................வெவ்வேறு இடங்களில் நடைபெற்றன.

8. ...................பள்ளிவாசல் வெளி விறாந்தையில் இருந்தார்கள்.

9. இலங்கையிலே ......... வாழ்கிறார்கள்.

10. .................. பின்னேரம் விழாவுக்கு வருவேன்.

11. ................ கடவுளை ஒருபோதும் மறவாதே.

ஈ. வாக்கியமாக ஒழுங்குபடுத்துக.

உதாரணம்: தந்தையையும், கண்மணி, தாயையும் எழுந்தாள், பணிந்து.

கண்மணி தந்தையையும் தாயையும் பணிந்து எழுந்தாள்.

1. வெளியூர், சென்றிருந்தேன், நான், கடந்த மாதம்.

2. கண்மணி, படித்தாள், ஒரு பாடம், தன் பாடப் புத்தகத்திலிருந்து.

3. பட்டுப் பாவாடையும், வாங்கியிருந்தார், கண் மணிக்கு, தந்தை, அவள், சட்டையும்.

4. வீடு திரும்பினர், செய்துகொண்டு, வழிபாடு, கோயிலில், அவர்கள், மூவரும்.

5. மனோகரன், நின்றான், பார்த்துக்கொண்டு, வைத்தகண், வாங்காமல்.

உ. பின்வரும் விடைகளுக்கேற்ற வினாக்களைத் தெரிவு செய்க.

விடைகள்

1. வெண்ணெய், பாலாடை, இறைச்சி முதலிய உணவுகளிலே கொழுப்புச் சத்து அதிகம்.

2. தமிழரில் ஆண்கள் வேட்டி உடுத்து, நீளமான சட்டை தரித்துச் சால்வை அணிகின்றனர்.

3. எம். சி. அப்துல்காதர் இலங்கையின் முதலாவது முஸ்லிம் நியாயவாதி.

4. நியாயவாதிகள் நீதிமன்றத்திலே துருக்கித் தொப்பி அணியக் கூடாது என்று உயர் நீதி மன்றம் முடிவு செய்தது.

5. சிங்களவரின் வழக்கப்படி வருடப் பிறப்புப் புண்ணிய காலத்தில் எந்த வேலையையும் செய்யமாட்டார்கள்.

வினாக்கள்

1. இலங்கையின் முதலாவது முஸ்லிம் நியாய வாதி யார்?

2. சிங்களவரின் வழக்கப்படி வருடப் பிறப்புப் புண்ணிய காலத்தில் வேலை செய்வார்களா?

3. நியாயவாதிகள் நீதிமன்றத்திலே துருக்கித் தொப்பி அணியலாமா என்பது பற்றி உயர் நீதிமன்றம் என்ன முடிவு செய்தது?

4. கொழுப்புச் சத்து அதிகம் உள்ள உணவுகள் எவை?

5. தமிழரில் ஆண்கள் எவ்வாறான உடை அணி கின்றனர்?

ஊ. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற் களை எழுதுக.

1. சூரியன் ..................................
2. தாய் ..................................
3. தந்தை ..................................
4. சாப்பாடு ..................................
5. மகிழ்ச்சி ..................................
6. ஏர் ..................................
7. உடை ..................................

8. தோழர் ........................

9. நாடு ........................

10. கை........................

11. சென்றனர் ....................

11. ஆரம்பமாயிற்று ...............

13. சொன்னார் ....................

14. தொடங்கினார் .................

15. தீர்மானித்தனர் ...............

எ. பின்வரும் சொற்களுக்கு எதிர்க் கருத்துள்ள சொற்களை இரண்டாவது தொகுதியிலிருந்து தெரிக.

| | | |
|---|---|---|
| 1. | பொய் | அழுதாள் |
| 2. | சுறுசுறுப்பு | விரைவாக |
| 3. | மெல்ல | சோம்பல் |
| 4. | சிரித்தாள் | இல்லை |
| 5. | உதித்தான் | மறைந்தான் |
| 6. | காலை | அநாகரிகம் |
| 7. | உண்டு | மாலை |
| 8. | நாகரிகம் | தீமை |
| 9. | நன்மை | வேற்றுமை |
| 10. | ஒற்றுமை | மெய் |

ஏ. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

உதாரணம: பலா + பழம் = பலாப்பழம்.

1. வெண்டி + காய் =
2. உருளை + கிழக்கு =
3. கத்தரி + காய் =
4. வாழை + பழம் =

5. பட்டு + துண்டு =

6. புத்தாண்டு + தினம் =

7. இரும்பு + சத்து =

8. நெசவு + கலை =

9. கீரை + பாத்தி =

10. பாடி + பாடி =

11. முறுக்கு + சுட்டாள் =

12. அவ்விடத்துக்கு + சென்றான் =

13. வீட்டுக்கு + போனோம் =

14. கதையை + தொடர்ந்தான் =

15. எதிர்ப்பு + தெரிவித்தனர் =

ஐ. பின்வருவன ஒவ்வொன்றையும் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுக.

1. வருடப் பிறப்புக் கொண்டாட்டம்.

2. எனது பாடசாலை.

3. நோயற்ற வாழ்வு.

4. எனது பொழுதுபோக்குகள்.

# 8

## நாங்கள் உடைகள்

நாங்கள் உடைகள். நாகரிகம் அடைந்த இந்தக் காலத்து உடைகள். நாங்கள் உலகத்தின் மூலை முடுக்கெங்கும் பரந்து வாழ்கிறோம். மிருகங்களும் பறவைகளும் எங்களைப் பயன்படுத்துவதில்லை. மனிதனே எங்களை அணிந்து தன்னை அழகுபடுத்துகிறான். அதனால், மனிதன் எங்கெல்லாம் வாழுகிறானோ, அங்கங்கெல்லாம் நாங்களும் வாழுகிறோம். அல்லும் பகலும் அவனோடு ஒட்டி உறவாடி, அவனுக்குச் சேவை செய்கிறோம். சேவை செய்து, அவனையும் மகிழ்வித்து நாங்களும் மகிழ்கிறோம். அதுவே எங்கள் வாழ்க்கை.

எங்கள் குடும்பம் மிகப் பெரியது. எங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் பல பல வகையினர்! பல பல பெயரினர்; வேட்டி, சால்வை, சட்டை, சேலை, சாரம், பாவாடை, காற்சட்டை என்பன அவர்கள் பெயர்களிற் சில. அன்றியும், அவர்கள் பல பல நிறத்தினர்; பல பல வடிவத்தினர். அவர்களிற் பெரும்பாலோர் பருத்திப் புடைவையால் ஆன உடம்பினர். அவர்கள் பெறுமதி குறைந்தவர்கள்; சாதாரண மக்களாலும் வாங்கப்படக் கூடியவர்கள். சாதாரண மக்களுக்குச் சேவை செய்யும் பேறு பெற்றவர்கள்; அதனால், பெருமையிற் கூடியவர்கள். சிலர் கம்பளிப் புடைவை

யால் ஆன உடம்பினர். அவர்களைக் குளிர் மிகுந்த இடங்களிலுள்ள மக்கள் பயன்படுத்துவர். சிலர் பளபளக்கும் பட்டாலும் நைலோனாலும் ஆன உடம்பினர்; பல வண்ணச் சித்திர வேலைப்பாடு கொண்டவர்கள்; கண்ணைக் கவரும் பேரழகு உடையவர்கள்; பெறுமதி கூடியவர்கள்; பெரும்பாலும் செல்வர் வீடுகளிலே குவிந்து கிடப்பவர்கள்.

காலத்துக்குக்காலம் மக்களின் நாகரிகம் மாறுகிறது. மக்கள் தம்மை அலங்காரஞ் செய்வதிற் புதிய புதிய முறைகளைக் காணுகின்றனர். அதனால் எங்கள் குடும்பத்திலே, புதிய புதிய தோற்றத்தோடு புதியவர்கள் பலர் பிறக்கின்றனர். காலத்துக்குப் பொருந்தாத பழையவர்கள் சிலர் மறைகின்றனர். இவ்வாறு நிகழ்வதால் எதிர்காலத்தில் எங்கள் குடும்பம் மிகப் பெரியதாகலாம்.

உலகம் முழுவதும் பரவி வாழும் நாங்கள் நாட்டுக்கு நாடு வேறு வேறு வடிவங்கள் எடுக்கிறோம். ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டு மக்கள் சில் சில வடிவங்கள் கொண்ட எங்களை விரும்பி அணிகின்றனர். எங்களுக்குத் 'தேசிய உடை' என்னும் பெயர் சூட்டிப் பெருமைப்படுகின்றனர்.

இந்தியரில் ஆண்கள் வேட்டியும் சட்டையும் சால்வையும் தலைப்பாகையும் அணிவர். பெண்கள் நீளமான் பல வண்ணச் சேலை உடுப்பர். இங்குக் கூறப்பட்ட எங்களிற் சிலர், இந்தியரின் தேசிய உடையாக விளங்குகிறார்கள். ஆனால், சீனரின் தேசிய உடை வேறு வடிவம் கொண்டது. அவர்களில் ஆண்களும் பெண்களும் நீண்ட ஒரு வகைக் காற்சட்டையும் கழுத்துவரை பூட்டப்படும் ஒரு வகைக் 'கோட்' டும் அணிகின்றனர். யப்பானிலோ ஆண்கள் காற்சட்டை

யும் சேட்டும் அணிய, பெண்கள் 'ஒழி' எனப்படும் எங்களில் ஒரு வகையினரை அணிகின்றனர். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வாழும் ஆண்கள் காற்சட்டையும் சேட்டும் 'கோட்'டும் அணிந்து கழுத்துப் பட்டியும் அணிய, பெண்கள் 'கவுண்' என்னும் ஒருவகைச் சட்டை அணிகின்றனர். மிகுந்த குளிருள்ள இடங்களில் வாழ்வோர் உரோமத்தால் ஆன எங்களில் ஒரு வகையினரை, தலை முதற் கால் வரை அணிவர். நாங்கள் அரேபியாவில் ஒரு வடிவம் எடுப்போம்; பர்மாவில் வேறொரு வடிவம் எடுப்போம்; ஆபிரிக்க நாடுகளில் இன்னொரு வடிவம் எடுப்போம். இவ்வாறு நாங்கள் எடுக்கும் வடிவங்கள் பலப்பல.

நாட்டுக்கு நாடு நாங்கள் வித்தியாசப்படுவது போலவே, ஒரு நாட்டின் பல இன மக்களிடையேயும் நாங்கள் வித்தியாசப்படுகிறோம். இலங்கையிலே தமிழர், சிங்களவர், முஸ்லிம் என மூன்று இன மக்கள் வாழுகிறார்கள். தமிழரில் ஆண்கள் வேட்டி உடுத்து, நீளமான சட்டை தரித்து, சால்வை அணிகின்றனர், சிலர் தலைப்பாகை வைத்துக்கொள்வதும் உண்டு. சிங்களவரில் ஆண்கள் சாரம் உடுத்து, சேட்டும் 'கோட்'டும் அணிகின்றனர். அல்லது, வேட்டியும் சட்டையும் அணிகின்றனர். முஸ்லிம்களில் ஆண்கள் சாரம் உடுத்து, சேட்டும் 'கோட்'டும் அணிகின்றனர்; அல்லது சாரம் உடுத்து, சட்டையும் சால்வையும் அணிகின்றனர். ஆனால், மூன்று இனத்துப் பெண்களுக்கும் இடையே ஓர் ஒற்றுமை உண்டு. அவர்கள் எல்லோரும் சேலையையே பெரும்பாலும் உடுக்கின்றனர்.

இவ்வாறு நாங்கள் பற்பல வடிவம் எடுத்து, நாகரிகம் அடைந்து இக்காலத்தில், உலகெங்கும் உலாவுகிறோம். எனினும், நாங்கள் எங்கள் முன்னோரை மறப்பதுமில்லை; அவர்களை வெறுப்பதுமில்லை,

அவர்கள் தோன்றியிராவிட்டால், இன்று நாங்கள் இவ்வளவு பெரிய குடும்பமாக வளர்ந்திருக்க முடியாதல்லவா?

ஒரு நாள் இளைஞர்களான நாங்கள், வேட்டி என்பவரோடு வெயிலிலே காய்ந்துகொண்டிருந்தோம். வேட்டியார் எங்கள் எல்லோரிலும் வயதில் மூத்தவர். நாங்கள் அவரை நோக்கி, ''எங்கள் முன்னோரில் மிக மூத்தவர் யார்? உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டோம். வேட்டியார் சிரித்துக்கொண்டே கூறினார்.

''எங்கள் முன்னோரில் மிக மூத்தவர் யார் என்றா கேட்டீர்கள்; அவர் பெயர் தோல். அவர் பிறந்த கதை சுவையானது. ஆதி காலத்திலே மிருகங்களைப் போலவே, மக்களும் உடையின்றிக் காட்டில் அலைந்து திரிந்தார்கள். மிருகங்களை வேட்டையாடி, அவற்றின் இறைச்சியை உண்டு சீவித்தார்கள். கூட்டங் கூட்டமாக மலைக் குகைகளிலே ஒதுங்கி வாழ்ந்தார்கள். கொடிய வெயில் சுட்டபோது அவர்கள் துடித்தார்கள். மழைக்காலத்திலும் பனிக் காலத்திலும் கொடிய குளிரால் நடுநடுங்கினார்கள். ஒரு நாள் அவர்களில் ஒருவன் ஒரு பொருளைக் கண்டான். அது ஒரு மிருகத்தின் தோல்; உணவுக்காக இறைச்சியை எடுத்த பின், அவர்களால் எறிந்துவிடப்பட்ட தோல். அது வெயிலில் நன்றாகக் காய்ந்துபோய்க் கிடந்தது. அதனை அவன் எடுத்துப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான்; உள்ளும் புறமும் தடவிப் பார்த்தான். அவனுக்குத் திடீரென ஓர் எண்ணந் தோன்றியது. 'மிருகங்கள் இதைப் போர்த்திருப்பதால் அல்லவா சூட்டாலும் குளிராலும் வருந்தவில்லை; நானும் இதை உடுத்தால் என்ன' என்று எண்ணினான். அந்தத் தோலை உடுத்துக்கொண்டான். அவனுக்கு வெயில் சுடவில்லை; குளிர் விறைக்கவில்லை. அந்த மனிதன் உடுத்தமையால், அத்தோல் உடை எனப் பெயர்

பெற்றது. அன்றுதான் எங்கள் முன்னோரில் மிக மூத்தவர் பிறந்தார். பின்னர் ஆதிகால மனிதர் தோலை உடையாக அணியத் தொடங்கினர்''.

வேட்டியார் கூறிய கதையைக் கேட்டு நாங்கள் ஆச்சரியம் அடைந்தோம். அந்தக் கதையிலிருந்து ஓர் உண்மையை உணர்ந்துகொண்டோம். ஆதிகால மனிதர் சூடு, குளிர் என்பவற்றிலிருந்து தம்மைப் பாது காப்பதற்காகவே எங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். பின்னர் தம் மானத்தைக் காப்பதற்கும் தம்மை அலங்கரிப்பதற்கும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இன்னொரு நாள் வேட்டியாரைப் போலவே, வயதில் மூத்தவரான சால்வையாரைச் சந்தித்தோம். அவர் காற்றிலே படபடத்துக் களிப்புடன் காணப்பட்டார். அப்போது அவரை நோக்கி, ''எங்கள் முன்னோர் பிறந்த கதை தெரியும்; வளர்ந்த கதை தெரியாதே; நாகரிகம் அடைந்த கதை தெரியாதே; சொல்லுவீர்களா?'' எனக் கேட்டோம். அவர் களிப்போடு சொல்லத் தொடங்கினார்.

''காலஞ் செல்லச் செல்ல ஆதி மனிதர் தோல்களைத் தசை நாராலே தைத்து உடுக்க அறிந்து கொண்டனர். அப்போதுதான் தையற் கலை பிறந்தது. எங்கள் முன்னோரும் ஒரு படி முன்னேற்றம் அடைந்தனர். பின்னர், மக்கள் இலைகளையும் தழைகளையும் புற்களையும் மரத்தின் நார்களையும் பின்னி உடையாக அணிந்துகொண்டனர். எங்கள் முன்னோரில் ஒருவரான மரவுரியை இராமனும் சீதையும் உடுத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றதாக இராமன் கதை கூறுகிறது.''

அப்போது பெருங் காற்று வீசியது. சால்வையார் சுழன்றடித்தார். காற்று நின்றதும் கதையைத் தொடர்ந்தார்.

"ஆமாம்; அக்கால மக்கள் இலைகளையும் தழைகளையும் புற்களையும் மர நார்களையும் பின்னுதற்கு அறிந்தார்கள் என்றா சொன்னேன்? அவ்வாறு பின்னத் தெரிந்துகொண்டபோதுதான் நெசவுக் கலை தோன்றியது. நெசவுக் கலை மேலும் வளர்ச்சி அடைந்தது. மிருகங்களின் மென்மையான உரோமத்தைக் கொய்து, திரித்து நூலாக்கினர்; நூலைக் குறுக்கும் நெடுக்குமாக வைத்துப் பின்னி, நெசவு செய்தனர். பருத்திச் செடியின் வெண் பஞ்சை நூலாக்கிப் புடைவை நெய்தனர். ஆரம்பத்தில் அது முரட்டுத்தன்மை உடையதாய் இருந்தது. காலஞ் செல்லச்செல்லச் சீர்திருத்தம் பெற்றது. மென்மையும் அழகும் உடையதாயிற்று. கண்கவர் நிறங்கள் ஊட்டப்பெற்றுக் கவர்ச்சி அடைந்தது. உரோமம், பஞ்சு என்பவற்றினால் மாத்திரமன்றி, பட்டினாலும் புடைவை நெய்ய மனிதன் கற்றுக்கொண்டான். மிக மெல்லிய வண்ண வண்ணப் பட்டுப் புடைவைகள் கண்ணைப் பறித்தன; மனதை மயக்கின. நெசவுக் கலையோடு கூடவே தையற் கலையும் வளர்ந்தது. புடைவையை உடலுக்கு அளவாக வெட்டிப் பொருத்தித் தைக்க மனிதன் அறிந்துகொண்டான். அப்போதுதான் எங்கள் குடும்பத்தில் நாகரிகம் பெற்ற ஒருவன் பிறந்தான். அவன் பெயர் சட்டை. அப்போது அவனுக்குக் கைகள் இல்லை. ஆசியாவிலே பாரசீகம் என்று ஒரு நாடு உண்டு. அந்நாட்டினரே சட்டைக்குக் கைகள் வைத்தனர். காற்சட்டை என்னும் புதியவன் ஒருவனையும் உருவாக்கினர். இன்று இவ்விருவரும் சில சில மாற்றங்கள் பெற்று உலகெங்கும் உலாவுகின்றனர். ஆண்கள் மாத்திரமன்றிப் பெண்கள் பலரும் எங்கள் குடும்பத்திலே தோன்றினர். பல பல வடிவமும் 'னப்பும் பெற்று நடமாடுகின்றனர்.

மனித வாழ்க்கையில் உணவுக்கு அடுத்தபடியாக முக்கிய இடம்பெறுவோர். நாங்களே. உணவு மனிதனின் உடம்பை வளர்க்கிறது; சக்தி அளிக்கிறது; அவனை உயிர் வாழச் செய்கிறது. நாங்களே அவன் உயிர் போலக் கருதும் மானத்தைக் காக்கிறோம். சூட்டாலும் குளிராலும் அவனுக்கு உண்டாகும் துன்பத்தை நீக்குகிறோம். எங்களுக்கு 'ஆடைகள்' என்றும் ஒரு பெயர் உண்டு. ''ஆடை இல்லாதவன் அரை மனிதன்'' என்று ஒரு பழமொழி வழங்கி வருகிறது. அரை மனிதனை முழு மனிதனாக்குவோர் நாங்களே என்று அப்பழமொழி கூறுகிறது. எங்களுக்கு அவ்வளவு சிறப்புண்டு; அதனால் நாங்கள் பெருமை அடைகிறோம்.

## வினாக்கள்

I. 1. இலங்கையில் வாழும் ஒவ்வொரு இன மக்களும் சாதாரணமாக அணியும் உடை என்ன?
2. உடைகளிலே முதன் முதல் தோன்றிய உடை எது?
3. உடைகளின் பயன்கள் மூன்று கூறுக.
4. நெசவுக் கலை எவ்வாறு தோன்றியது?
5. காற்சட்டை, சட்டை என்பவற்றை முதன் முதல் உருவாக்கியவர்கள் யார்?

II. தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிந்து வெற்றிடங்களை நிரப்புங்கள்.

(சூடு, கதையை, ஆச்சரியம், மானத்தை, உண்மையை, அலங்கரிப்பதற்கும், காற்று, பாட்டை, பாதுகாப்பதற்கும்)

நாங்கள் .................. அடைந்தோம். அந்தக் கதையிலிருந்து ஓர் ...................... உணர்ந்து கொண்டோம். ஆதிகால மனிதர் ...................... குளிர் என்பவற்றிலிருந்து தம்மை ................ எங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். பின்னர் தம் ................ காப்பதற்கும், தம்மை ...................... பயன்படுத்தியிருக்கிறார்கள். பின்னர் தம் ...................... காப்பதற்கும், தம்மை ..................... பயன்படுத்தியிருக்கிறார்கள்.

# 9

## துருக்கித் தொப்பி

தம்பு: எப்படி அமீன். ஒரு கிழமையாய் உன்னைக் காணவில்லையே! எங்கே போயிருந்தாய்?

அமீன்: கண்டிக்கு ஓர் அலுவலாய்ப் போயிருந்தேன்; நேற்றுத்தான் வந்தேன்.

தம்பு: பின்னேரம் பூந்தோட்டத்துக்குப் போவோமா? ஒரு வேலையும் இல்லை எனக்கு.

அமீன்: இன்றைக்கா? எனக்கு முக்கியமான வேலை ஒன்று இருக்கிறது.

தம்பு: அப்படி என்ன வேலை?

அமீன்: இன்று சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தில் எம். சி. அப்துல் காதருடைய ஞாபகார்த்தமாக ஒரு கூட்டம் ஒழுங்கு செய்திருக்கிறார்கள்; அங்கே போக வேண்டும்.

தம்பு: யார் அந்த அப்துல் காதர்? எதற்காக அவரது ஞாபகார்த்தக் கூட்டம் நடத்துகிறார்கள்?



படம் 7. எம். சி. அப்துல் காதர்.

அமீன்: அவரா? அவர் ஒரு பெரிய நியாயவாதி. இலங்கையின் முதலாவது முஸ்லிம் நியாய வாதி அவரே. இஸ்லாமிய கலாசாரத்தைப் பாதுகாப்பதற்காகத் தம் தொழிலையே பணயம் வைத்துப் போராடியவர் அவர். அதனாலேதான் முன்பு அவருடைய படத்தைச் சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்திலே திரை நீக்கம் செய்து வைத்தார்கள். இன்று ஞாபகார்த்தக் கூட்டம் நடத்துகிறார்கள்.

தம்பு: யாருடன் போராடினார்?

அமீன்: உயர் நீதிமன்ற நீதிபதியுடன்.

தம்பு: எப்பொழுது?

அமீன்: 1905 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் தேதி.

தம்பு: அடேயப்பா! ஆங்கிலேயர் ஆண்டுகொண்டிருந்த காலமல்லவா அது?

அமீன்: ஆமாம். அதுவும் ஆங்கிலேய நீதிபதியான சேர். லெயார்ட் என்பவருடன்தான் போராட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

தம்பு: அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அவர்களையே எதிர்ப்பது மிகவும் துணிச்சலான செயல்தான். என்ன நடந்ததென்று சொல்லுகிறாய் இல்லையே!

அமீன்: ஒரு நாள் அப்துல் காதர் வழக்கமான உடைகளுடன் தலையிலே துருக்கித் தொப்பி அணிந்தவராக நீதிமன்றத்தினுட் சென்றார். அதைக் கண்ட நீதிபதி "நீர் நீதிமன்றத்தை அவமதித்துவிட்டீர். நீர் பேச விரும்பினால் தொப்பியைக் கழற்ற வேண்டும் அல்லது சப்பாத்தைக் கழற்ற வேண்டும்" என்றார்; உடனே அப்துல் காதர், "தொப்பி இஸ்லாமியரின் உடைகளின் ஒரு பகுதி. நாங்கள் தொப்பி அணிவது தங்களை மரியாதை செய்வதற்காகவே அன்றி அவமதிப்பதற்காக அன்று" என்று விளக்கம் கூறினார்.

தம்பு: அதை நீதிபதி ஏற்றுக்கொண்டாரா?

அமீன்: இல்லை. நீதிமன்றத்துக்கு மரியாதை செய்வதற்காக இரண்டில் ஒன்றைச் செய்யத்தான் வேண்டும் என்று வற்புறுத்தினார்.

தம்பு: அப்துல் காதர் என்ன செய்தார்?

அமீன்: அதில் எதையும் செய்ய வேண்டியது இல்லை என அப்துல் காதர் நினைத்தார். அதனால் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினார். அவர் தம் தொழிலை விட இஸ்லாமிய கலாசாரத்தை மேலாகக் கருதியதாலேதான் அப்படிச் செய்தார். அதனாலேதான் அவருக்கு இன்று விழா எடுக்கிறோம்.

தம்பு: அதன் பின் அவர் வேறு தொழில் செய்தாரோ?

அமீன்: இல்லை; அவருடைய துணிவும் சமூகத்துக்காகப் போராடும் தன்மையும் முஸ்லிம் மக்களை மட்டுமல்லாது பொது மக்கள் எல்லோரையும் கவர்ந்தது. அப்துல் காதருடைய நிலை சரியானதே என்பதை விளக்க முஸ்லிம்கள் பலரைக் கொண்ட தூதுக்குழு ஒன்று நீதிபதியைக் காணச் சென்றது.

தம்பு: நீதிபதி என்ன சொன்னார்?

அமீன்: நீதிபதி அவர்களுடைய கருத்துகளை எழுத்திலே தருமாறு கட்டளையிட்டார். எனவே, அப்துல் காதர் உயர் நீதிமன்றத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பஞ் செய்தார்.

தம்பு: உயர் நீதிமன்றம் என்ன முடிவு செய்தது? அது அப்துல் காதருக்குச் சாதகமாகத்தான் இருந்திருக்கும்.

அமீன்: அதுதான் இல்லை. உயர் நீதிமன்றத்தின் முடிவு அப்துல் காதருக்குப் பாதகமாகவே

இருந்தது. நியாயவாதிகள் நீதிமன்றத்திலே துருக்கித் தொப்பி அணியக் கூடாது என்று உயர் நீதிமன்றம் முடிவுசெய்தது.

தம்பு: அப்படியானால் அப்துல் காதருக்குப் படு தோல்வி தானே!

அமீன்: ஆனால், இதைக் கண்டு முஸ்லிம் சமூகம் சும்மா இருக்கவில்லை. இம்முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகப் பல இடங்களிலும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இவ்விடயத்தில், பிற மதத்தவரும் முஸ்லிம்களுடன் கைகோர்த்து நின்றனர். இறுதியில், பிரித்தானிய அரசுக்கு முறையீடு செய்வதாகத் தீர்மானித்தனர்.

தம்பு: முறையீடு செய்தார்களா? அதன் முடிவு என்ன?

அமீன்: ஆம், முறையீடு செய்தார்கள். அதன் முடிவு வெற்றியாகவே இருந்தது. பிரித்தானிய அரசு முஸ்லிம் நியாயவாதிகள் நீதிமன்றத்திலே தொப்பி அணியலாம் என்று தீர்ப்பு வழங்கிற்று.

தம்பு: அப்படியானால் இது உங்கள் சமுதாயத்துக்குக் கிடைத்த பெரு வெற்றி என்றே கொள்ள வேண்டும்.

அமீன்: ஏன் இதை ஒரு தேசிய வெற்றியாகவும் கொள்ளலாம். அந்நிய ஆதிக்கத்துக்கு எதிராகத் தொடங்கப்பட்ட போராட்டமல்லவா அது?

தம்பு: அது சரி. அப்துல் காதர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று சொல்லவில்லையே!

அமீன்: அவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவருடைய தகப்பனார் பெயர் முஹம்மது கரீம். ஆனால், காத்தான்குடியில் விவாகம் செய்து மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நாற்பது வருடங்கள் வரை தொழில் பார்த்து 1946 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் தேதி இவ்வுலகை நீத்தார்.

தம்பு: அவரைப் பற்றி மேலும் அறிய விரும்புகிறேன். நானும் பின்னேரம் விழாவுக்கு வரலாமா?

அமீன்: தாராளமாக வரலாம்.

## வினாக்கள்

I.
1. அமீன் பூந்தோட்டத்துக்குப் போக மறுத்ததேன்?
2. அப்துல் காதர் நீதிமன்றத்தை விட்டு வெளியேறியது ஏன்?
3. உயர் நீதிமன்றத்தின் முடிவு யாது?
4. பிரித்தானிய அரசின் முடிவு யாது?
5. அப்துல் காதருடைய போராட்டத்தினால், விளைந்த நன்மை என்ன?

II. எம். சி. அப்துல் காதர் அவர்களைப் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுக.

# 10

## கை கொடுப்போம்

சேற்றில்விழுந் தெழுந் தாவி பதைத்துடல்
தேய வியர்வையைச் சிந்திநிதம்
சோற்றை எமக்கூட்டித் தீயாம் பசியோட்டும்
தூய உழவர் நம் தோழர்களே!

மண்ணைக்குழைத் துப்பொன் வண்ணக் கலங்களை
நன்றே வனைபவனாம் குயவன்
பொன்னை உருக்கிநற் பூம்பணி செய்திடும்
பொற்கொல்லரும் எங்கள் தோழர்களே!

சிந்தைத்தெளி வுடன் சீர்புலன் நோக்குடன்
செய்பொருள் தந்திடும் தொழிலாளி
விந்தை எழில்துணி நெய்யும் நெசவாளி
வாழ்க! நமக்கிவர் தோழர்களே!

நாடுவளம் பெற நல்லுழைப் பீந்திடும்
நேய விவசாயி தொழிலாளி
பாடுப டாவிடிற் பாரில் உயர்வில்லைப்
பாரும் அவர்க்கினிக் கைகொடுப்போம்!

**எம். எச். எம். ஷம்ஸ்**

**விளக்கக் குறிப்புகள்**

ஆவி — உயிர்
கலம் — பாத்திரம்
நேயம் — அன்பு

## வினாக்கள்

1. இப்பாடலிலே தோழர் எனக் குறிப்பிடப்பட்டோர் யாவர்?
2. இவர்கள் எவற்றைத் தருகின்றனர்?
3. உழவர் படும்பாடுகள் எவை?
4. இப்பாடலிலே 'கைகொடுப்போம்' என்பதிலிருந்து விளங்கிக் கொள்வது என்ன?

# 11

## சின்ன மகளின் சின்னக் கைகள்

அன்னம்மாவும், மகள் கண்மணியும் அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்தார்கள். கண்மணி பத்து வயதுச் சிறுமி; ஐந்தாம் ஆண்டிற் படிப்பவள்; சுறுசுறுப்பான சுபாவம் கொண் -வள்; படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரி.

அன்னம்மா கொட்டாவி விட்டுக்கொண்டு, ''நாளைக்கு வருடப் பிறப்பு; வீட்டு வேலையோ தலைக்கு மேல் உண்டு. துடைக்க வேண்டும்; கூட்ட வேண்டும்; வீடு வாசல் கழுவ வேண்டும்; துணிகள்



படம் 8. பாத்திரங்களை விளக்கிக் கழுவுதல்.

துவைக்க வேண்டும்; பாத்திரங்கள் விளக்க வேண்டும்; பலகாரஞ் சுட வேண்டும்; சமைக்க வேண்டும்; அப்பப்பா சாமம் ஆனாலும் முடியாது. எப்படித்தான் இந்த இரண்டு கையாலும் செய்து முடிக்கப் போகிறேனோ? என்று அலுத்துக்கொண்டாள்.

''ஏன் அம்மா, நான் இல்லையா உதவி செய்ய? உங்கள் இரண்டு கைகளுடன் எனது இரண்டு கைகளும் சேர்ந்தால் நாலு கைகள் ஆகிவிடுமே. பொழுது படுவதற்கு முன் எல்லா வேலைகளையும் முடித்துவிடலாமே'' என்றாள் கண்மணி. அதனைக் கேட்ட தாய் மிகவும் மகிழ்ந்து, மகளை வாரி அணைத்து முத்தமிட்டாள்.

''நான் முற்றத்தையும் வீட்டு வளவையுங் கூட்டுகிறேன்'' என்று கூறிய கண்மணி விரைந்து சென்று கூட்டத் தொடங்கினாள்; கூட்டிய குப்பையை அள்ளிக் குப்பைக் கிடங்கிற் கொட்டினாள்; அதன் பின் சாணி கரைத்துத் தெளித்தாள்; தாய் வீடு வாசல் பெருக்கி முடித்து, கழுவ ஆரம்பித்தாள். அப்போது கீழ்வானிற் சூரியன் உதித்துத் தன் பொன் ஒளியை எங்கும் பரப்பினான்.

கண்மணி சிறிதும் தாமதிக்காது குடம், செம்பு, குத்துவிளக்கு, பித்தளைப் பாத்திரங்கள் முதலியவற்றைக் கிணற்றடிக்குக் கொண்டு போனாள்; புளியும் சாம்பலும் எடுத்து ஒவ்வொன்றாக விளக்கத் தொடங்கினாள். அரைவாசிக்கு மேல் விளக்கி முடித்ததும் தாய் அங்கு வந்தாள். அவள் கையில் தோய்க்க அழுக்குத் துணிகள் இருந்தன. அவற்றைக் கிணற்றடியிற் போட்டுவிட்டு மகளைப் பார்த்தாள். ''என் கண்மணி கெட்டிக்காரி. நான்கூட இவ்வளவு சுத்தமாக மினுக்கமாட்டேன். எல்லாமே பளபளக்கின்றன'' என்று பாராட்டினாள்.

அப்புகழ்மொழியைக் கேட்ட கண்மணி மிகவும் பூரிப்பு அடைந்தாள். விளக்கியவற்றைத் துப்புரவாகக் கழுவி எடுத்துச் சென்று வீட்டுக்குள் வைத்தாள். அதன் பின்னர் குளிக்கத் தொடங்கினாள். குளிக்கும் போது "அம்மா, வேளையோடு சமையலை முடித்தால் பின்னேரம் பலகாரந் தேடலாமே" என்றாள். அதற்குத் தாய் "நானும் அப்படித்தான நினைக்கிறேன். முதலில் நீ குளித்து விட்டுச் சாப்பிடு. பழஞ்சோறும் மோரும் உண்டு. வேண்டுமானால் ஊறுகாயும் எடுத்துக்கொள்" என்றாள். சாப்பிட்டுவிட்டு, "இன்று நான் சமைக்கிறேன். நீங்கள் மற்றைய வேலைகளைப் பாருங்கள்" என்றாள் மகள்.

தாய் சிரித்து விட்டு "நீயாவது சமைக்கிறதாவது; இவ்வளவு செய்ததே போதும்" என்றாள். அதற்கு அவள் " ஏன் எனக்குச் சமைக்கத் தெரியாதா? இன்று சமைத்துக் காட்டுகிறேன்" என்றாள். குளித்து விட்டுச் சென்றாள். காலை உணவை உண்டாள்.

பின்னர் பக்குவமாக விறகை அடுக்கி அடுப்பை மூட்டினாள். பானையைக் கழுவி உலை வைத்தாள். வெங்காயம் உரித்துக் கழுவி வைத்தாள். காய்கறிகள் உள்ள பெட்டியில் உருளைக்கிழங்கும் வெண்டிக்காயும் கத்தரிக்காயும் இருந்தன. உருளைக்கிழங்கு பொரிக்கலாம்; வெண்டிக்காய் வெள்ளைக் கறி வைக்கலாம்; கத்தரிக்காய் பொரித்துக் குழம்பாக்கலாம் என்று எண்ணினாள்; அவற்றைப் பக்குவமாக வெட்டிக் கழுவி வைத்தாள்; தேங்காயை உடைத்துத் துருவத் தொடங்கினாள்.

அப்போது தாய் குளித்துவிட்டு அங்கே வந்தாள், மகளைப் பார்த்து "அதற்கிடையில் இவ்வளவு வேலைகளை முடித்து விட்டாயே. மகா கெட்டிக்காரி தான்" என்று பாராட்டினாள். தாயும், மகளும் சமை

யல் செய்தனர். பகல் பன்னிரண்டு மணியளவிற் சமையல் முடிந்தது. சிறிது நேரத்திற் கண்மணியின் பாட்டனார் பொல்லை ஊன்றிக்கொண்டு அங்கே வந்தார். அதன்பின் கண்மணியின் தந்தையும் தோட்டத்தில் இருந்து வந்தார்.

ஒரு மணியளவில் எல்லோரும் மத்தியானச் சாப்பாடு சாப்பிடக் கூடினர். கண்மணி சாப்பாடு பரிமாறினாள். அப்போது அன்னம்மா, கண்மணியின் பாட்டனாரைப் பார்த்து "அப்பா! என் பேத்தி எப்போது எனக்குச் சமைத்துப் போடுவாள் என்று அடிக்கடி கேட்பீர்களே! இன்றைக்கு உங்கள் பேத்தி தான் சமைத்தாள்; எப்படியிருக்கின்றது?" என்று கேட்டாள்.

பாட்டனார் பொக்கை வாயைத் திறந்து சிரித்தார். "ஓ! அப்படியா ? ஆகா என்ன அருமையான சோறு கறி! என் பேத்தி படிப்பிலும் கெட்டிக்காரி. சமையிலும் கெட்டிக்காரி" என்று புகழ்ந்தார்.

மத்தியானச் சாப்பாடு முடிந்தது. பலகாரம் சுட ஆயத்தம் செய்தனர். மகள் பயற்றம் பலகாரமும், தாய் முறுக்கும் சுடுவதெனத் தீர்மானித்தனர். கண்மணி பயற்றம் மாவையும், சர்க்கரையையும் சேர்த்தாள். சிறிது ஏலக்காயையும் நற்சீரகத்தையும் மிளகையும் தூளாக்கி இட்டாள். தாய் அளவாக உப்பிட்டுப் பிசைந்து விட்டாள். கண்மணி கொட்டைப் பாக்களவு உருண்டைகள் உருட்டினாள். தாய் கரைத்துக் கொடுத்த அரிசிமாவிற் தோய்த்து, கொதிக்கும் எண்ணெயில் இட்டாள்; பதமாய் வெந்ததும் வடித்து எடுத்தாள். தாய் வேறோர் அடுப்பில் முறுக்குச் சுட்டாள். விளக்கு வைக்கும் நேரத்துக்குப் பலகாரம் சுட்டு முடிந்தது.

அன்னம்மா மகளைப் பார்த்து 'என் சின்னமகளின் சின்னக் கைகள் இரண்டும் உதவிக்கு வந்ததால் வெகு விரைவில் வேலைகள் முடிந்து விட்டன. அல்லது இரவு பத்து மணியாவது செல்லும்'' எனப் பாராட்டினாள். இதனைக் கேட்ட கண்மணியும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

## வினாக்கள்

I. 1. கண்மணியின் நற்குணங்கள் பற்றி மூன்று வாக்கியங்கள் கூறுக.

2. கண்மணி செய்யத் தொடங்கிய முதல் வேலை எது? தாய் செய்து முடித்த இறுதி வேலை எது?

3. சின்ன மகளின் சின்னக்கைகள் செய்த வேலைகள் எவை?

4. கண்மணியை அவளது பாட்டனார் எவ்வாறு பாராட்டினார்?

5. பயற்றம் பலகாரம் சுடும் முறையைக் கூறுக?

II. தரப்பட்ட வாக்கியங்களை அவற்றின் பொருள் சிதையாதவாறு இணைத்து எழுதுங்கள்.

1. அன்னம்மா அதிகாலையில் எழுந்தாள்;
கண்மணி அதிகாலையில் எழுந்தாள்;

2. கண்மணி படிப்பிற் கெட்டிக்காரி;
கண்மணி சமயலிற் கெட்டிக்காரி;

3. ஆதிகால மக்கள் இலைகுழைகளை அணிந்தனர்; ஆதிகால மக்கள் மரவுரிகளை அணிந்தனர்.

4. மகள் பயற்றம் பணியாரஞ் சுடத்தீர்மானித்தாள்;
தாய் முறுக்குச் சுடத் தீர்மானித்தாள்.

# 12


## புத்தாண்டு பிறந்தது

''டாண், டாண், டாண், டாண்'' என்று மணி ஒலித்தது அப்போது நேரம் காலை ஆறரை மணி. மணியோசையைக் கேட்ட கண்மணி ''அப்பா புது வருடம் பிறந்துவிட்டதா?'' என்று கேட்டாள்.

அதற்குத் தந்தை ''காலை ஆறரை மணியில் இருந்து மாலை இரண்டு மணி இருபத்தேழு நிமிடம் வரை விஷு புண்ணியகாலம். இந்தப் புண்ணிய காலத்தில் காலை பத்து மணி பன்னிரண்டு நிமிடத்துக்கு வருடம் பிறக்கும். முதலில் நீ கோயிலுக்குச் சென்று மருத்துநீர் வாங்கி வா. அதைத் தலையிலே தேய்த்து நீராட வேண்டும்'' என்றார்.

''மருத்து நீரா? அதனை எவ்வாறு செய்வார்கள்?'' என்று கேட்டாள் கண்மணி ''தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ முதலிய சில பூக்களையும் வேறுசில மூலிகைகளையும் இட்டுக் காய்ச்சிய நீரே மருத்துநீர். அதைக் கோயிற் குருக்கள் தயாரித்திருப்பார்'' என்று தந்தை விளக்கினார்.

''அதைத் தேய்த்து நீராடினால் குற்றங்கள் நீங்கும். இதோ செம்பு; ஓடிப்போய் வாங்கி வா'' என்றாள் தாய். கண்மணி மருத்துநீர் வாங்கி வந்தாள். தாய்



படம் 9. கோயிற் குருக்களிடம் மருத்துநீர் வாங்கல்.

தந்தை, மகள் மூவரும் அதைத் தலையில் வைத்துத் தேய்த்தனர். தலையில் வேப்பிலையும், காலிற் கொன்றையிலையும் வைத்தனர். மூவரும் நீராடிப் புத்தாடை அணிந்தனர்.

கண்மணிக்கு அவள் தந்தை பட்டுப் பாவாடையும், சட்டையும் வாங்கியிருந்தார். அவற்றை அணிந்து கண்மணி அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாள்.

பின்னர் மூவரும் வீட்டிலே சுவாமிப் படங்கள் உள்ள இடத்திற்குச் சென்றனர். அங்கே தாய் குத்து விளக்கேற்றினாள்; தந்தை நிறைகுடம் வைத்தார். பழம், பாக்கு, வெற்றிலை முதலிய மங்கலப் பொருள்களையும் அங்கு வைத்தார்; சாம்பிராணி இட்டு, கர்ப்பூரம் கொளுத்தி, மூவரும் விழுந்து வணங்கினர். கண்மணி தந்தையையும் தாயையும் பணிந்து எழுந்தாள். அவர்கள் அவளை உச்சிமோந்து ஆசிகூறி வாழ்த்தினர்.

மீண்டும் கோயில் மணி ஒலித்தது. ''நேரம் ஒன்பது மணி; பூசைக்கு ஆயத்தம் போலத் தெரிகிறது. கோயிலுக்குப் போய் வருவோம்'' என்றாள் தாய். கண்மணி அர்ச்சனைத் தட்டத்தை எடுத்தாள். அனைவரும் கோயிலுக்குச் சென்றனர்.

அவர்கள் மூவரும் கோயிலில் வழிபாடு செய்து கொண்டு வீடு திரும்பினர். கண்மணி தன் தந்தையார் வாங்கிக் கொடுத்த வெடிக்கட்டை எடுத்துக் கொளுத்தத் தொடங்கினாள். அயல் வீடுகளில் இருந்தும் ''படபட'' வென்று வெடிச் சத்தங் கேட்டது.

சிற்றுண்டி அருந்திக்கொண்டிருக்கும்போது தந்தை ''இன்றைக்குப் பதினொரு மணிக்கு ஏர் மங்கலஞ் செய்ய நாள் இருக்கிறது'' என்றார்.

''ஏர் மங்கலமா, அது என்ன?'' என்று கேட்டாள் கண்மணி.

''ஏர் என்றால் கலப்பை. கமக்காரர்கள் கலப்பையிலே மாடுகளைப் பூட்டி, நல்ல நாளான இன்று உழவுத் தொழிலை ஆரம்பிப்பார்கள். அதைத்தான் ஏர் மங்கலம் என்று சொல்வது'' என்றாள் தாய்.

''இன்றைக்குப் பொதுவாக நல்ல நாள். கைவிசேடம் பரிமாறிக்கொள்ளலாம்'' என்றார் தந்தையார்.

''அதென்ன அம்மா கைவிசேடம்?'' என்று கண்மணி கேட்டாள்.

அதற்குத் தாயார் ''வருடம் பிறநது நல்ல நேரத்தில் நல்லவர் கையாற் காசு வாங்குவது வழக்கம், அதைத்தான் கைவிசேடம் என்போம்'' என்றார்.

உடனே கண்மணி சிரித்துக்கொண்டு "எனக்கு எல்லோரிலும் நல்லவர் அப்பாவே. அவரிடந்தான் நான் கைவிசேடம் வாங்குவேன்" என்றாள்.

அப்போது தந்தையாரும் சிரித்துக் கொண்டே "எனக்கும் இந்த உலகத்திலே இரண்டு நல்ல கைகள் உள்ளன. அவை என் மகள் கண்மணியின் கைகள். அந்தக் கையாலேதான் நானும் கைவிசேடம் வாங்குவேன்" என்றார். அதைக் கேட்ட கண்மணியின் ஆனந்தத்துக்கு அளவேயில்லை. "ஏர் பூட்டல் முடிந்ததும் கைவிசேடம் பரிமாறிக் கொள்ளலாம்" என்று கூறித் தந்தை வயலுக்குப் புறப்பட்டார்.

அவர் சென்றதும் தாய் மகளைப் பார்த்து "இன்றைக்கு நல்ல நாள். அப்பா திரும்பி வரும் வரையும் படித்துக்கொண்டிரு" என்று கூறி அடுப்படிக்குச் சென்றாள். கண்மணி தன் பாடப் புத்தகத்தில் இருந்து ஒரு பாடம் படித்தாள். சிறிது நேரத்திலே தந்தை வயலிலிருந்து வந்தார். எல்லோருக்கும் கைவிசேடங் கொடுக்கப்பட்டது.

அதன் பின்னர் கண்மணி தன் பெரிய தாய் வீட்டுக்குச் சென்றாள். அங்கு சிறுவர்கள் போர்த் தேங்காய் அடித்துக்கொண்டு நின்றனர். ஒருவன் ஒரு தேங்காயை உருட்டி விட்டான்; அது விடுகாய்; மற்றவன் தன் கைக்காயால் அதை அடித்து உடைத்தான். இவ்வாறு மாறிமாறி அடித்தனர். பெரிய தாய் கண்மணிக்குப் பலகாரம் கொடுத்து உபசரித்தாள்.

அப்போது அடுத்த ஒழுங்கையில் ஒருவகை மேளச் சத்தம் எழுந்தது. ஏனைய சிறுவர்களும் ஒலி எழுந்த வீட்டுக்கு ஓடினர். அது ஒரு சிங்களவருடைய வீடு. அவர் பௌத்த மதத்தவர். அவ்வீட்டு முற்றத்திலே,

இருந்த 'றபான்' என்னும் பெரிய மேளத்தைச் சில பெணகள் சூழவிருந்து அடித்தனர். அங்கு சிறுவர்கள் போர்த் தேங்காய் அடித்து விளையாடினர். அந்த வீட்டுப் பையன் சுனில் போர்த் தேங்காயை மேலே எறிந்தான். மற்றொருவன் அத்தேங்காய்க்கு இலக்குப் பார்த்துத் தன்னிடம் இருந்த தேங்காயை எறிந்தான். அவை இரண்டும் அந்தரத்தில் முட்டி மோதி ஒன்று உடைந்தது.

இன்னும் சில சிறுவர்கள் வேப்ப மர நிழலிலே பாடிப்பாடி ஊஞ்சல் ஆடினர். கண்மணியும் சிறிது நேரம் ஊஞ்சல் ஆடினாள். அவளுக்குத் தாகம் எடுத்தது. சுனிலின் தாயிடம் தண்ணீர் கேட்டாள். அவர் தண்ணீரைக் காட்டி "கண்மணி நீயே எடுத்துக்குடி. இப்போது எங்களுக்குப் புண்ணியகாலம்; எமது வழக்கப்படி இந்த நேரத்தில் எவ்வேலையும் செய்யமாட்டோம்; எதையுமே வாங்கவோ, கொடுக்கவோ மாட்டோம்" என்றார்.

"அப்படியானால் என்ன செய்வீர்கள்" என்று கேட்டாள் கண்மணி.

அவர் விளக்கிக் கூறினார், "உங்களைப்போலப் புத்தாடை அணிவோம்; பாஞ்சாலைக்குச் செல்வோம்; வழிபடுவோம்; தானதருமஞ் செய்வோம்; றபான் அடிப்போம்; விளையாடி மகிழ்வோம்; அந்த நேரத்திற் சமைப்பது கூட இல்லை."

"புண்ணியகாலம் முடிந்ததும் என்ன செய்வீர்கள்?" என்று கண்மணி கேட்டாள்.

அதன்பின் நல்ல நேரத்திலே கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்போம்; அடுப்பு மூட்டுவோம்; பாற்சோறும் இனிப்புப் பண்டங்களும் ஆக்குவோம்;

சுப நேரத்திலே உண்போம்; நாள் வேலை செய்வோம்'' என்றார் மாமி.

''ஏன் நீங்கள் நீராடிவிட்டுக் கொண்டாட்டங்களைத் தொடங்குவதில்லையா?'' என்று கேட்டாள் கண்மணி. அதற்கு அவர் ''எண்ணெய் வைப்பதற்கும் நீராடுவதற்கும் வேறொரு நல்ல நாள் குறித்திருப்பார்கள். அந்த நாளில் வீட்டுப் பெரியவர் ஏனையோருக்கு எண்ணெய் தேய்த்து ஆசி கூறுவார். அதன்பின் நீராடி விருந்துண்போம். அதனுடன் எங்கள் புதுவருடக் கொண்டாட்டம் முடிவுற்றுவிடும்'' என்றார்.

கண்மணி தண்ணீரை எடுத்துக் குடித்தாள், ''நான் போய் வருகிறேன்; அம்மா தேடப் போகிறார்'' என்று கூறி அவள் விடைபெற்றுச் சென்றாள்.

## வினாக்கள்

I 1. வருடப்பிறப்புப் புண்ணிய காலத்திலே இந்துக்கள் செய்ய வேண்டியன யாவை?

2. வருடப்பிறப்புப் புண்ணிய காலம் முடிந்ததும் பௌத்தர் செய்வன எவை?

3. கண்மணியின் தந்தையார் யாரிடமிருந்து கைவிசேடம் பெற்றார்?

4. "கண்மணி, நீயே எடுத்துக் குடி." என்று சுனிலின் தாய் கூறியதற்குக் காரணம் என்ன?

5. பின்வருவன ஒவ்வொன்றையும் விளக்கிக் கூறுக.

| | |
|---|---|
| (அ) மருத்துநீர் | (ஆ) ஏர் மங்கலம் |
| (இ) கைவிசேடம் | (ஈ) விடுகாய் |
| (உ) பாஞ்சாலை | (ஊ) புண்ணிய காலம் |

II பிரித்தெழுதுக.

1. கோயில்மணி
2. ஆறரை
3. தாழம்பூ
4. பாடிப்பாடி
5. தானதருமம்
6. மணியோசை
7. போர்த்தேங்காய்
8. இனிப்புட்பண்டம்
9. பின்னேரம்
10. பட்டுப் பாவாடை

# 13

## புதையல் யாருக்கு?

கலிபா உமர் (றழி) அவர்களுடைய காலத்திலே ஹசன், அன்வர் என்னும் நண்பர்கள் இருவர் இருந்தார்கள். இருவரும் ஏழைகள் என்பதனால் மிகவும் கஷ்டப்பட்டே வாழ்க்கை நடாத்தி வந்தனர். இருவருடைய மனைவிமாரும் இறந்து விட்டார்கள். ஹசனிடம் ஒரு மகளும் அன்வரிடம் ஒரு மகனும் இருந்தார்கள்.

அன்வர் மந்தை மேய்த்து வாழ்ந்து வந்தான். ஒரு முறை கடுமையான வரட்சி ஏற்பட்டதாலே புற்றரைகள் எல்லாம் கருகிவிட்டன. அதனால் அவனுடைய மந்தைகள் உண்ணுவதற்குப் புல் இல்லாமற் போய்விட்டது. மந்தைகள் ஒவ்வொன்றாக இறக்கத் தொடங்கின. ஒருநாள் அன்வர் மிகத் துக்கமடைந்தவனாய், தன்மகனின் தோளைப் பிடித்தபடி மெள்ள மெள்ள நடந்து தன் நண்பனுடைய வீட்டுக்குச் சென்றான். அன்வரைக் கண்ட ஹசன் "என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"என்னுடைய மந்தைகள் இறந்துவிட்டன. அவை இல்லாமல் நான் வாழ முடியாது. நானும் சில நாளில் இறந்துவிடுவேன். ஆகவே, உன்னிடம் சொல்லிவிட்டுப் போக வந்தேன்" என்றான்.

ஹசன் ஏழையாக இருந்தாலும் நண்பனைக் காப்பாற்ற விரும்பினான். அவன் அன்வரைப் பார்த்து "நீ இறக்க வேண்டியதில்லை. நான் ஒரு துண்டு நிலம் தருகிறேன். அதிற் பயிர் செய்து சீவிக்கலாம்; பயப்

படாதே'' என்றான். அன்றிலிருந்து அன்வர் ஒரு விவசாயி ஆனான்.

வருடங்கள் சில கழிந்தன. ஒரு நாள் அன்வர் தனது தோட்டத்தைக் கொத்திக்கொண்டு நின்றான். அப்பொழுது மண்வெட்டி ஏதோ ஒன்றிற் பட 'டாங்' என்று சத்தங் கேட்டது. ஆச்சரியமடைந்த அன்வர் மேலுந் தோண்டினான். தோண்டியதும் ஒரு செம்பு வெளியே வந்தது. அன்வர் ஆவலுடன் அதை எடுத்துப் பார்த்தான். அது நிரம்பத் தங்கக் காசுகள் காணப் பட்டன. அன்வர் மகிழ்ச்சி மேலீட்டால், செம்பை எடுத்துக்கொண்டு ஓடினான். அன்வர், ஹசன் வாழும் குடிசையுட் சென்றான். ''இதோ, நான் உன்னுடைய தோட்டத்தில் ஒரு புதையலைக் கண்டெடுத்தேன். இனி உனக்குக் கவலை இல்லை; உன் துன்பமெல்லாம் பறந்துவிடும்'' என்றான்.

''நீ நல்லவன் என்பது எனக்குத் தெரியும் என்றா லும் இந்தக் காசெல்லாம் உனக்குத்தான் சொந்தம். உனக்குத் தந்த காணியிலேதான் இந்தப் புதையல் கிடைத்தது'' என்றான் ஹசன்.

''உன்னுடைய கருணையையும் நான் அறிவேன். நீ எனக்குக் காணியைத் தந்தாலும் அதில் உள்ள புதை யலை எனக்குத் தரவில்லையே! ஆதலால், புதையல் உனக்குத்தான் சொந்தம்'' என்றான் அன்வர்.

புதையலை எடுத்தவன் நீ. புதையல் எடுக்கும் போது நிலம் உனக்கு உரியதாய் இருந்தது. ஆகவே புதை யல் உனக்குத்தான் சொந்தம்'' என்றான் ஹசன்.

''இல்லை இல்லை; புதையலை நான் எடுத்தாலும் நிலம் எனக்குச் சொந்தம் இல்லை. நிலத்திற் பயிர் செய்ய மட்டும் எனக்கு உரிமை தந்திருக்கிறாய். ஆகவே, நிலச் சொந்தக்காரருக்குத்தான் புதையல் சொந்தம். நீயே அதை எடுத்துக்கொள்'' என்றான் அன்வர்.

இவ்வாறு நெடுநேரமாக இருவரும் வாதாடினர். கடைசியாக, ஹசன் ''நாம் வாதாடிப் பயனில்லை. காதியிடம் போய் முறையிடுவோம்'' என்றான்.



படம் 10. அன்வரும் ஹசனும் காதியிடம் போனார்கள்.

இருவரும் காதியிடம் போனார்கள். தங்கள் பிரச்சினையைச் சொன்னார்கள். காதி தம்முடைய மாணாக்கருள் ஒருவனைப் பார்த்து ''இதை எப்படித் தீர்க்கலாம்?'' என்று கேட்டார்.

''அப்பாத்திரத்தை பொதுத் திறைசேரிக்கு அனுப்பலாம்'' என்றான் அவன். காதி மற்றொரு மாணாக்கனைப் பார்த்து, ''இதை எப்படித் தீர்க்கலாம்?''

என்றார். ''அதை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள. ஏனெனில், உரியவர்க்ள் எடுக்க மறுக்கும் பொருள் நீதிபதிக்கே சொந்தமாகும்'' என்றான் மற்றவன்.

இதைக் கேட்ட காதி கோபமடைந்தார். பின் சிறிது நேரம் யோசித்தார்

''உங்களுக்குப் பிள்ளைகள் இருக்கின்றார்களா?'' என்று அன்வரையும் ஹசனையும் கேட்டார்.

''ஆம்'' என்றனர் இருவரும்.

பின் அன்வரைப் பார்த்து ''உமக்கு எத்தனை பிள்ளைகள்?'' என்று கேட்டார்.

''எனக்கு ஒரு மகன் மாத்திரம் இருக்கிறான்'' என்றான் அன்வர்.

பின் ஹசனைப் பார்த்து ''உமக்கு எத்தனை பிள்ளைகள்?'' என்று கேட்டார்.

''எனக்கு ஒரு மகள் உண்டு'' என்றான் ஹசன்.

''அப்படியானால் உங்கள் பிரச்சினையை மிக இலகுவாகத் தீர்த்துவிடலாம். அவர்கள் இருவருக்கும் மணம் முடித்து வையுங்கள். அவர்களுடைய வாழ்வுக்காக இப்புதையலைக் கொடுங்கள். அவர்கள் மகிழச்சியாக வாழ்வார்கள்'' என்றார் காதி.

ஹசனுடைய மகளுக்கும் அன்வருடைய மகனுக்குந் திருமணம் மிகவும் சிறப்பாக நடந்தது. திருமணத்தின்போது, அப்புதையல் அவர்களின் கையிற் கொடுக்கப்பட்டது. அவர்கள் அப்பணத்தைக் கொண்டு மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தினார்கள்.

## வினாக்கள்

I. 1. அன்வர் ஏன் துக்கமடைந்தான்?

2. அன்வரைக் காப்பாற்ற ஹசன் என்ன செய்தான்?

3. அன்வர் புதையலை என்ன செய்தான்

4. ஹசன் புதையலை வாங்க மறுத்தது ஏன்?

5. இறுதியில் புதையல் யாருக்குச் சொந்தமானது?

II. சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. பிரச்சனை, பிரச்சினை, பிரட்சினை

2. வாழ்கை, வாட்கை, வாழ்க்கை

3. மகிழ்ச்சி, மகிட்சி, மகிற்சி

4. காச்சுதல், காய்ச்சுதல், காற்சுதல்

5. திரைசேரி, திறைசேறி, திறைசேரி

வேறுபட்ட கருத்துள்ள சொல்லின் கீழ்க் கீறிடுக.

1. மகன், புத்திரன், புதல்வி, மருமன்

2. ஆதவன், சூரியன், அரக்கன், அருக்கன்

3. அழகு, எழில், நலம், கோலம்

4. அணி, காப்பு, இழை, நகை

5. சூடு, வெப்பம், தட்பம், வெம்மை

# 14

## உலக நீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்.

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்.

மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்
சினந்தேடி அல்லலையுந் தேட வேண்டாம்
சினந்திருந்தார் வாசல்வழிச் சேர வேண்டாம்.

வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத் திரிய வேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்
முன்கோபக் காரரோ டிணங்க வேண்டாம்.

உலகநாதன்

விளக்கக் குறிப்புகள்

பொல்லாங்கு - குற்றம்; மாதா - தாய்;
இணங்கல் - சேர்தல்; காரியம் - செய்கை;
அஞ்சுதல் - பயப்படுதல்; மாற்றான் - பகைவன்;
சினம் - கோபம்; அல்லல் - துன்பம்.

## மொழிப்பயிற்சி II

அ. முதலாம் நிரலில் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான முடிக்குஞ் சொற்களை இரண்டாம் நிரலிலிருந்து தெரிவு செய்க.

| | |
|---|---|
| அதிபர் | வீசியது |
| மாணவன் | எரிந்தது |
| மாணவர்கள் | கூறினான் |
| நெருப்பு | சிந்தித்தனர் |
| காற்று | எழுந்தார் |
| நல்லதம்பி | பறித்தாள் |
| மாடுகள் | வந்தார்கள் |
| அவள் | சென்றன |
| அவர்கள் | அரசாண்டான் |
| காசியப்பன் | அடைந்தனர் |

ஆ. ஒழுங்கின்றிக் கிடக்கும் வாக்கியங்களைக் கருத்துப் பொருத்தம் அமையும்படி ஒழுங்குபடுத்துக.

முதலில் அனுராதபுரத்திற்குச் சென்றார்கள்.
அவர்கள் எல்லோரும் மலையை நோக்கி விரைந்தனர்.
மாணாக்கர் சுற்றுலாவிற்கு ஆயத்தஞ் செய்தார்கள்.
அவர்கள் சிகிரியாவை நோக்கிப் புறப்பட்டார்கள்.
அவர்கள் குகைச் சுவர்களில் வன்னை ஓவியங்களைக் கண்டு மகிழ்ந்தார்கள்.
பசி வயிற்றைக் கிள்ளியது.
அவர்கள் படிகளில் ஏறி மேல் நோக்கிச் சென்றார்கள்.
மாணாக்கர் மலையிலிருந்து இறங்கினார்கள்.
மலை உச்சியில், காசியப்பனின் அரண்மனையின் இடிபாடுகளைக் கண்டார்கள்.

இ. வாக்கியமாக ஒழுங்குபடுத்துக.

1. தோட்டம், நல்லதம்பியின், இருந்தது, தெருக் கரையிலேயே.
2. மூதனமுத்தா, செய்யமாட்டார், பிரயாணம், கால்நடையாக.
3. காசியப்பன், சிறையிலிட்டு, கைப்பற்றினான், அரசைக், தந்தையைச்
4. அன்வர், வந்தான், வாழ்ந்து, மேய்த்து, மந்தை.
5. மகளுக்கும், ஹசனுடைய, மகனுக்கும், அன்வருடைய, மிக, விசேடமாக, நடந்தது, திருமணம்.
6. மகா வித்தியாலயம், மாந்தோப்பு, திறமை, கல்வியிலே, காட்டி வந்தது.

ஈ. கீழே உள்ள சொற்களிற் பொருத்தமானவற்றைத் தெரிந்து கோடிட்ட இடங்களை நிரப்புக.

(பார்த்தனர், இறங்கினர், இல்லை, போனார்கள், திறந்துவிட்டாள், பரவியது, இருந்தன, கதறினான்)

1. பிள்ளையார் கோயிலின் கண்டா மணியோசை ஊரெல்லாம் ...பரவியது....
2. வீட்டுப் படலையை மனைவி திறந்து விட்டாள்
3. ஆண்களும் பெண்களும் அங்குமிங்கும் நின்று வேடிக்கை .......... ......
4. இருவரும் காதியிடம் ...........
5. அவர்கள் எல்லோரும் பஸ் வண்டியிலிருந்து ........................
6. போகும் வழியில் இரண்டு அகழிகள் ........
7. ஆதவன் "பாம்பு, பாம்பு" என்று ...........
8. பெற்றார் ஆசிரியர் சங்கத்திடம் பணம் .....

ஊ. பின்வரும் வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றுக.

உதாரணம்: உங்களுக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள்.
உங்களுக்குப் பிள்ளைகள் இருக்கிறார்களா?

1. அவர்கள் இந்த வேலையைச் செய்வார்கள்.
2. நேரம் நான்கு மணியாகி விட்டது.
3. காசியப்பனின் தந்தை தாதுசேனன்.
4. பானையைத்தான் எடுக்க வேண்டும்.
5. உன்னுடைய கருணையை நான் அறிவேன்.
6. நீங்கள் சோறு சாப்பிட்டீர்கள்.
7. மனைவி தோட்டத்திலே காய்கறிகள் பறித்தாள்.
8. நாங்கள் பாட்டுப் பாடுவோம்.
9. இது எல்லோருக்கும் சம்மதம்.

ஊ. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுக.

1. கரம் ..............
2. இறைவன் ..............
3. வினவினார் ..............
4. ஆசிரியர் ..............
5. ஆகாயம் ..............
6. சக்கரங்கள் ..............
7. வீடு ..............
8. வியந்தார்கள் ..............
9. திருடன் ..............
10 செல்வன் ..............

எ. பின்வரும் சொற்களுக்கு எதிர்க் கருத்துள்ள சொற்களை எழுதுக:

1. வறியவன் ...............
2. சந்தோஷம் ...............
3. இல்லை ...............
4. பகைவர் ...............
5. மதிக்கப்பட்டார் ...............
6. இரவு ...............
7. இலாபம் ...............
8. குளிர் ...............
9. நல்ல ...............
10. மகிழ்ச்சி ...............

ஏ. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

உதாரணம்: வாழைப்பழம் = வாழை + பழம்.

1. மிளகாய்ச்செடி =
2. வண்டிச்சக்கரங்கள் =
3. வண்ணப்பட்டாடை =
4. இரும்புச்சட்டங்கள் =
5. புதுப்பானை =
6. ஓடித்தப்பினார்கள் =
7. எப்படித்தீர்க்கலாம் =
8. மலையைப்பார்த்தனர் =
9. பசுக்கன்று =
10. அவித்துக்கொடுத்தாள் =

ஐ. பின்வருவனவற்றைப் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுக.

1. கமச்செய்கை
2. எனது பிறந்தநாட் கொண்டாட்டம்
3. மிருகக் காட்சிச்சாலை

ஒ. நொடி

1. தலையுண்டு வாலில்லை; உடம்புண்டு காலில்லை; தட்டச் சீறும்; பாம்பன்று; அது என்ன?

2. அண்ணன் தம்பி இரண்டுபேர்;
அவரைச் சுற்றி பன்னிரண்டுபேர்;

3. ஒரு சாண் உடல் தான்;
உடல் நிறையப் பற்கள்.


4. அம்மாவுக்கு எட்டும்;
அப்பாவுக்கு எட்டும்;
தம்பிக்கும் எட்டும்;
அண்ணனுக்கு எட்டாது.

5. மூத்தவர் ஆற்றிலே;
இளையவர் வீட்டிலே;
நடுவிலார் புற்றிலே;

# 15

## சித்திரக் குன்றம்

சந்தனக்கூடல் மகா வித்தியாலய மாணாக்கர் ஒரு சுற்றுலாவிற்கு ஆயத்தஞ் செய்தார்கள். இச்சுற்றுலாவிற் சரித்திர சம்பந்தமான இடங்களைப் பார்க்கத் திட்டமிட்டிருந்தார்கள். முதலில் அனுராதபுரத்துக்குச் சென்றார்கள். அங்குள்ள இடங்களைப் பார்வையிட்டார்கள். அன்று இரவு, அனுராதபுரத்திலுள்ள விவேகானந்த வித்தியாலயத்திலே தங்கினார்கள். மறுநாள் காலை அவர்கள் சிகிரியாவை நோக்கிப் புறப்பட்டார்கள்.



படம் 11. சிகிரியா

அவர்களின் பஸ்வண்டி தம்புல்லைச் சந்தியைக் கடந்து சென்றுகொண்டிருந்தது. சிறிய தூரஞ் சென்றதும் பாலா, ''அதோ தெரிகிறதே ஒரு குன்று. அது தான் நாங்கள் பார்க்கப் போகும் சீகிரியாவோ?'' என்று கேட்டான்.

''ஆமாம்! அதுதான் சீகிரியா'' என்றார் ஆசிரியர். மாணாக்கர் பஸ்வண்டியின் யன்னல்களுக்கு வெளியே தலைகளை நீட்டி அந்த மலையின் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தனர். வீதியின் இரண்டு பக்கமும் அடர்ந்த காடு காணப்பட்டது. இடையிடையே பச்சைப்பசேல் என்ற வயல் வெளிகள் தென்பட்டன. சிறு குடிசைகளும் ஆங்காங்கே காணப்பட்டன. காலை எட்டு மணியளவில் அவர்கள் மலையடிவாரத்தை அடைந்தனர்.

எல்லாரும் பஸ்வண்டியிலிருந்து இறங்கினர்; மலையைப் பார்த்தனர். ''ஒரு சிங்கம் படுத்திருப்பது போல இந்த மலை தெரிகிறதே'' என்றான் நிசார்.

''ஆமாம், அதனாலேதான் சியகிரி என்று இதற்குப் பெயர் வந்தது. சீயம் என்றால் சிங்கம். இம்மலையைச் சீகிரியா என்றும் வழங்குவர். வாருங்கள் மலைக்குப் போவோம். மலையிலே பல காட்சிகளைப் பார்க்கலாம்; குகைகளைப் பார்க்கலாம்; குகைச் சுவர்களிலே வரையப்பட்ட ஓவியங்களைப் பார்க்கலாம்; கோட்டைச் சுவர்களைப் பார்க்கலாம்; குளங்களைக் கூடப் பார்க்கலாம்'' என்று ஆசிரியர் கூறினார். அதைக் கேட்ட மாணாக்கர்களின் ஆர்வம் கூடியது. அவர்கள் எல்லாரும் மலையை நோக்கி விரைந்து நடந்தனர்.

போகும் வழியில் இரண்டு பெரிய அகழிகள் இருந்தன; ''இவை வாய்க்கால்களாக இருக்கலாமோ?'' என்று மாணாக்கர் பேசிக்கொண்டார்கள். அப்போது

ஆசிரியர். "இவை வாய்க்கால்கள் அல்ல; அகழிகள். கோட்டைகளையும் அரண்மனைகளையும் பகைவர்களிடமிருந்து பாதுகாப்பதற்காகப் பழைய காலத்து அரசர்கள் இத்தகைய அகழிகளை அமைப்பது வழக்கம். இவையும் அந்த மாதிரியான அகழிகளே" என்றார். மேலும் சிறிது தூரஞ் சென்றார்கள். செல்லும்வழியில், அவர்கள் இடிபாடுகள் பலவற்றைக் கண்டார்கள்.

"அவை எல்லாம் என்ன?" என்றாள் பாத்திமா. "அவையே பழைய கோட்டைகள்; மண்டபங்கள்; பூங்காக்கள்; குளங்கள். அவைகள் இடிந்து அழிந்து போனாலும் அவற்றின் சில பகுதிகளை இன்றும் நாம் காண்கிறோம்" என்று ஆசிரியர் விளங்கப்படுத்தினார்

அவர்கள் படிகளில் ஏறி மேல் நோக்கிச் சென்றார்கள். அங்கே குகைகள் பல இருந்தன. ஒரு பாறையில் நீர் தேங்கி நிற்கும் தொட்டியொன்று அமைக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய ஆசனமும் வேறு பல ஆசனங்களும் அதே பாறையிலே செதுக்கப்பட்டிருந்தன.

கால்களும் உளைகின்றன; களைப்பாகவும் இருக்கிறது; வாருங்கள், இங்கேயுள்ள இருக்கைகளிற் சற்று நேரம் இருந்து களைப்பாறுவோம்" என்றான் பாலா.

உடனே, சுற்றிவரவுள்ள ஆசனங்களில் மாணாக்கர் அமர்ந்தனர். ஆசிரியர் பெரிய ஆசனத்தில் அமர்ந்தார். அந்த இடத்தின் அமைப்பைப் பார்த்து மாணாக்கர் வியப்படைந்தனர். "அது என்னவாயிருக்கும்" என்று மாணவர் ஒருவரை ஒருவர் கேட்டனர்.

"இதுவா? இதுதான் காசியப்பனின் வரவேற்பு மண்டபம்" என்று ஆசிரியர் கூறினார்.

''யார் அந்தக் காசியப்பன்?'' பிள்ளைகள் எல்லாரும் கேட்டனர்.

''காசியப்பன் ஓர் அரசன். ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே இலங்கையை ஆண்டவன். அவன் திறமைசாலி. ஓவியம் போன்ற கலைகளில் விருப்பமுள்ளவன். அவன் சிகிரியாவைச் சித்திரக்குன்றம் ஆக்கினான். அவன்தான் இந்தச் சிகிரியாவிலே கோட்டை கொத்தளங்களைக் கட்டி அரசாண்டவன்.

''காசியப்பனின் தந்தை தாதுசேனன். அவன் அனுராதபுரியில் இருந்து அரசாண்டான். காசியப்பன் தந்தையைச் சிறையிலிட்டு அரசைக் கைப்பற்றினான் என்று சொல்லுவார்கள்.

''முறைகேடாக இராச்சியத்தைக் கைப்பற்றிய காசியப்பன் பாதுகாப்பான இடத்தைத் தேடினான்; இந்தச் சிகிரியா மலைதான் அதற்குப் பொருத்தமான இடமென்று எண்ணினான்; சிகிரியாவின் உச்சியிலே அரண்மனையைக் கட்டினான்; அகழிகளை அமைத்தான். இவ்வாறு சிகிரியாவை அவன் பாதுகாப்புடைய இடமாகச் செய்தான். இங்கிருந்து பதினெட்டு ஆண்டுகள் அரசாண்டான். அந்தக் காலத்திலே மலையின் உட்குழிவான இடங்களில் அற்புதமான அழகிய ஓவியங்களையுந் தீட்டுவித்தான்'' என்று ஆசிரியர் காசியப்பனின் வரலாற்றைக் கூறினார்.

''அப்படியா? சிகிரியா ஓவியங்கள் சிலவற்றைப் புத்தகங்களிலும் பார்த்திருக்கிறோம்; முத்திரைகளிலுங் காசுத் தாள்களிலுங் கூடக் கண்டிருக்கிறோம்'' என்றான் நிசார்.

"அது சரி. இப்போது அந்த ஓவியங்கள் எங்கே இருக்கின்றன? அவற்றைப் பார்க்க அந்த இடத்திற்குப் போவோமே!" என்று மாணாக்கர் அவசரப்பட்டனர். அவர்கள் எல்லோரும் படிக்கட்டு வழியாக மேலே ஏறினர். ஐம்பது அடி உயரத்தில் உட்குழிந்த குகை ஒன்றைக் கண்டனர். அங்கேயுள்ள சுவர் கண்ணாடி போலப் பளபளப்பாக அமைந்திருந்தது அச்சுவரிலே பலவகை எழுத்துகள் காணப்பட்டன. அவற்றைப் பார்த்து வியந்துகொண்டு மேலே ஏறினர்.



படம் 12. பல வகை ஆபரணங்கள் அணிந்த அழகிய பெண்.

வழியில் உட்குழிவுடைய வேறொரு சுவர் இருந்தது. அந்த இடத்தை அடைந்ததும், மாணாக்கரின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அங்கே அழகிய வண்ண ஓவியங்கள் இருந்தன. அவை எல்லாம் மங்

ஙகயரின் உருவங்கள். அம்மங்கையரிற் சிலர் கையில் மலர்கள் வைத்திருந்தனர். சிலர் தட்டுகளில் மலரேந்தி நின்றனர். பல்வகை அணிகலன்கள் அணிந்திருந்தனர். வண்ணப் பட்டாடைகளை உடுத்திருந்தனர்.



படம் 13. சில பெண்கள் கையில் மலர் வைத்திருந்தனர்.

"ஆயிரத்தைந்நூறு ஆண்டுகள் சென்ற பின்பும் வண்ணம் மாறாமல் இருக்கின்றன. இது ஆச்சரியமல்லவா?" என்றான் பாலா.

"இவை ஈரயாைச சாந்திலே நுட்பமான முறைகளைக் கையாண்டு வரையப்பட்டவை. அதனாலே தான் இவ் வண்ணங்கள் இவ்வளவு காலஞ் சென்றும் அழியாமல் இருக்கின்றன" என்றார் ஆசிரியர்.

மாணாக்கர் காசியப்பனின் அரண்மனையைப் பார்க்க ஆசைப்பட்டனர். அவ்விடத்திலிருந்து ஒரு வழி வளைந்துவளைந்து மேல்நோக்கிச் சென்றது. மாணாக்கர்களும் ஆசிரியரும் ஒருவர்பின்னொருவராகச் சென்றனர். ஆசிரியர் முன்னே நடந்தார். வளைந்த வழியின் முடிவில் மீண்டும் படிகள் தொடங்கின. அவற்றில் ஏறி மலையின் முன் வாசல் போல் அமைந்துள்ள சிறிய வெளியை அடைந்தனர். அவ்வெளியில் நின்றவாறே மலையின் மேற்பகுதியைப் பார்த்தார்கள்.

"இதோ பாருங்கள்! இவைகளே சிங்கத்தின் முன்னங் கால்கள். அவற்றிலே பெரிய நகங்கள்!" என்றார் ஆசிரியர். சிங்கத்தின் முன்னங் கால்களிடையே படிக்கட்டுகள் இருந்தன.

"இப்படிகளில் ஏறிச் சென்றாற் சிங்கத்தின் வயிற்றுக்குட் போகலாம். போவோமா?" என்றார் ஆசிரியர். மாணாக்கர் சிலர் மேலே ஏறிப்போகப் பயந்தனர். மற்றவர்கள் அவர்களை உற்சாகப்படுத்தி அழைத்துச் சென்றனர். ஓரங்களிலுள்ள இரும்புச் சட்டங்களைப் பிடித்துக்கொண்டு மெல்ல மெல்ல ஏறி மேற்பரப்பை அடைந்தனர்.

மலையின் மேற்பரப்புக் கிட்டத்தட்ட மூன்றரை ஏக்கர் விசாலமானது. அங்கே அரண்மனை, அமைச்சர் இருப்பிடங்கள், அழகிய பூஞ்சோலைகள், நீச்சற் குளங்கள் ஆகியவற்றின் இடிபாடுகள் காணப்பட்டன.

அவர்கள் மலையின் மேல் நின்றுகொண்டே சுற்றும் முற்றும் பார்த்தனர். பழைய கோட்டை கொத்தளங்களும், அகழிகளும், குளங்களும் நன்றாகத் தெரிந்தன. வடக்கிலுந் தெற்கிலும் வாயில்கள் இருந்தன.

''இவ்வளவு உயரத்தில் எவ்வளவு பெரிய நகரம்! அந்த நாளில் இது ஒரு சிறந்த நகரமாக இருந்திருக்க வேண்டும். நேரம் போனதே தெரியவில்லை'' என்றான் பாலா.



படம் 14. அஜந்தாக் குகையிலுள்ள போதிசத்துவர் ஓவியம்.

''இவை போன்ற சுவர் ஓவியங்கள் இந்தியாவிலே அஜந்தா என்னும் இடத்திலும் மலைக் குகைகளிற் காணப்படுகின்றன'' என்றார் ஆசிரியர். மாணவர்

அவைபற்றி அறிய ஆவலுற்றனர். அப்பொழுது, "பண்டைக் காலத்தில் அஜந்தாவில் மலைகளைக் குடைந்து குகைகள் அமைத்தனர். அக்குகைகளின் சுவர்களில் அழகிய ஓவியங்களை வரைந்தனர். அவை புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றன. சில குகைகளில் அழகிய புத்தர் சிலைகளையுங் காண லாம். முதலாவது குகையில் உள்ள போதிசத்துவர் (இது புத்தர் எடுத்த முந்திய பிறவி) ஓவியம் உலகப் புகழ் பெற்றது. அதில் ஒளியும் இருளும் கலந்துள்ள தைப் போன்ற அதிசயமான ஒரு தோற்றம் அமைந் துள்ளது" என்றார் ஆசிரியர்.

அப்பொழுது சூரியனும் உச்சியை அடைந்தான். வெயில் தகதகவென்று கடுமையாகக் காய்ந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. மாணாக்கரும் ஆசிரியரும் மலையிலிருந்து இறங்கினார்கள்.

## வினாக்கள்

I. 1. சிகிரியாவில் எவற்றைக் காணலாம்.

2. சிகிரியாவிற்குச் சித்திரக் குன்றம் என்ற பெயர் எவ்வாறு பொருத்தமானது?

3. சிகிரியாவிலிருந்து அரசாண்ட மன்னன் யார்? அவனது கதையைக் கூறுக.

4. சிகிரியாவிலுள்ள ஓவியங்களைப் பற்றிச் சுருக்க மாகக் கூறுக.

5. சீயகிரி என்னும் சொல்லின் கருத்து என்ன?

II. நீர் பங்குபற்றிய சுற்றுலா ஒன்றினைப்பற்றி நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

# 16

## நாங்களும் செய்வோம்

சித்திரை விடுமுறைக் காலத்தில் மனோகரனும் மஞ்சுளாவும் தங்கள் சிற்றப்பாவின் வீட்டுக்குச் சென்றனர். ஒருநாள் அவர்கள் அவருடன் கடைவீதிகளைப் பார்க்கப் போனார்கள். அங்கு பொம்மைக் கடையொன்று காணப்பட்டது. பலவகைப் பொம்மைகள் அங்கே இருந்தன. ''என்ன அழகான பொம்மைகள், உள்ளே போய்ப் பார்ப்போமா?'' என்று மனோகரன் கேட்டான். சிற்றப்பா அவர்களைக் கூட்டிக்கொண்டு கடைக்குட் சென்றார். மனோகரனும் மஞ்சுளாவும் அங்குள்ள பொம்மைகளை ஆவலுடன் பார்த்தனர். யானைப் பொம்மை ஒன்று தலையை ஆட்டிக்கொண்டு நின்றது. பெண் பாவையொன்று இடுப்பை அசைத்து நடனம் ஆடியது. ஆந்தை ஒன்று கண்களை உருட்டி விழித்துக்கொண்டிருந்தது. ஒரு புறத்திலே துணியினாற் செய்யப்பட்ட பொம்மைகள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மற்றொரு புறத்திலே கடதாசியினாற் செய்யப்பட்ட பொம்மைகள் அடுக்கப்பட்டிருந்தன. மஞ்சுளா துணியினாற் செய்த பாவைப் பிள்ளை ஒன்றை எடுத்தாள். மனோகரன் கடதாசியாற் செய்யப்பட்ட பஞ்சவர்ணக் கிளியொன்றை எடுத்தான். அவற்றைப் புரட்டிப் புரட்டிக் கவனமாகப் பார்த்தனர். கடைக்கார அம்மையார் ''என்ன, புரட்டிப் புரட்டிப் பார்க்கிறீர்கள்? எல்லாம் நல்லவையே'' என்று கூறினார்.

''வேறொன்றும் இல்லை.... இவற்றை எப்படிச் செய்தார்கள் என்றுதான் பார்க்கிறோம்'' என்றாள் மஞ்சுளா.




படம் 15. மஞ்சுளாவும் சிற்றப்பாவும்.

''சரி, பார்க்க வேண்டுமானால் வாருங்கள்; காட்டு கிறேன்'' என்று கூறிக் கடையின் உட்புறத்திற்கு அவர் களை அழைத்துச் சென்றார் அம்மையார். அங்கே ஒரு புறத்திற் சிறுமியர் சிலர் துணிகளாற் பொம்மை கள் செய்து கொண்டிருந்தனர். வேறு சிலர் கடதா சிப் பொம்மைகள் செய்துகொண்டிருந்தனர்.

மஞ்சுளா துணிப் பொம்மைகள் செய்வதைக் கூர்ந்து கவனித்தாள்.

பொம்மை செய்யும் சிறுமிக்கு அருகிற் பல நிறத் துணிகளும் பளிச்சிடும் மணிகளும் பட்டு நூல்களும் மெல்லிய கம்பிகளுங் குண்டூசிகளும் இருந்தன. சிறிய மரத் துண்டுகளும் இருந்தன. அந்தச் சிறுமி நீளமான

கம்பியொன்றை எடுத்து ஒரு மரத்துண்டிலே துளை யிட்டு இறுக்கினாள். அந்த மரத்துண்டை அடிப்பீடம் ஆக்கினாள். மற்றொரு சிறிய கம்பியை எடுத்து வளைத்து கைகளாகப் பொருத்தினாள். அதை அவள் மற்றொரு சிறுமியிடம் கொடுத்தாள். அவள் கம்பியின் உச்சியிலே பந்தம்போலத் துணிகளைச் சுற்றித் தலையாக்கினாள். கைகளுக்கும் உடம்புக்கும் பொருத்தமான துணிகளைச் சுற்றி வடிவாக அமைத் தாள். பட்டு நூல்களையுங் குண்டூசிகளையும் உபயோகித்துப் பொம்மையை அழுத்தமாக்கினாள்.

பின்னர் மூன்றாவது சிறுமி ஒருத்தி, பொம்மையின் தலையிலே கூந்தலை ஒட்டினாள். இரண்டு பிரகாச மான மணிகளை வைத்துத் தைத்துக் கண்களாக் கினாள். பட்டுச் சட்டையையும் பாவாடையையும் பாவைக்கு அணிந்தாள். கைக்குக் காப்பும் கழுத்துக்கு மணி மாலையும் காதுக்கு வளையமும் போட்டாள்.

இப்பொழுது பாவை வேறொரு சிறுமியின் கைக்கு மாறியது. அவள் வண்ணங்களைக் குழைத்துக் கண், வாய், மூக்கு முதலியவற்றைத் தீற்றினாள். பீடத்தை யும் அலங்கரித்தாள். கைகளை ஏற்ற வண்ணம் உயர்த் தியும் தாழ்த்தியும் விட்டாள். அந்தப் பாவை அபி நயம் பிடிப்பது போலத் தோன்றியது.

''நல்ல வடிவான பொம்மை; நானும் செய்யலாம்'' என்றாள் மஞ்சுளா.

''சரி, போகும்போது வேண்டிய சாமான்கள் வாங்கித் தருகிறேன்'' என்று சிற்றப்பா கூறினார்.

மனோகரன் கடதாசியாற் பொம்மைகள் செய்வதைப் பார்த்துக்கொண்டு நின்றான். அவ்விடத்தில் ஒரு சீமெந்து அச்சு இருந்தது. அந்த அச்சில் ஒரு பள்ளம் இருந்தது. அந்தப் பள்ளம் கிளி வடிவில் அமைந்திருந்தது. அந்த வடிவம் பாதி வடிவம். மற்றைப் பாதிக்குரிய அச்சும் பக்கத்தில் இருந்தது. ஒரு சிறுமி கடதாசித் துண்டுகளை நீரில் நனைத்து அச்சில் உள்ள பள்ளத்தில் ஒட்டினாள். உருவத்தில் நன்றாகப் பொருந்தும்படி அழுத்திவிட்டாள். பின்பு பசை பூசிய கடதாசிகளை ஒன்றின்மேல் ஒன்றாக ஒட்டினாள். ஏழெட்டுப் படைகள் ஒட்டினாள்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு நின்ற மனோகரனுக்கு ஒரு சந்தேகம் உண்டானது. ''இந்த அச்சுகள் எந்தக் கடையிலே விற்கின்றன?'' என்று கேட்டான்.

பக்கத்தில் நின்ற அம்மையார், ''தம்பி, இது கடையில் வாங்குகிற பொருள் இல்லை; நாங்கள் செய்தது'' என்றார்.

''அப்படியா? எப்படிச் செய்தீர்கள்?'' என்று மனோகரன் கேட்டான்.

அதற்கு அம்மையார் சொல்கிறார்: ''கேளும் தம்பி, செய்ய விரும்பும் உருவத்தைக் களி மண்ணாற் செய்ய வேண்டும். அதை இரண்டு பாதியாக்க வேண்டும். பாதியைக் கவிழ்த்து வைத்து அதன் மேல் சீமெந்தைக் கூழ் போலக் கரைத்து வார்க்க வேண்டும். சீமெந்து காய்ந்த பின் களி மண் உருவத்தை அகற்றிவிட்டால் நமக்கு வேண்டிய அச்சுக் கிடைக்கும்''

''அச்சிலே கடதாசிகளை ஒட்டுகிறார்களே! உருவத்தைக் கழற்றி எடுப்பது எப்படி?'' என்றான் மனோகரன்.

''சிறிது நேரம் உலர விட்டால் உருவம் இலகுவாகக் கழன்று வரும். அப்படி வருவதற்காகத்தான், முத லிலே பசையைப் பூசாமல், தண்ணீர் பூசிக் கடதாசியை அச்சிலே பதிக்கிறோம்'' என்றார் அம்மையார்.

மனோகரன் அப்பாற் சென்றான். அங்கு ஒரு சிறுமி இளி உருவத்தின் இரு பாதிகளை இணைத்துக்கொண் டிருந்தாள். இணைந்த உருவத்துக்கு வேறொரு சிறுமி வெண்சுதை பூசிக் காய வைத்தாள்.

வேறொருத்தி காய்ந்த பாவைகளுக்கு அரத் தாளிட்டு அழுத்தமாக்கினாள். பின்பு பல வண்ணங் களைப் பூசினாள்.

மனோகரனுக்குத் தானும் இது போன்ற பாவை களைச் செய்ய வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று.

சிற்றப்பா மஞ்சுளாவுக்கும் மனோகரனுக்கும் இரண்டு பாவைகள் வாங்கிக் கொடுத்தார். அவர்கள் கடைக்கார அம்மையாருக்கு நன்றி கூறி விடை பெற்றனர்.

## வினாக்கள்

1. சீலைப் பொம்மை செய்தற்கு வேண்டிய பொருள் கள் எவை?
2. கடதாசிப் பொம்மை செய்தற்கு உரிய அச்சு எவ்வாறு செய்யப்படுகிறது?
3. முதலில் கடதாசியை நீரில் நனைத்து அச்சில் ஒட்டுவதற்குக் காரணம் யாது ?
4. சீலையாலான பெண் பொம்மையின் தலை எவ்வாறு அமைக்கப்பெறுகிறது?
5. வண்ணம், அபிநயம், தீற்றுதல், அச்சு ஆகிய சொற்களை விளக்குக.

# 17

## நோன்புப் பெருநாள்

மாலை ஆறு மணி இருக்கும். கடற்கரையிலே சனக் கூட்டம் நிறைந்திருந்தது. எல்லோரும் வானத்தைப் பார்த்துக்கொண்டு நின்றனர். அவர்கள் அனைவரும் முஸ்லிம்கள். அந்த வழியாற் சென்றுகொண்டிருந்த முருகுப்பிள்ளை அவருடைய நண்பர் முஸ்தபாவைப் பார்த்து ''என்ன, எல்லோரும் வானத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்?'' என்றார்.

''இன்று, எங்கள் நோன்பு முடியும் நாளாகிவிட்டது. அதை முடிப்பதற்குப் பிறை தெரிகிறதா என்று பார்த்துக்கொண்டு நிற்கிறோம்'' என்றார் முஸ்தபா.

''பிறை காணாவிட்டால் நோன்பை முடிக்க முடியாதா?'' என்றார் முருகுப்பிள்ளை.

''இல்லை, கண்டு பிடி, கண்டு விடு'' என்பார்கள். முதற் பிறை கண்டுதான் நோன்பு பிடிக்க வேண்டும். ஒரு மாதம் முடியப் பிறை கண்டுதான் விட வேண்டும். இன்று பிறை கண்டால் நாளை பெருநாள், இல்லாவிட்டால் அடுத்த நாள்'' என்றார் முஸ்தபா.

அப்பொழுது ''கண்டுவிட்டேன், கண்டுவிட்டேன்'' என்று முஸ்தபாவின் மகனான அன்வர் கத்தினான். எல்லோரும் வானத்தைப் பார்த்தார்கள். அங்கு பிறை தெரிந்தது.

''பிறை கண்டுவிட்டோம். ஆகையால் நாளைக்குப் பெருநாள் கொண்டாடப் போகிறோம். நீங்கள் நாளைக்கு மத்தியானம் எமது வீட்டுக்கு விருந்துக்கு வாருங்கள்'' என்றார் முஸ்தபா.

''நன்றி; கண்டிப்பாக வருகிறேன்'' என்று சொல்லி விட்டுத் தன் வழியே சென்றார் முருகுப்பிள்ளை.

அன்வரின் வீட்டில் அதிகாலைத் தொழுகைக்காக வழக்கம்போல எல்லோரும் எழும்பினர். முஸ்தபாவும் அவர் மகனும், 'சுபஹ்' தொழுகைக்குப் பள்ளிக்குச் சென்றனர். பெண்கள் 'சுபஹ்' ஐ வீட்டில் முடித்துக் கொண்டு காலை உணவு தயாரிப்பதில் ஈடுபட்டனர்.

பள்ளிவாசலிலிருந்து வந்ததும் 'மகனே, இன்று நோன்புப் பெருநாள் அல்லவா? குளிப்பது முக்கிய மான ஸுன்னத் அல்லவா? என்று மகனைக் குளிப் பதற்கு அழைந்துச் சென்றார் முஸ்தபா.

தகப்பனும் மகனும் குளித்துவிட்டு வரத் தாயும் மகளும் புத்தாடை அணிந்து அவர்களை வரவேற்றனர். 'என்ன அப்பா, அம்மாவும் தங்கச்சியும் பெருநாள் உடை அணிந்து அழகாக இருக்கிறார்களே' என்றான் அன்வர். ''ஆமாம், சாப்பிட்டு விட்டு நீயும் உன் புது உடைகளை அணிந்துகொள்'' என்று அம்மா கூறினார்.

எல்லோரும் அமர்ந்து மகிழ்ச்சியுடன் உரையாடிக் கொண்டே சாப்பிட்டு முடித்தனர். தகப்பனார் எல் லோருக்கும் நறுமணம் பூசினார்.

எல்லா வீடுகளிலும் மக்கள் காலையிற் குளிப்பதிலும புதிய உட்டைகளை அணிவதிலும் நறுமணம் பூசுவதி லும் ஈடுபட்டிருந்தனர். எங்கும் ஒரே கலகலப்பும் மகிழ்ச்சியுமாக இருந்தது.

அன்வரின் தாயார் பக்கத்து வீடுகளுக்கும், நண்பர் கள் உறவினரின் வீடுகளுக்கும் பலகாரங்களை அனுப் பினார். அதேபோல அவர்களுடைய வீட்டுக்கும் மற்ற வீடுகளிலிருந்து பலகாரங்கள் வந்தன. பெருநாள் தினத்தில் இப்படி அன்பளிப்புகள் கொடுப்பது வழக்க மாகும்.

அப்போது பக்கத்துப் பள்ளிவாசலிலிருந்து ''அல் லாஹு அக்பர்'' என்று தக்பீர் முழக்கம் கேட்டது. உடனே அன்வரும் தகப்பனாரும் பெருநாள் தொழு கைக்காகப் பள்ளிக்குப் புறப்பட்டனர்.

வீதிகள் தோறும் பெரியவர்களும் சிறியவர்களும் அணி அணியாகச் சென்றுகொண்டிருந்தனர். எல் லோரும் புத்தாடை புனைந்திருந்தனர். நறுமணம் பூசியிருந்தனர். ஒருவருக்கொருவர் ஸலாம் கூறிக் கொண்டே பள்ளியை அடைந்தனர்.

அங்கு எல்லோரும் பெருநாள் தொழுகையில் ஈடுபட்டனர். பள்ளியில் விசேட மார்க்கப் பிரசங்கம் நடந்தது. பெருநாளின் பெருமையையும் பெருநாளன்று முஸ்லிம்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் இமாம் அவர்கள் தமது பிரசங்கத்தில் எடுத்துக் கூறினார்.

தொழுகை முடிந்ததும் அனைவரும் ஒருவரை ஒருவர் இறுகக் கட்டியணைத்து முஸாபஹா செய்தனர். இதில் அறிந்தவர் அறியாதவர், தெரிந்தவர் தெரியாதவர், கோபமாக இருந்தவர், நண்பர் என்ற வித்தியாசமில் லாமல் கைகளைப் பிடித்து ஸலாம் கூறினர். நபிகள் (ஸல்) மீது ஸலவாத் கூறிக்கொண்டே இந்த நிகழ்ச்சி நீண்ட நேரம் நடந்தது. இதனால் அன்பு பெருக் கெடுத்து ஓடியது. ஒற்றுமை வலிமை பெற்றது.

அன்வர் வீட்டுக்கு வந்ததும் வீட்டிலுள்ளவர் களுடன் ஸலாம் சொல்லி முஸாபஹா செய்து கொண்

டான். பின் தாயிடம் சென்று பெருநாட் காசு கேட்டான். தாயார் தன் மகனுக்குப் புதிய ஐந்து ரூபாய் நாணயம் ஒன்று கொடுத்தார். மகிழ்ச்சியிற் சிட்டாகப் பறந்து வெளியே சென்றான்.

இனிப்புப் பண்டங்களும் சர்பத்தும் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடி வந்தான். எல்லாருக்கும் பங்கிட்டுத் தானும் அருந்தினான். அறுசுவை உணவு தயாரிப்பதில் அன்வரின் தாயாரும் தங்கை ஆயிஷா வும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

அன்வரும் தகப்பனாரும் ளுஹர் தொழுகைக்காகப் பள்ளிக்குச் சென்றனர். பெண்களோ வீட்டில் தொழு கையை முடித்துக்கொண்டு அறுசுவை உணவை எடுத்து வைப்பதில் ஈடுபட்டனர். ஆயிஷா அழகிய பாயொன்றைக் கூடத்தில் விரித்தாள்; உணவு வகை களை வைத்தாள்; பழங்களையும் வைத்தாள்; இனிப்புப் பண்டங்களையும் கொண்டு வந்து வைத்தாள்.

அன்வரும் தகப்பனாரும் வீட்டுக்கு வந்தனர். நண் பர்களைப் போய்க் காண விரும்பினான் அன்வர்; அதற்கு முன்னே பகலுணவு உண்ண எண்ணினான். தகப்பனார் அதற்கு அனுமதிக்கவில்லை.

"இன்று என் நண்பர் முனசிங்காவும் முருகுப்பிள்ளை யும் வருவார்கள். அவர்களுடன் நாம் சாப்பிடலாம்" என்றார் அவர். அவர் சொல்லி வாய் மூடு முன், நண்பர்கள் இருவரும் ஒன்றாகவே வந்து சேர்ந்தனர். அவர்களை மகிழ்வோடு கை குலுக்கி வரவேற்றார் முஸ்தபா.



படம் 16. முஸ்தபா விருந்தினரை உபசரித்தார்.

சாப்பிடும் போது, "நன்றாகச் சாப்பிடுங்கள், நன்றாகச் சாப்பிடுங்கள்" என்று விருந்தினரை உபசரித்தார் முஸ்தபா. "நீங்கள்தான் நிறையச் சாப்பிட வேண்டும். ஒரு மாதமாகச் சாப்பிடவில்லையல்லவா?" என்றார் முருகுப்பிள்ளை.

"என்ன, ஒரு மாதமாகச் சாப்பிடவில்லையா?" என்று கேட்டார் முனசிங்கா. "அப்படி ஒன்றும் இல்லை. பகலில் மட்டும் சாப்பிடாமல், குடிக்காமல் நோன்பு இருப்போம்" என்று விளக்கினார் முஸ்தபா.

"ஒன்றும் குடிப்பதுமில்லையா?" என்று வினவினார் முனசிங்கா.

''இல்லை, அதிகாலை கிழக்கு வெளித்ததில் இருந்து பொழுது படும் வரை உண்ணாமலும் குடிக்காமலும் இருக்க வேண்டும்.''

''அப்படியானால் இரவில் நன்றாகச் சாப்பிடலாம் தானே'' என்றார் முருகுப்பிள்ளை. ''வழமைபோலவே இரவுச் சாப்பாடு சாப்பிடுவோம்'' என்று கூறினார் முஸ்தபா.

''உங்கள் சமயத்தில் நோன்பு நோற்பது ஏன் கடமையாக்கப்பட்டுள்ளது?'' என்று தமது நீண்ட நாள் சந்தேகத்தை வெளிப்படுத்தினார் முனசிங்கா.

''அதற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமாக ஏழை மக்களின் பசியைப் பணக்காரர் அறிந்து கொள்ள வேண்டும் என்பது ஒரு காரணம்''.

''இவ்வளவு தானா?''

''இல்லை, இல்லை, நோன்பை அல்லாஹ்வுக்காகப் பிடிக்கின்றோம். எனவே, அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் பண்பு மனிதனுக்கு ஏற்படுகிறது. மனத்தில் ஏற்படுகின்ற ஆசைகளை அடக்கவும் இந்த நோன்பு பயிற்சி தருகிறது.

''எனக்கு விளங்கிவிட்டது. ஆசையே அழிவுக்குக் காரணம் என்று எங்கள் சமயத்திலும் இருக்கிறது. கட்டாயம் மனிதன் ஆசைகளை அடக்கப் பழக வேண்டும்'' என்று முனசிங்கா கூறினார்.

இப்படியாக உரையாடிக்கொண்டே விருந்தினர் சாப்பிட்டு முடித்தனர். மூவரும் முற்றத்து மர நிழலில் அமர்ந்தனர். அன்வர் தனது தங்கை ஆயிஷாவுடன் விளையாடத் தொடங்கினான். சிறிது நேரத்தில்

விருந்தினருக்குக் கோப்பி வழங்கப்பட்டது. அவர்கள் அருந்தி முடிந்ததும் தம்மை அழைத்து விருந்து கொடுத்துக் கௌரவித்தமைக்கு நன்றி கூறி விடை பெற்றனர்.

முஸ்தபாவும் மகன் அன்வரும் சிறிது ஓய்வு எடுத்த பின் தொழுகையை முடித்துக்கொண்டு இன சனத்தினர் இல்லங்களுக்குச் சென்று 'ஸலாம்' கூறி அளவளாவினர். இப்படியாக முஸ்லிம்கள் பெருநாளன்று உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் செல்வர்; ஸலாம் கூறி உரையாடுவர்; அன்பளிப்புப் பரிமாறுவர். உபசரித்து மகிழ்வர்.

## வினாக்கள்

1. கடற்கரையில் ஏன் மக்கள் கூடி நின்றனர்?

2. நோன்புப் பெருநாளன்று முஸ்லிம்கள் செய்யும் முக்கிய கருமங்கள் என்ன?

3. பெருநாள் தொழுகைக்காகப் பள்ளிக்குச் சென்ற முஸ்லிம்கள் அங்கு செய்யும் கருமங்கள் எவை?

4. நோன்பினால் ஏற்படுகின்ற பயன்கள் சில கூறுக.

5. பாடத்தில் வரும் மூன்று தொழுகைகளைத் தருக.

6. பின்வரும் அரபுச் சொற்களுக்குப் பொருளைத் தெரிந்துகொள்க:

   இமாம், ஸலாம், முஸாபஹா, அல்லாஹு அக்பர், தக்பீர்

II. அன்று காலை தபால்காரன் வந்து 'கிணிங் கிணிங்' என்று மணியடித்தான். பாலா அவனிடம் கடிதத்தைப் பெற்றதும் அதைத் திறந்து வாசித்தான்... அவன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.....
(இதைத் தொடர்ந்து எழுதுக)

## 18

## மகிழ்ந்தான் பையன்

தெருவெலாம் வெடி முழக்கம்
　　தீனோரின் மறை முழக்கம்
அருவியின் ஓட்ட நீராய்
　　அகத்தினைத் தூய்மை செய்யும்.
குருவியாய் இளைஞ ரெல்லாம்
　　குதூகலிக் கின்றார்; நாளை
பெருநாளாம் அதனை எண்ணிப்
　　பெருமையால் மகிழ கின்றார்.

புத்தாடை பூண்டார்; நல்ல
　　புதுமணம் பூசிக் கொண்டார்;
சித்திரம் போன்று பள்ளி
　　செல்கிறார்; அவரைக் காண
எத்தனை கோடிக் கண்கள்
　　இருந்தாலும் போதா வாகும்.
வித்தகர் பலரும் அங்கு
　　விரைகிறார் கொள்ளை இன்பம்.

தெருவிலே அங்கோர் பையன்
தேம்பியே அழுது நின்றான்;
ஒருவரும் அவனைப் பாரா (து)
ஊமையாய்ப் போகின்றார்கள்
பெருமானார் அவனைக் கண்டு
பிரியமாய் அருகிற் சென்று
''அருமையே! அன்பே! ஏனோ
அழுகிறாய்?'' என்று கேட்டார்.

''உறவினர் யாரும் இல்லை;
உதவுவார் காண வில்லை;
பெருமையாய் என்னைப் போன்ற
பிள்ளைகள் செல்லல் காண
உருகுது நெஞ்சம், இந்த
உலகத்தோர் செயலை எண்ண!
வருகிறேன் நபியே'' என்று
வழியினை நோக்கு கின்றான்.

வறுமையில் தோய்ந்து வாழ்ந்த
வள்ளலெம் நபிகள் நாதர்
சிறுவனின் துய ரறிந்து
சிந்தையில் இரக்கம் கொண்டு
''வருக! என்னுடனே'' என்று
வாஞ்சையோ டழைத்துச் சென்றார்
அருமையாய் அலங்க ரித்தே
அனுப்பினார் மகிழ்ந்தான் பையன்.

அன்பு முகையதின்

## விளக்கக் குறிப்புகள்

அருவி - ஆறு; அகம் - உள்ளம்;
வாஞ்சை - விருப்பம்.

## வினாக்கள்

1. இளைஞர் குதூகலிப்பதற்குக் காரணம் என்ன?
2. சிறுவன் ஏன் அழுதான்?
3. பெருமானார் எவ்வாறு சிறுவனின் துயர் நீக்கினார்?
4. பின்வருஞ் சொற்களின் பொருள் விளங்குமாறு அவற்றை வைத்து வாக்கியம் எழுதுக.
   அ. சித்திரம்
   ஆ. முழக்கம்
   இ. வறுமை
   ஈ. இரக்கம்
   உ. பிரியம்

## 19

# இராமன்

முன்னொரு காலத்திலே வட இந்தியாவிலுள்ள கோசல நாட்டைத் தசரதன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்னும் மனைவியர் மூவர் இருந்தனர். பல ஆண்டுகளாக அவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்க வில்லை. அதனாலே துக்கமடைந்த அரசன் புத்திரப் பேற்றை விரும்பி ஒரு யாகஞ் செய்தான்.



படம் 17. இராமன்.

அந்த யாகத்தின் பயனாக, கோசலை இராமனைப் பெற்றாள். கைகேயி பரதனைப் பெற்றாள். சுமித்திரை இலக்குமணனையும் சத்துருக்கனையும் பெற்றாள். பிள்ளைகள் நால்வரும் கல்வியிலும் வில்வித்தையிலும் சிறந்து விளங்கினர். ஒரு நாள் விசுவாமித்திரர் என்னும் முனிவர் அரச சபைக்கு வந்தார். தசரதன் அவரை வரவேற்று உபசரித்தான். முனிவர் தமது வேள்வி நன்கு நடைபெறுதற்குத் துணையாக இராமனைத் தரும்படி கேட்டார். இராமன் சிறு பிள்ளை ஆதலால் அவனை அனுப்ப அரசன் விரும்பவில்லை. ஆயினும் முனிவரின் கோபத்திற்கு ஆளாக வேண்டுமெனப் பயந்தான். அதனால் அவரது விருப்பத்திற்கு இணங்கி, இராமனை அவருடன் அனுப்பினான். இராமனுக்குத் துணையாக இலக்குமணனும் சென்றான். முனிவர் செய்த வேள்வியை இராமனும் இலக்குமணனும் காத்தனர். வேள்விக்கு இடையூறு செய்ய வந்த அரக்கர்களை அழித்தனர். வேள்வி இனிது நிறைவேறியது. முனிவர் மிக மகிழ்ச்சி அடைந்தார்.

முனிவர் அவ்விருவரையும் கூட்டிக்கொண்டு மிதிலை நகருக்குச் சென்றார். மிதிலையைச் சனகன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்குச் சீதை என்னும் அழகிய மகள் இருந்தாள். சனகனிடத்தில் ஒரு பெரிய தெய்வ வில் இருந்தது. அந்த வில்லை வளைப்பவனுக்கே தனது மகளை மணஞ் செய்து கொடுப்பதாக எங்கும் அறிவித்தான். அரச குமாரர் பலர் மிதிலைக்குச் சென்றனர். வில்லைச் சிறிதும் அசைக்கவும் முடியாதவராய்த் தோல்வியுற்றனர்.

இராமன் அந்த வில்லை மிக எளிதாக எடுத்து வளைத்து முறித்து விட்டான். சனகன் தனது மகளை இராமனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.

இராமன் சீதையுடன் அயோத்திக்குச் சென்றான். தான் முதுமை அடைந்துவிட்டபடியால், தசரதன் இராமனுக்கு முடி சூட்ட முடிவு செய்தான். அச் செய்தி நாடெங்கும் பரவியது. இராமன் முடி சூடு வதை நாட்டு மக்கள் விரும்பினர். கூனி என்னும் ஒருத்தி மட்டும் விரும்பவில்லை. கூனி கைகேயியின் தோழி. அவள் கொடியவள்; சூழ்ச்சிக்காரி. இராமனைக் காட்டுக்கு அனுப்பி, பரதனை மன்னனாக்கத் திட்ட மிட்டாள். தன் திட்டத்தைக் கைகேயியிடம் தெரி வித்தாள்.

கைகேயி முதலில் அதற்கு இணங்கவில்லை. பின்னர் கூனியின் தந்திரப் பேச்சினால் மனம் மாறினாள். தச ரதனிடம் அந்த விருப்பத்தைத் தெரிவித்தாள். தச ரதன் அவ்விருப்பம் நீதியற்றது எனக் கூறினான். ஆனால், கைகேயி பிடிவாதமாக நின்றாள்.

கைகேயியின் பிடிவாததைதைக் கண்ட அரசன் பெருந் துயர் கொண்டு மயங்கி விழுந்தான்.

கைகேயி இராமனை அழைத்தாள். பதினான்கு ஆண்டுகள் இராமன் காட்டில் வசிக்க வேண்டும் என் பதும் பரதன் முடி சூடி நாடாள வேண்டும் என்பதும் அரசனது கட்டளை எனத் தெரிவித்தாள். இராமன் அக்கட்டளையை நிறைவேற்ற இசைந்தான். உடனே சீதையுடனும் இலக்குமணனுடனும் மரவுரி அணிந்து தவக்கோலம் பூண்டு காட்டுக்குச் சென்றான். கங் கைக் கரையில் இருந்த வேடர் தலைவனாகிய குகன் என்பவன் இவர்களுக்கு நண்பன் ஆயினான். அவனது உதவியுடன் கங்கையைக் கடந்து ஓரிடத்திலே தங்கி யிருந்தனர்.



படம் 18. சிதை.

இராமன் காடு சென்றதை அறிந்து தசரதன் உயிர் துறந்தான். அப்பொழுது பரதன் கேகய நாட்டில் இருந்தான். அவனை உடனே வரும்படி செய்தி அனுப்பினர். அவன் கோசல நாட்டின் தலைநகரான அயோத்திக்கு வந்தான். வந்த பரதன் தந்தை இறந்ததையும் தமையன் காடு சென்றதையும் அறிந்தான். அவற்றுக்குக் காரணமாக இருந்த தன் தாயை மிக வெறுத்துப் பேசினான். அரச பொறுப்பை ஏற்க மறுத்தான். இராமனை அழைத்து வரப் புறப்பட்டான். குகனின் உதவியுடன் இராமன் இருந்த இடத்தை. அடைந்தான். தந்தை இறந்ததைத் தெரிவித்தான். அரச பொறுப்பை ஏற்கும்படி வேண்டினான். தந்தையின் கட்டளைப்படி பதினான்கு ஆண்டுகள் காட்டில் இருப்பது தன் கடமை என்று

இராமன் கூறினான். தான் அயோத்திக்கு மீளும்வரை ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்படி கூறினான். பரதன் தமையன் சொற்படி நடக்க இசைந்தான். அயோத்திக்குச் சென்று தவக்கோலம் பூண்டு நாட்டைக் காத்து வந்தான்.

இராமன், இலக்குமணன், சீதை ஆகிய மூவரும் நெடுந்தூரம் நடந்து தண்டக வனத்திற்குச் சென்றனர். அங்கு, சூர்ப்பனகை என்னும் அரக்கி வந்தாள். அவள் இலங்காபுரி மன்னவனான இராவணனின் தங்கை. அவள் இராமனைக் கண்டு ஆசை கொண்டாள். சீதையை இராமனிடமிருந்து பிரிக்க முயன்றாள். அதனாற் கோபமடைந்த இலக்குமணன் சூர்ப்பனகையின் மூக்கை வெட்டிவிட்டான். அவள் அழுது கொண்டு இராவணனிடம் சென்றாள். அவனிடம் சீதையின் அழகை வருணித்தாள். தனக்கு நேர்ந்த அவமானத்தைத் தெரிவித்தாள்.

இராவணன் மிக்க வலிமை படைத்தவன். அவன் அரக்கர்களின் அரசன். மாயச் செயல்களில் வல்லவன். அவன் சீதையைக் கவர்ந்து செல்ல எண்ணினான். அதற்காக ஒரு சூழ்ச்சி செய்தான்.

இராவணனின் விருப்பப்படி அவனுடைய மாமனான மாரீசன் ஓர் அழகிய மான் உருவமெடுத்துச் சீதையின் முன் நின்றான். அதனைப் பிடித்துத் தரும்படி சீதை வேண்டினாள். இராமன் அதனைப் பிடிக்கச் சென்றான். அது நெடுந்தூரம் ஓடியது. அதனால், இராமன் ஓர் அம்பை எய்தான். மான் இறந்தது. இறக்கும்போது 'இலக்குமணா' என உரத்து அழைத்தது. அந்தக் குரலைக் கேட்ட இலக்குமணன் இராமனுக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்ததோ என எண்ணி அத்திசை நோக்கி விரைந்து சென்றான்.

அப்பொழுது சீதை தனிமையில் இருந்தாள். இராவணன் உடனே சீதையிருக்குமிடம் சென்று அவளைத் தன் புட்பக விமானத்தில் ஏற்றிக்கொண்டு இலங்கையை அடைந்தான். அங்கு அவளைச் சிறை வைத்தான்.



படம் 19. இராவணன்.

திரும்பிப் போன இராமனும் இலக்குமணனும், சீதையைக் காணாது மிக்க துயரம் கொண்டனர். சீதை

யைத் தேடிப் புறப்பட்டனர். வழியிலே, குற்றுயிராய்க் கிடந்த சடாயு என்னுங் கழுகரசனைக் கண்டனர். அவன் தசரதனின் நண்பன். பறவைகளின் அரசன். சீதையை அரக்கன் ஒருவன் தென் திசையாக கொண்டு சென்றதையும் தான் அவனோடு போர் செய்து வெட்டுண்டதையும் கூறி, சடாயு உயிர் துறந்தான்.



படம் 20. அனுமன்.

இராமனும இலக்குமணனும் தெற்கு நோக்கிச் சென்றனர். வழியிலே அனுமன் என்னும் வானர வீரன் அவர்களைக் கண்டான். அவன் தன் தலைவனான சுக்கிரீவனிடம் அவர்களை அழைத்துச் சென்றான். சுக்கிரீவன் வாலியின் தம்பி. அவன் வாலியுடன் பகை கொண்டிருந்தான். வாலி வானரர்களின் வேந்தன். இராமன் வாலியைக் கொன்று சுக்கிரீவனை அரசன் ஆக்கினான்.

சுக்கிரீவன் சீதையைத் தேடுவதற்காக நாற்றிசையும் தன் வீரர்களை அனுப்பினான். தெற்கே சென்ற வீரர்களுள் அனுமனும் ஒருவன். அவன் கடலைக் கடந்து இலங்கையை அடைந்தான். இலங்காபுரியில், அசோக வனத்திலே சீதை இருப்பதைக் கண்டான். இராமனிடம் மீண்டு வந்து சீதை இலங்கையில் இருப்பதைத் தெரிவித்தான். இராம இலக்குமணர் வானர சேனையோடு இலங்கையை நோக்கிப் புறப்பட்டனர். வழியிலே கடல் குறுக்கிட்டது. அதைக் கடப்பதற்கு ஓர் அணையைக் கட்டினர். அதன் வழியே இலங்கையை அடைந்தனர். இராம சேனை இலங்கையை அடைந்த செய்தி இராவணனுக்கு எட்டியது. அவன் இராமனுடன் போர் புரிய எழுந்தான். அப்பொழுது அவன் தம்பியாகிய விபீடணன் சீதையைச் சிறையிலிருந்து விடும்படி புத்தி சொன்னான். இராவணன் தன் தம்பியின் புத்திமதியைக் கேளாது அவனைத் துரத்தி விட்டான். அவன் இராமனிடம் அடைக்கலம் புகுந்தான்.

இரு பகுதியினருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. அரக்கர் பல மாயைகளைச் செய்தனர். அவைகள் யாவும் இராம இலக்குமணர்களிடம் பலிக்கவில்லை. அரக்க வீரர்களும் அவர்களின் படைத் தலைவர்களும் இறந்தனர் இராவணனின் தம்பியான கும்பகருணனும் இறந்தான். இராவணனது புதல்வனான இந்திரசித்துவும் இறந்தான். ஈற்றில் இராவணனும் இராம பாணத்தினால் உயிர் துறந்தான். போர் முடிந்ததும் இராமன் விபீடணனை இலங்கைக்கு அரசன் ஆக்கினான். சீதையை மீட்டுக்கொண்டு இலக்குமணனுடனும் ஏனைய வீரர்களுடனும் புட்பக விமானத்தில் ஏறி அயோத்தியை அடைந்தான். பரதனிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை இராமன் ஏற்று மன்னனாக முடி சூடினான். அவன் நீதி வழுவாது நெடுங்காலம் ஆட்சி புரிந்தான்

## வினாக்கள்

I 1. இராமனது தந்தை யார்? தாய் யார்? சகோதரர் யாவர்?

2. இராமனுடன் இலக்குமணனையும் அழைத்துச் சென்ற முனிவர் யார்? ஏன் அழைத்துச் சென்றார்?

3. சடாயு யார்? அவன் இராம இலக்குமணருக்குக் கூறிய செய்தி யாது?

4. இராவணன் யார்? அவன் எப்படியானவன்?

5. பின்வரும் சொற்களை விளக்குக.

யாகம், கட்டளை, அவமானம், அடைக்கலம், குற்றுயிர், பிடிவாதம், திட்டம்.

## II கடிதம் எழுதுதல்

கடிதம் எழுதுதல் ஒரு கலை. தூரத்திலுள்ள பெற்றோருக்கோ மற்றும் உறவினர்களுக்கோ நண்பர்களுக்கோ கடிதம் எழுதுகிறோம். கடிதம் வந்ததும் ஆவலோடு அதைப் பிரித்து வாசிக்கிறோம். அப்பொழுது நாங்கள் எதிர்பார்த்த திருப்தியைப் பெறும் முகமாகக் கடிதம் எழுதவேண்டும். நாம் எதைப் பற்றி எழுதுகிறோமோ, அதைப் பற்றிய விடய விளக்கம் மயக்கமின்றித் தெளிவாக அமைதல் வேண்டும். கடிதத்தை வாசிப்பவர்கள் தாமும் வாசிப்பதுடன் அடுத்தவர்களுக்கும் வாசித்துக் காட்டி இன்புறும் நிலை அமைதல் வேண்டும். துக்கத்தில் ஆழ்ந்திருப்போரைக் கடிதங்கள் தேற்ற வேண்டும்; போற்றுதற்குரியோரைப் போற்ற வேண்டும்.

கடிதங்கள் எழுதப்படும்பொழுது வலப்பக்க மேல் மூலையில் எழுதுவோரின் விலாசமும் அதன் கீழ்த் திகதியும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

யாருக்குக் கடிதம் எழுதுகிறோமோ அவர்களைக் கடிதத்தில் விளித்து எழுதுவது வழக்கம். அன்புமிக்க அப்பா / அம்மா என்று விளித்து எழுதுபவர்கள் முடிவில் இப்படிக்கு, தங்கள் அன்பு மகன் / மகள் என்று முடிப்பார்கள்.

அன்புள்ள மாமாவுக்கு / மாமிக்கு என்று தொடங்குபவர்கள் தங்கள் உறவுப் பெயரைக் குறிப்பிட்டு, அதாவது மருகன் மருமகள் என எழுதி முடிப்பார்கள்.

நண்பர்களுக்குக் கடிதம் எழுதுபவர்கள் ஏற்றவகையில்,

ஆருயிர் நண்பன் / நண்பி
அன்பு நண்பன் / நண்பி
அன்புசால் நண்பன் / நண்பி
பிரிய நண்பன் / நண்பி

என்றவாறு விளித்து அதற்கேற்ற வகையிலே தங்கள் அன்புள்ள நண்பன் / நண்பி என்று முடிப்பார்கள். ஆனால் அதிபர் ஆசிரியர்களுக்குக் கடிதம் எழுதுமிடத்து முடிவில் தங்கள் கீழ்ப்படிவுள்ள மாணவன் என்று முடிப்பார்கள்.

எவரொருவருக்குக் கடிதம் எழுதுகிறோமோ அவரவர்களுக்கு ஏற்ற வகையில் தொடக்கமும் முடிவும் அமைதல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாதிரிக் கடிதம்

வெளியூரில் வேலை பார்க்கும் உமது தந்தைக்கு உங்கள் பாடசாலையில் நடைபெற்ற ஒரு வைபவத்தைப் பற்றி ஒரு கடிதம் எழுதுங்கள்.

கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்,
12.12.1991.

அன்புள்ள அப்பாவுக்கு,

வணக்கம்: உங்கள் கடிதம் கிடைத்தது. உங்கள் நலமறிந்து மகிழ்ந்தோம். சென்றமாதம் பத்தாம் நாள், எமது பாடசாலையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. பாடசாலை மாவிலைத் தோரணங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு, கண்கொள்ளாக் காட்சியளித்தது.

எமது பிரதேசக் கல்விப் பணிப்பாளரைப் பிரதான விருந்தினராக அழைத்திருந்தோம். பாடசாலை மண்டபம், மாணவர் ஆசிரியர், பெற்றோர்களால், நிறைந்து வழிந்தது. பிரதம விருந்தினர், எமது பாடசாலையையும், ஆசிரியர்களையும், மாணவர்களது திறமைகளையும் பாராட்டிப் பேசினார். வகுப்பில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. க.பொ.த.சாதாரண பரீட்சையில் விசேட சித்திகள் பெற்றவர்களுக்குத் தங்கப் பதக்கங்கள் பரிசளிக்கப் பட்டன. பிரகாஷ் அண்ணாவும், விசேட சித்திகளுடன் சித்தி பெற்றமைக்காகத் தங்கப் பதக்கம் பெற்றார்.

இறுதி நிகழ்ச்சியாக, கலை நிகழ்ச்சி இடம்பெற்றது. "தொழிலின் மகதத்துவம்" என்ற நாடகம் அனைவரையும் கவர்ந்தது. உழவனாக நான் நடித்தேன். பலரும் என்னைப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கினார்கள். கல்லூரிக் கீதத்துடன் விழா இனிது நிறைவு பெற்றது.

தங்கள் பார்வைக்காகப் பரிசில்களையும் பாராட்டுப் பத்திரங்களையும் கவனமாக வைத்திருக்கிறேன். தங்கள் நல்வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
அன்புமிக்க மகன்
ச. பத்மநாதன்

III. பின்வரும் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றையும் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

1. இராமன்

2. சீதை

3. இராவணன்

# 20

## சின்னவன் வென்றான்

தாவீது பதினாறு வயது இளைஞன். அவனுடைய தந்தையார் தம் ஆடுகளை மேய்க்கும் பொறுப்பை அவனிடமே விட்டிருந்தார். அவருக்கு அவனில் நல்ல நம்பிக்கை இருந்தது.



படம் 21 தாவீது.

தாவீது ஆடுகளுடன் மலைப் பகுதியை நோக்கிப் போவான். தன் தோள்களிலே சிங்காரமான மேலங்கி ஒன்றை அணிந்துகொள்வான். வளைந்த கோலொன்

றைக் கையிலே ஏந்தியபடி நடப்பான். அவனிடம் ஒரு பை இருக்கும். அதனுள்ளே கூழாங் கற்களைப் போட்டு வைத்திருப்பான். அத்துடன் அவனிடம் ஒரு கவணும் இருக்கும். கவணிலே கல்லை வைத்து வீசுவதில் அவன் மிக்க வல்லவன்.

மலைகளிலே பல குருவிகளையும் மிருகங்களையும் அவன் கண்டான். அருவிகளின் சலசலப்பைக் கேட்டான். மரங்களிடையே வீசும் மெல்லிய காற்றின் ஓசையைச் செவிமடுத்தான். அவன் மனத்திலே ஆனந்தம் பொங்கியது. அவன் பாடினான். அவனிடம் ஒரு சிறிய யாழ் இருந்தது. அந்த யாழை மீட்டியவாறே அழகிய உலகத்தைப் பற்றி அருமையாகப் பாடினான்.

இவ்வாறு அவனது பொழுது இன்பமாகக் கழிந்தது. அவன் ஒரு குறையும் இல்லாமல் வாழ்ந்தான்.

அப்பொழுது அந்த நாட்டிலே ஒரு பெரும் போர் மூண்டது. மன்னன் சவுலின் படைகளும் பிலிஸ்தினியர்களின் படைகளும் சண்டைக்கு ஆயத்தமாயின. இரு பெரு மலைகளின் சாரலிலே இரு பெரும் படைகளும் திரண்டன. நடுவிலே ஒரு பள்ளத்தாக்கு இருந்தது. அதனூடே சிறிய அருவி ஒன்று ஓடிக்கொண்டிருந்தது.

பிலிஸ்தினியரின் படையிலே கோலியாத் என்னும் ஒருவன் இருந்தான். அவன் ஒரு இராட்சதப் பிறவி; அவனுடைய உயரம் ஆறரை முழம்; பயங்கர உருவம்; தலையை மூடி ஒரு வெண்கலக் கவசம்; உடம்பை மூடி ஒரு பெருங் கவசம்; மீன்களின் செதில்களைப்போல் அடுக்கடுக்கான மின்னும் உலோகச் செதில்கள் அதில் நிறைந்திருந்தன. கூரிய வேலும் பாரிய ஈட்டியும் தாங்கியவாறு அவன் அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தான்.

இராட்சதப் பிறவியான கோலியாத் மிகுந்த பல சாலி; வீரன், அவன்மீது பிலிஸ்தினியர்கள் அதிக நம்பிக்கை வைத்திருந்தனர். அவன் இருக்கும் வரை தங்களுக்குத் தோல்வி இல்லை என்று நினைத்தனர்.

கோலியாத் தன் எதிரிகளைத் தூசி போல நினைத் தான்; அறை கூவி அழைத்தான். ''என்னுடன் சண்டை யிட்டு வெல்லக் கூடியவன் யாராவது உங்களிடம் இருக்கின்றானா? இருந்தால் முன் வரலாம்'' என்று அவன் கத்தினான்.

கோலியாத்தின் முன் வந்து நிற்பதற்கே எவருக்கும் துணிவில்லை. அவனோடு சண்டை பிடிக்க யாரும் வர வில்லை. அதனால், அவனுடைய கர்வம் மேலும் அதி கரித்தது. அவன் வெறி கொண்டவன் போலக் கூவி னான்; இறுமாப்போடு இரைந்தான்.

''ஏனடா சேனை திரட்டி வந்தீர்கள்? என்ன அணி வகுப்பு வேண்டியிருக்கிறது உங்களுக்கு? அற்பப் பதர் களே, இதோ நான் ஒருவன் நிற்கிறேன்; பிலிஸ் தீனிய வீரன். துணிச்சலுள்ளவன் யாராவது இருந்தால் உடனே வா; நேருக்குநேரே நாங்கள் மோதுவோம்'' என்று கோலியாத் முழங்கினான்.

சவுல் மன்னனின் படைவீரர்களில் யாருக்குந் கோலியாத்துடன் சண்டைக்குப் போகத் தைரியம் இல்லை. எல்லோருஞ் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

அப்பொழுது சிறுவன் தாவீது போர்க்களத்தை அடைந்தான். சவுல் மன்னனின் படையிலே தாவீ தின் தமையன்மார் மூவர் இருந்தனர். அவர்களைப் பார்ப்பதற்கென்று தாவீதின் தந்தையார் அவனைப் போர்க்களத்துக்கு அனுப்பியிருந்தார்.

அங்கு வந்த தாவீது கோலியாத்தைக் கண்டான். அந்த இராட்சதன் இறுமாப்போடு பேசிய கடுஞ் சொற்களைக் கேட்டான். தன்னையும், தன்னாட்டுப் படையையும் இவன் திட்டுகிறானே என்று தாவீது சிற்றங்கொண்டான். தன் நாட்டு மன்னனை அவமதிக்கின்றானே என்று போபம் அடைந்தான். மன்னன் சவுலிடம் சென்றான்; கோலியாத்துடன் சண்டை செய்ய அனுமதி தரும்படி வேண்டினான்.

"நீ வயதிற் சிறியவன்; சின்னவன்; உன்னால் என்ன ஆகும்?" என்றான் மன்னன் சவுல்.

"அரசே ஆடு மேய்ப்பதுதான என் தொழில். ஆனால் நான் கோழை இல்லை. ஒரு நாள் ஒரு சிங்கமும் கரடியும் என் ஆட்டுக்குட்டியைப் பிடிக்க வந்தன. அந்தச் சிங்கத்தையும் கரடியையும் நான் துரத்திக் கொன்றேன். அன்று எனக்கு அருள் புரிந்த ஆண்டவர் இன்றும் எனக்கு அருளுவார்" என்று கூறினான்.

மன்னர் சவுல் தாவீதைப் போருக்கு அனுப்பச் சம்மதித்தான். "வெற்றியோடு மீள்வாயாக" என்று வாழ்த்தி அனுப்பினான். மன்னன் தனது கவசத்தைத் தாவீதுக்கு அணிவித்தான். உடைவாளை இறுகப் பூட்டிவிட்டான்.

ஆனால், தாவீது கவசம் அணிந்து பழக்கப்பட்டவன் அல்லன். அவனுக்குக் கவசம் பெருஞ் சுமையாக இருந்தது. கவசத்தைக் கழற்றி ஒரு புறத்தில் வைத்தான். கையிலே தனது கவணை எடுத்துக்கொண்டான். வடிவான ஐந்து கூழாங்கற்களைப் பொறுக்கி ஒரு பையிலே போட்டான். கோலியாத்துக்குக் கிட்டச் சென்றான்.

தாவீதைக் கண்ட கோலியாத் அலட்சியமாகச் சிரித்தான். ''அடே பயலே, நீயா என்னை வெல்வதற்கு வந்தாய்? அற்பச் சிறு புழு நீ; அளவற்ற ஆற்றல் உடையவன் நான்; நொடிப்பொழுதில் உன்னை முடித்து விடுகிறேன்; உன் உடலைப் பருந்துக்கு விருந்தாக்குகிறேன்'' என்று அவன் சீறினான்.

தாவீது பயப்படவில்லை; பையிலிருந்த ஒரு கல்லை எடுத்தான்; கவணிலே வைத்தான்; இலக்குப் பார்த்தான்.

''நாயென்று நினைத்தாயா என்னை? கல்லுடன் வருகிறாயே!'' என்றான் கோலியாத்.



படம் 22. தாவீது வீசிய கல் கோலியாத்தைத் தாக்கியது.

தாவீது கவணைச் சுழற்றிக் கல்லை வீசினான். அது திடீரென்று போய்க் கோலியாத்தின் நெற்றியில் அடித்தது; புருவ மத்தியிலே புதைந்துகொண்டது.

அடிபட்ட சுவர் விழுவது போல முகங்குப்புற விழுந்தான் கோலியாத். தாவீது ஓடிச் சென்றான்; விழுந்து கிடந்த கோலியாத்தின் வாளை உருவினான். அவனுடைய வாள் கொண்டே அவனது தலையை வெட்டினான்.

தங்கள் மகா வீரன் இறந்ததைக் கண்ட பிலிஸ்தீனியர்கள் ஓட்டம் பிடித்தார்கள். தாவீதின் பக்கத்தார் அவனைப் புகழ்ந்து பாராட்டினார்கள்; வெற்றியைக் கொண்டாடினார்கள்.

## வினாக்கள்

I. 1. தாவீதின் தந்தையார் அவனைப் போர்க்களத்துக்கு அனுப்பியது ஏன்?

2. கோலியாத்தைக் கண்டதும் தாவீது ஏன் கோபம் கொண்டான்?

3. சண்டைக்குப் போன தாவீது கொண்டுபோன ஆயுதங்கள் எவை?

4. கோலியாத் இறந்ததும் பிலிஸ்தீனியர்கள் என்ன செய்தனர்?

5. தாவீதின் பக்கத்தார் அவனைப் புகழ்ந்தது ஏன்?

II. புணர்த்தி எழுதுக.

1. பத்து + ஆறு
2. மலை + பகுதி
3. படை + களம்
4. போர் + களம்
5. ஆடு + குட்டி

# 21

## ஒரு தீர்ப்பு

அறபியாவிலே இப்னு ஸஊத் என்ற அரசர் ஒருவர் இருந்தார். அவர் தமது ஆட்சிக் கருமங்களைப் பகிரங்கமாகவே செய்வது வழக்கம். தலைநகரிலே இருக்கும்போது தமது அரண்மனைப் படிகளிலே இருந்து அக் கருமங்களைச் செய்வார். பிரயாணம் செய்யும்போது தம் கூடாரத்தின் வாயிலில் இருந்து செய்வார்; கிராமங்களில் இருக்கும்போது வெளிமுற்றத்திலே இருந்து தம் கருமங்களை ஆற்றுவார்.

பல விதமான வழக்குகள் அவரிடம் வரும். அவற்றை விரைவிலே தீர்த்து விடுவார். அவர் மிகக் கவனமாகவும், பிழையில்லாமலும் வழக்குகளைத் தீர்ப்பார். அவர் எல்லா வழக்குகளையும் தாமே விசாரிப்பது வழக்கம். வழக்காளியையும் எதிரியையும் தவிர நியாயம் பேசுவதற்காக வேறு ஒருவரும் அங்கு வருவதில்லை.

ஒரு நாள் ஒரு பெண் அழுதுகொண்டு அவருடைய சமுகத்துக்கு வந்தாள். அவளுக்குப் பின்னால் ஒரு மனிதன் பயத்தால் நடுங்கிக்கொண்டு வந்தான். அரசர் அந்தப் பெண்ணைப் பார்த்து. "ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?" என்று கேட்டார். அதற்கு அவள், "அரசே, எனது கணவனை இதோ நிற்கின்ற இம்மனிதன் கொன்று விட்டான். அவரைக் கொன்ற இவனைத் தாங்கள் கொலைசெய்ய வேண்டும்" என்றாள்.

"எப்படி உன் கணவர் கொலை செய்யப்பட்டார்?" என்றார் அரசர்.

அதற்கு அம் மாது ''இந்த மனிதன் ஒரு மரத்தின் மேல் ஏறிப் பழம் பறித்துக்கொண்டிருந்தான். அவன் மரத்திலிருப்பதை அறியாத என் கணவர் அந்த மரத்தின் கீழ் இருந்தார். சிறிது நேரத்தில் இந்த மனிதன் என் கணவரின் மேல் விழுந்தான். அவருடைய கழுத்து முறிந்துவிட்டது. அதனால், அவர் இறந்துவிட்டார். இப்பொழுது, நானும் என் பிள்ளைகளும் உதவியின்றித் தவிக்கிறோம்'' என்றாள்.

அப்பொழுது அரசர் எதிரியைப் பார்த்து, ''நீ இந்தப் பெண்ணின் கணவனைக் கொன்றது உண்மை தானே?'' என்றார்.

''ஆம் உண்மைதான். ஆனால், நான் வேண்டுமென்றே அவர் மீது விழவில்லை. அவரைக் கொல்ல வேண்டுமென்று எண்ணவும் இல்லை. நான் ஒரு கொப்பிலிருந்து இன்னொரு கொப்பிற்குத் தாவும் போது தவறி விழுந்து விட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்'' என்றான். பின் அரசர் அப்பெண்ணைப் பார்த்து, ''சரி இவனை மன்னித்து நட்டஈட்டைப் பெற விரும்பவில்லையா? நட்டஈட்டைப் பெற்றுக் கொள்கிறாயா? இவனைக் கொல்லத்தான் வேண்டுமா?'' என்று கேட்டார்.

''இவனைக் கொல்ல இஸ்லாமியச் சட்டத்தில் இடம் உண்டு. இவனுடைய உயிரை எடுக்கத்தான் வேண்டும்'' என்றாள் அப்பெண்.

''சரி அப்படியே செய்யலாம். ஆனால், உன்னுடைய கணவன் கொல்லப்பட்ட முறையிலே இவனும் கொல்லப்பட வேண்டும். ஆதலால், அந்த மரத்தின் அடி

யிலே இவனைக் கட்டி வைக்கச் சொல்லுகிறேன். நீ நாற்பது அடி உயரமான அந்த மரத்திலேறி அதன் நுனியிலிருந்து இவன் மேல் விழுந்து இவனைக் கொன்று விடு'' என்றார்.

இதைக் கேட்ட அப்பெண் என்ன செய்வதென்று தெரியாது திகைத்தாள். ''மன்னித்து விடுங்கள் அரசே, நான் நீங்கள் பெற்றுக் கொடுக்கும் நட்டஈட்டை ஏற்றுக்கொள்கிறேன்'' என்று கூறினாள்.

''நல்லது, இந்த மனிதன் வேண்டுமென்றே உன் கணவன் மீது பாய்ந்து கொன்றிருந்தால், நீ சொல்வது போல் இவனுடைய உயிரை எடுக்கலாம். ஆனால், வேண்டுமென்று செய்யாதபோது, வேறு தண்டனை வழங்க இஸ்லாமியச் சட்டத்தில் இடமிருக்கிறது. நடந்த உண்மைகளைப் பார்க்கும்போது இவன் வேண்டுமென்று விழுந்திருக்கச் சந்தர்ப்பம் இல்லை. ஆகவே, இவன் தவறி விழுந்தான் என்றே கொள்ள வேண்டும். அதனாலேதான் இவனுடைய உயிரை வாங்காது உமக்கு நட்டஈடு வழங்க முடிவு செய்தேன்'' என்றார் அரசர்.

அப்பெண் நட்டஈட்டைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டாள்.

## வினாக்கள்

I. 1 மன்னர் இப்னு ஸஊத் எந்த நாட்டின் அரசர்?

2 மன்னர் இப்னு ஸஊத் தம் ஆட்சிக் கருமங்களை எவ்வாறு செய்வார்?

3. அவர் முன் இளம் பெண் தாக்கல் செய்த வழக்கு யாது?

4. இளம் பெண் தன் கணவரைக் கொன்றவருக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்று கோரினாள்?

5. மன்னர் ஏன் அந்தத் தண்டனையை விதிக்க வில்லை?

II. பின்வரும் கூட்டிலுள்ள வெற்றுச் சதுரங்களில், பொருத்த மான எழுத்துக்களைக் கொண்டு சொற்களை ஆக்கி எழுதுக. அவ்வாறு சொற்களை ஆக்குவதற்காக கீழே தரப்பட்டுள்ள விளக்கக் குறிப்புகளைப் பயன்படுத்துங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வி | | 2 | | டு | |
| | 3 பா | | | 4 | வி |
| 5 | | | 6 கா | | |
| | 7 | 8 கா | | ம் | |
| | | | | | 9 |
| 10 | | று | | 11 | |

**இடமிருந்து வலம்**

(1) பிள்ளைகளுக்கு விருப்பமான செயல்
(3) மண்ணாலாக்கப்பட்ட ஒரு பொருள்
(4) உயிருக்கு ஒத்த கருத்துள்ள ஒரு சொல்
(5) வெயிலுக்கும் மழைக்கும் உதவும் ஒரு பொருள்
(6) விலங்குகளின் உறைவிடம்
(7) கப்பல் செல்லும், கடலுமல்ல. கையால் தொடும் பொருளு மல்ல. அதுதான் இது.
(10) இன்றைக்கு மறுநாள் 'நாளை' என்பது போல இன்றைக்கு முதல் நாள் .....
(11) இது கடலின் எல்லையாக அமைகிறது.

மேலிருந்து கீழ்

(1) எரி பொருள்களுள் ஒன்று
(2) எல்லோருக்கும் முகத்தில் மூக்கு உண்டு. இதற்குக் கையில் மூக்கு உண்டு.
(4) மயில் என்ன செய்யும்?
(6) நமது உடலுக்கு இப்படியொரு பெயருமுண்டு
(8) இது இல்லாத இடமே இல்லை எனலாம்.
(9) பாதியை இப்படியும் கூறுவார்கள்.

விடை.

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 1. விறகு | 1. விளையாட்டு |
| 2. யானை | 2. பானை |
| 4. ஆடும் | 4. ஆவி |
| 6. காயம் | 6. காடு |
| 8. காற்று | 7. ஆகாயம் |
| 9. அரை | 10. நேற்று |
| | 11. கரை |

## மொழிப் பயிற்சி III

அ. பின்வரும் முற்பகுதிகளுக்கேற்ற பிற்பகுதிகளைத் தெரிந்து இணைத்து வாக்கியமாக்கி எழுதுக.

| முற்பகுதி | பிற்பகுதி |
|---|---|
| 1. புத்தகங்களும் பத்திரிகைகளும் | மனம் மாறினாள். |
| 2. உன்னுடைய வரலாறு | பொங்கியது. |
| 3. சிறுமியர் சிலர் | மேசையிற் கிடந்தன. |
| 4. இராமன் சீதையுடன் | எனக்குத் தெரியாது. |
| 5. கூனியின் பேச்சினால் கைகேயி | அயோத்திக்குச் சென்றான். |
| 6. அவன் மனத்தில் ஆனந்தம் | பாவை செய்தனர். |

உதாரணம்:

1. புத்தகங்களும் பத்திரிகைகளும் மேசையிற் கிடந்தன.
2.
3.
4.
5.
6.

ஆ. 'புத்தகம்', 'புத்தகங்கள்' என்ற இரண்டு சொற்களில் 'புத்தகம்' என்பது ஒரு புத்தகத்தை (ஒன்றைக்) குறிக்கும் சொல். ஒன்றைக் குறிக்கும் சொல் ஒருமை. 'புத்தகங்கள்' என்பது ஒன்றுக்கு மேற்பட்ட புத்தகங்களைக் குறிக்கும் சொல். ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிக்குஞ் சொல் பன்மை.

பின்வருவனவற்றிலுள்ள ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாக்கியும் பன்மைச் சொற்களை ஒருமைச் சொற்களாக்கியும் எழுதுக.

1. கண்ணி ........................................
2. மேசைகள் ........................................
3. கண்கள் ........................................
4. ஊர் ........................................
5. இயந்திரம் ........................................
6. மணி ........................................
7. பொம்மைகள் ........................................
8. மாலைகள் ........................................
9. யானை ........................................
10 விரல்கள் ........................................

இ. அடைப்புக் குறிக்குள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக.

1. இலைகள் (விழுந்தது, விழுந்தன).
2. வண்டி (சென்றது, சென்றன).
3. கிளி (பறந்தது, பறந்தன).
4. சத்தம் (கேட்டது, கேட்டன).
5. பயிர்கள் (வளர்ந்தது, வளர்ந்தன).
6. ஆறுகள் (பாய்ந்தது, பாய்ந்தன).
7. காற்று (வீசியது, வீசின).
8. யானைகள் (நடந்தது, நடந்தன).
9. சேனை (வென்றது, வென்றன).
10. பாம்புகள் (ஊர்ந்தது, ஊர்ந்தன).

ஈ. அடைப்புக் குறிக்குள் உள்ள பொருத்தமற்ற சொற்களை எழுதுக.

1. (மான், மான்கள்) ஓடியது.
2. (வீடு, வீடுகள்) இருந்தன.
3. (குயில், குயில்கள்) கூவின.
4. (சில்லு, சில்லுகள்) உருண்டது.
5. (கால், கால்கள்) முறிந்தது.
6. (தேனீ, தேனீக்கள்) மொய்த்தன.
7. (கத்தரி, கத்தரிகள்) பூத்தது.
8. (வால், வால்கள்) அறுந்தன.
9. (பந்து, பந்துகள்) விழுந்தன.
10. (பல், பற்கள்) விழுந்தன.

உ. பின்வரும் சொற்களின் கருத்துள்ள வேறொரு சொல் எழுதுக.

1. அழைத்தான் ..........................................
2. நடனம் ..........................................
3. வண்ணம் ..........................................
4. வானம் ..........................................
5. சத்தம் ..........................................
6. ஆடை ..........................................
7. தூய்மை ..........................................
8. குதூகலம் ..........................................
9. பிரியம் ..........................................
10. நெஞ்சம் ..........................................

ஊ. பின்வருஞ் சொற்களின் எதிர்க் கருத்துள்ள சொற்களை எழுதுக.

1. பெருமை ..............................

2. வறுமை ..............................

3. துக்கம் ..............................

4. முதுமை ..............................

5. கொடியவள் ..............................

6. நண்பன் ..............................

7. இறப்பு ..............................

8. தோல்வி ..............................

9. கோழை ..............................

10. புதுமை ..............................

எ. பின்வருஞ் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. குப்பை + கூடை ..............................

2. உனக்கு + தெரியும் ..............................

3. கூழை + கலக்கி ..............................

4. பொம்மை + கடை ..............................

5. பாவை + பிள்ளை ..............................

6. எப்படி + செய்தார்கள் ..............................

7. கங்கை + கரை ..............................

8. வெறுத்து + பேசினாள் ..............................

9. படை + தலைவன் ..............................

10. போர + களம் ..............................

ஏ. பின்வருஞ் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கிய மாக்கி எழுதுக.

1. ஒன்று, நின்றது, ஆட்டிக்கொண்டு, யானைப் பொம்மை, தலையை.

..........................................................................

2. அரசன், என்னும், ஆண்டான், மிதிலையை, சனகன்.

..........................................................................

3. இலங்காபுரி, சூர்ப்பனகை, இராவணனின் மன்னனான, தங்கை.

..........................................................................

4. பொழுது, அவனது, கழிந்தது, இவ்வாறு, இன் பமாகக்.

..........................................................................

5. பல, அவன், குருவிகளையும், கண்டான், மிரு கங்களையும், குன்றுகளிலே

..........................................................................

ஐ. கீழே சில வினாக்கள் உண்டு. அவற்றின் விடைகள் வினாக்களுக்குக் கீழே கலந்து எழுதப்பட் டுள்ளன. வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து எழுதுக.

1. கடதாசித் தொழிற்சாலை எங்கே இருக்கிறது?

..........................................................................

2. இராவணனின் தந்தை யார்?

..........................................................................

3. சீதையின் தந்தையாரின் பெயர் என்ன?

..............................................................

4. இராவணன் ஆண்ட தேசம் எது?

..............................................................

5. தாவீது யாருடன சண்டை செய்தான்?

..............................................................

6. மாயாதுன்னையின் படைத் தளபதி யார்?

..............................................................

இராவணன் ஆண்ட தேசம் இலங்கை.

கடதாசித் தொழிற்சாலை வாழைச்சேனையில் இருக்கிறது.

சீதையின் தந்தையாரின் பெயர் சனகன்.

தாவீது கோலியாத்துடன் சண்டை செய்தான்.

மாயாதுன்னையின் படைத்தளபதி அலி இப்றாஹிம்.

இராமனின் தந்தை தசரதன்.

9. பின்வருவன ஒவ்வொன்றையும் பற்றி ஐவைந்து வாக்கியங்கள் எழுதுக.

கடதாசி, எனது பொம்மை, நோன்புப் பெருநாள்.



படம் 23. சுப்பிரமணிய பாரதியார்.

# 22

## புதிய ஆத்திசூடி

அச்சந் தவிர்.
ஆண்மை தவறேல்.

இளைத்தல் இகழ்ச்சி.
ஈகை திறன்.

உடலினை உறுதி செய்.
ஊண் மிக விரும்பு.

எண்ணுவது உயர்வு.
ஏறுபோல் நட.

ஐம்பொறி ஆட்சிகொள்.
ஒற்றுமை வலிமையாம்.

ஒய்தல் ஒழி.
ஔடதம் குறை.

கற்று ஒழுகு.
காலம் அழியேல்.

குன்றென நிமிர்ந்து நில்.
கூடித் தொழில் செய்.

செய்வது துணிந்து செய்.
சேர்க்கை அழியேல்.

துன்பம் மறந்திடு.
தூற்றுதல் ஒழி.

தொன்மைக்கு அஞ்சேல்.
தோல்வியிற் கலங்கேல்.

நன்று கருது.
நாளெல்லாம் வினைசெய்.

புதியன விரும்பு.
பூமி இழந்திடேல்.

மிடிமையில் அழிந்திடேல்.
மீளுமாறு உணர்ந்துகொள்.

மெல்லத் தெரிந்து சொல்.
மேழி போற்று.

விதையினைத் தெரிந்திடு.
வீரியம் பெருக்கு.

வையந் தலைமை கொள்.
வெளவுதல் நீக்கு.

## விளக்கக் குறிப்புகள்

ஈகை - கொடை; ஊண் - உணவு;

ஔடதம் - மருந்து; தொன்மை - பழமை;

மிடி - வறுமை, துன்பம்; வீரியம் - வலிமை, வீரம்;

வெளவுதல் - திருடுதல்

தரப்பட்ட வாக்கியங்களை அவற்றின் பொருள் சிதையாதவாறு இணைத்து எழுதுங்கள்.

1. மாலதி பாடசாலைக்கு வந்தாள்.
   மாலதி பாடம் படித்தாள்.

2. கடும் புயல் வீசியது.
   மரங்கள் முறிந்து விழுந்தன.

3. மழை நன்கு பெய்தது.
   வயலில் நெல் விளையவில்லை.

4. பாம்பாட்டி மகுடி ஊதினான்.
   பாம்பு ஆடியது.

5. பத்மா நன்கு படித்தாள்.
   புலமைப் பரிசிற் பரீட்சையிற் சித்தியடைந்தாள்.

# 23

## பொய் சொல்லமாட்டேன்

ஒருநாள் விடியற் காலையில் இரண்டு சிறுவர்கள் சந்தைக்குப் போய்த் தங்களுடைய சிறிய கடைகளில், தாங்கள் கொண்டு போன பொருள்களைப் பரப்பி வைத்து விற்பதற்காக உட்கார்ந்திருந்தார்கள். ஒரு கடையில் பழங்களும் காய்கறிகளும், மற்றொன்றிலே தேங்காய்களும் வைக்கப்பட்டிருந்தன. பிற்பகலிற் சந்தை கலைந்தது. இந்தச் சிறுவர்களிடத்தும் பலர் பொருள்களை வாங்கிக்கொண்டு போனார்கள்.



படம் 24. முலாம் பழம்.

முருகனுடைய கடையில் எல்லாம் விற்கப்பட்டுச் கடைசியாய் ஒரு முலாம்பழம் (வத்தலைகப்பழம்) மாத்திரம் இருந்தது. ஒரு பெரிய மனிதர் வந்தார். அவர் அந்த முலாம்பழத்தின் மேலே தமது கையை வைத்து ''எவ்வளவு பெரிய முலாம்பழம்; இதற்கு என்ன விலை சொல்லுகிறாய், தம்பி?'' என்று கேட்டார்.

''இந்த முலாம்பழம் ஒன்றுதான் என்னிடத்தில் எஞ்சியுள்ளது. இது நல்ல பழம்போலத் தோன்றனாலும், இதிற் கொஞ்சம் பழுது இருக்கின்றது ஐயா'' என்று சொல்லி, அந்தச் சிறுவன் அந்தப் பழத்தை மறுபுறம் திருப்பிக் காட்டினான்.

''ஆம், ஆம்! பழுது இருக்கின்றது! எனக்கு வேண்டாம்''. என்று சொல்லி அந்தப் பெரிய மனிதர் சிறுவனுடைய அழகிய, வஞ்சகமில்லாத முகத்தைப் பார்த்து, ''உன்னுடைய பழத்திலுள்ள பழுதை, வாங்க வருபவர்களுக்குக் காட்டுவது, விற்க வந்த உனக்கு ஆகுமா?'' என்று கேட்டார்.

''பொய் சொல்வதைப் பார்க்கிலும் இது நல்லது ஐயா'' என்று அந்தச் சிறுவன் பணிவுடன் சொன்னான். ''நீ சொன்னது சரி தம்பி; ஒருபோதும் அதை மறவாதே; நான் உன்னுடைய கடையை இனி மறவேன்'' என்று சொல்லி, அந்தப் பெரிய மனிதா கிருஷ்ணனின் கடைப் பக்கமாகத் திரும்பி, ''இது என்ன, நல்ல பழத் தேங்காயா?'' என்று கேட்டார். ''ஆம், ஐயா, நல்ல பழக்காய்; நேற்றுத்தான் பிடுங்கியது. நான்தான் உரித்தேன்'' என்று கிருஷ்ணன் மறுமொழி சொன்னான். அந்தப் பெரிய மனிதர் அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போனார்.

''முருகா, நீ என்ன பெரிய மூடன்! மூலாம்பழத்தி லுள்ள பழுதை அந்த மனிதனுக்குக் காட்டலாமா? நீ சொன்ன உண்மைக்காக அந்தப் பழத்தை இனி வீட்டுக்குக் கொண்டு போ அல்லது எங்கேயாவது எறிந்துவிடு; அந்த முட்டுக்காயை வாங்கிக்கொண்டு போகின்றாரே; அவர் அதைப் பற்றி என்ன அறிந்து விட்டார்? நல்ல பழக்காய்கள் விற்ற விலைக்கே அதை யும் விற்றேன்; நீயும் அந்த மூலாம்பழத்தை ஒன்றும் பேசாமற் கொடுத்தால் அவர் பாராமல் வாங்கிக் கொண்டு போயிருப்பார்''.

''கிருஷ்ணா, எனக்கு இன்று காலையிற் கிடைத்த காசைப் போல இன்னொரு பங்கு காசுதான் வந்தா லும் நான் ஒரு பொய் சொல்லவும் மாட்டேன்; வஞ்சிக்கவும் மாட்டேன்; அல்லாமலும், இது கடைசி யிலே எனக்குத்தான் நயம். எனக்கு ஒரு வழக்கக்காரர் அகப்பட்டார்; உனக்கொருவர் போய்விட்டார்'' என்றான் முருகன்.

மறுநாள் அந்தப் பெரிய மனிதர் தமக்கு வேண்டிய பழங்களையுங் காய்கறிகளையும் முருகனிடத்திலேயே வாங்கினார்; கிருஷ்ணனுடைய கடையில் ஒரு சல்லிக்குக் கூட ஒன்றும் வாங்கவில்லை. இந்த விதமாகவே அந்த வருடம் கழிந்தது. முருகனிடத்தில் எப்போதும் நல்ல பொருள் வாங்கலாம் என்று கண்டுகொண்டு அவர் அவனுடைய கடைக்கே எப்போதும் போவார்; சில வேளை அவனிடத்தில் ''அடுத்த வருடம், நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்றும் விசாரிப்பார்.

அடுத்த வருடம் பெரிய மனிதருடைய பண்ட சாலையில் ஒரு நம்பிக்கையான சிறுவன் தேவைப்பட் டான்; அவர் முருகனைப் பார்க்கிலும் வேறொருவன் அகப்படான் என்று நினைந்து, முருகனுக்கே அந்த வேலையைக் கொடுத்தார். அவன் தன் எசமானுக்குத்

தன்னிடத்தில் மேலும்மேலும் நல்ல எண்ணம் வரும்படி நடந்து, படிப்படியாக உத்தியோக உயர்வு பெற்றுக் கடைசியில் எசமானோடு வர்த்தகத்தில் ஒரு பங்காளி ஆனான்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

## வினாக்கள்

I
1. காய்கறி வியாபாரம் செய்த சிறுவன் யார்?
2. தேங்காய் வியாபாரம் செய்த சிறுவன் யார்?
3. முருகனுடைய மூலாம்பழம் ஏன் விலைப்படவில்லை?
4. கிருஷ்ணனிடமிருந்த முட்டுக்காயை வாங்கிய பெரியவர் அவனைப்பற்றி என்ன நினைத்திருப்பார்?
5. பெரியவர் தமது பண்டசாலையில் வேலை செய்வதற்கு முருகனைத் தெரிந்தெடுத்தது ஏன்?

II. (அ) ஒத்த சொல் தருக.
1. ஈகை
2. மருந்து
3. வீரியம்
4. வெளவுதல்
5. மிடிமை

(ஆ) எதிர்க் கருத்துள்ள சொல் தருக.
1. தூற்றுதல்
2. தோல்வி
3. ஒற்றுமை
4. தொன்மை
5. இயற்கை

# 24

## மக்கா யாத்திரை

அன்று, எங்கள் பாடசாலையில் மாணவர் சங்கக் கூட்டம் ஆரம்பமானது. அன்றைய கூட்டத்தில், தாரிக்கின் பேச்சைக் கேட்பதற்கு நாங்கள் ஆவலாக இருந்தோம். முதலில் மாணவர் சங்கத் தலைவர் தாரிக்கைப் பாராட்டினார். ''இப்பொழுது தாரிக், அவரது மக்கா யாத்திரை அநுபவங்களைப் பற்றிப் பேசுவார்'' என்று தலைவர் கூறினார். தாரிக் மேடைக்கு வந்தார். நாங்கள் கரகோஷம் செய்து தாரிக்கை வரவேற்றோம்.

தாரிக் பேசத் தொடங்கினார். நாங்கள் அமைதியாகவும் கவனமாகவும் இருந்து பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

தாரிக் பின்வருமாறு பேச்சை ஆரம்பித்தார்:-

தலைவர் அவர்களே , சபையோர்களே,

நானும் எனது வாப்பாவும் மக்காவுக்குப் போகப் புறப்பட்டோம். எங்களது பயணத்தைப் பற்றிக் கேள்வியுற்ற பலர், எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். எங்களை வாழ்த்தினார்கள்; எங்களுக்காகப் பிரார்த்தனை செய்தார்கள்.

நாங்கள் புறப்பட்டுக் கொழும்புத் துறைமுகத்துக்குச் சென்றோம். அங்கும் பலர், எங்களை வழியனுப்புவதற்காக வந்திருந்தார்கள். எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு கப்பலுக்குச் சென்றோம் அது ஒரு

பாக்கிஸ்தான் கப்பல். அதன் பெயர் ''சபீனா அல் அரப்''. அந்தக் கப்பலிற் பாக்கிஸ்தானியர்களும் பிறரும் இருந்தார்கள். எல்லாமாக ஆயிரம் பேர் கப்பலிற்பயணமானோம்.

கப்பல் புறப்படும்போது வாப்பாவும் நானும் அதன் மேல் தட்டில் ஏறி நின்றோம். அங்கிருந்து கொழும்பு நகரத்தைப் பார்த்தோம். நகரின் உயர்ந்த கட்டிடங் களும், கடற்கரையும், துறைமுகமும் மிக அழகாகக் காட்சியளித்தன. அந்த அழகை நாங்கள் இரசித்தோம். துறைமுகப் படிகளிலே நின்ற சிலர், கைகளை உயர்த் திக் காட்டி எங்களுக்குப் பிரியாவிடை தெரிவித்தனர். நாங்களும் கையசைத்து, பிரியாவிடை பெற்றுக் கொண்டோம்.

கப்பல் புறப்பட்ட சிறிது நேரத்தில் நடுக் கடலை அடைந்தது. எங்கு பார்த்தாலும் கடலே காணப்பட் டது. வாப்பாவும் நானும் கப்பலை ஒரு முறை சுற்றிப் பார்த்தோம். அது ஒரு பெரிய மாளிகையைப் போலத் தோற்றமளித்தது. நாங்கள் ஒரு பெரிய வீட்டில் வசிப்பது போலத்தான் நினைத்துக்கொண்டோம். பின் னர், நாங்கள் கப்பலில் எங்களது அறைக்குத் திரும்பி விட்டோம். இரவு பகலாகக் கப்பல் ஓடிக்கொண்டே இருந்தது. ஏழாவது நாள், 'ஏடன்' என்ற இடத்தை அடையும் வரை நாங்கள் தரையைக் கண்டதே இல்லை.

'ஏடன்' துறைமுகத்திலிருந்தும் பலர் கப்பலில் ஏறிக் கொண்டார்கள். அவர்களும் மக்கா யாத்திரைக்குப் புறப்பட்டவர்கள். அவர்கள் அறபு மக்கள்; அறபு மொழி பேசினார்கள்.

அங்கிருந்து கப்பல் புறப்பட்டது. சில மணி நேரத் தில் வாப்பா என்னைப் பார்த்து ''மகனே, இப்போது

நாங்கள் செங்கடல் வழியாகப் போகின்றோம்'' என்றார். அங்கிருந்து பார்க்க இரு பக்கக் கரைகளும் வெகு தூரத்திலே தெரிந்தன.

ஒரு நாள் இரவு, இரண்டு மணியிருக்கும், நான் படுத்திருந்தேன். வாப்பா வந்து என்னை எழுப்பினார். ''நாங்கள் இப்போது 'யலம்லம்' என்ற இடத்துக்கு வந்து விட்டோம். இஃறாம் என்னும் வெள்ளை உடை உடுத்துக்கொள்ள வேண்டும்'' என்றார்.

கப்பலில் இருந்த மற்றவர்களும் எழும்பினர். எல்லோரும் கை, கால், முகம் கழுவி வெள்ளை உடைகளை அணிந்து குர் ஆன் ஓதிக்கொண்டிருந்தனர்.

வாப்பா பெட்டியைத் திறந்து ஒரு வெள்ளைத் துணியை எடுத்துத் தந்தார். தையல் இல்லாத அந்தத் துணியை நானும் அணிந்து கொண்டேன்.


பத்தாவது நாள், எங்கள் கப்பல் 'ஜித்தா' என்ற துறைமுகத்தை அடைந்தது. நாங்கள் உடுத்திருந்த அதே வெள்ளை உடையுடன் அறபு நாட்டு மண்ணில் அன்று கால் வைத்தோம்.

''வாப்பா, நாங்கள் உடை மாற்றிக்கொள்ள வேண்டாமா?'' என்று கேட்டேன், ''இல்லை மகனே! மக்காவுக்குப் போய்த் தொழுகையை முடிக்கும் வரையும் இதே உடைதான் அணிய வேண்டும்'' என்றார் வாப்பா.

ஜித்தாவில் இறங்கிய பின்னர், எனது மாமாவையும் இன்னும் சில இலங்கையர்களையும் சந்தித்தோம். அவர்கள் விமானத்தில் வந்ததாகக் கூறினார்கள்.

மீண்டும் ஜித்தாவிலிருந்து புனித நகரான மக்கா வுக்கு, பஸ்ஸிற் பயணமானோம். அகலமான, அழகான பாதையில் பஸ் போய்க்கொண்டிருந்தது. பெரிய பெரிய கட்டிடங்களும் மாளிகைகளும் பூந் தோட்டங்களும் பார்ப்பதற்கு அழகாகக் காட்சி யளித்தன. போகும் வழியில் ஒரு பெரிய மாளிகையை வாப்பா எனக்குக் காட்டினார். ''இதுதான் சவூதி அறாபிய மன்னரின் மாளிகை'' என்றார்.

நாங்கள் பிரயாணஞ் செய்த பஸ் புனித நகரத் திற்கு அண்மையில் வந்துவிட்டது. எல்லோரும் கஃபா வைக் காண்பதற்கு ஆவல்கொண்டிருந்தனர்.



படம் 25. மக்காவிலுள்ள புனித கஃபா

மக்காவின் பள்ளிவாசலுக்கு அருகில் இறங்கி நின் றோம். எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டத்தையே

காண முடிந்தது. வாப்பா எனது கையைப் பிடித்துக் கொண்டார். நானும் அவர் பின்னாலேயே சென்று கொண்டிருந்தேன்.

அங்குள்ள புனித கஃபாவை வாப்பா எனக்குக் காட்டினார். ''மகனே, இதனைச் சுற்றி ஏழு தரம் வலம் வர வேண்டும்'' என்றார். மக்கள் கூட்டங் கூட்டமாக அந்தக் கஃபாவைச் சுற்றி வந்து கொண்டிருந்தனர். நாங்களும் அவர்களோடு சேர்ந்து சுற்றினோம். அவ்வாறு சுற்றும்போது, எல்லோரையும் போல் நானும் இறைபுகழ் பாடினேன்.

அதன் பின்னர், அங்குள்ள ஒரு கிணற்றடிக்கு வாப்பா என்னை அழைத்துச் சென்றார். ''இதுதான் 'ஸம்ஸம்' கிணறு; இதன் நீருற்று என்றைக்குமே வற்றாது'' என்று வாப்பா கூறினார். அந்தப் புனித நீரில் நாங்களும் நீராடினோம். கிணற்றுக்கு அண்மையில் இரண்டு மலைகள் தென்பட்டன. அந்த மலைகளைக் காட்டி ''இவைதான் 'சாபா', 'மர்வா' என்ற மலைகள். இவைகளுக்கிடையே நாங்களும் ஏழு தரம் சுற்றி ஓட வேண்டும்'' என்றார் வாப்பா. அநேகர் அந்த மலையைச் சுற்றி மெதுவாக ஓடிக் கொண்டிருந்தார்கள். வாப்பா சொல்லித் தந்த வேத மொழிகளை நானும் கூறிக்கொண்டேன். நாங்கள் இருவரும் மெதுவாக ஓடி முடித்தோம்.

நாங்கள் ஏன் சாபா மர்வாவுக்கிடையில் ஓட வேண்டுமென்று வாப்பாவிடம் கேட்டேன். அப்பொழுதுதான் வாப்பா, பின்வரும் சம்பவத்தை எனக்குச் சொன்னார்.

''பச்சிளம் பாலகனான நபி இஸ்மாயிலும் அவருடைய தாயாரும் இந்த மலைகளுக்கிடையிலே தான் வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள், பாலகன் இஸ்மாயிலுக்குத் தண்ணீர்த் தாகம் எடுத்தது. பாலகனுக்குத் தண்ணீர்

தேடித் தாயார் இந்த இரண்டு மலைகளுக்கும் இடையில் ஓடித் திரிந்தார். அப்பொழுது பாலகன் இஸ்மாயிலின் கால்கள் பூமியைத் தொட்டன. உடனே தண்ணீர் ஊற்றெடுக்கத் தொடங்கியது. இன்று வரை வற்றாத அந்த ஊற்றுத்தான், ''ஸம்ஸம்' கிணற்றில் ஊறிக் கொண்டிருக்கிறது'' என்று விளக்கமாகக் கூறினார்.

அன்றைய ஆரம்பக் கடமைகளை முடித்துக்கொண்டு நாங்கள் இலங்கையர் வசிக்கும் ''இலங்கை இல்லம்'' என்பதற்குச் சென்றோம்.

துல்ஹஜ் மாதம் எட்டாம் நாள் ஹஜ்ஜுக் கடமை ஆரம்பமானது. நாங்கள் மீண்டும் வெள்ளை நிற ஆடைகளை அணிந்து கொண்டோம். ஹஜ்ஜுக்காக இலட்சக் கணக்கானவர்கள் வந்திருந்தார்கள். எல்லோரும் ஒரே விதமான ஆடைகளுடன் 'அரபா' என்ற இடத்திற் கூடி நின்றோம். அரசன், அடிமை, வெள்ளையன், கறுப்பன் என்ற வேறுபாடு எதுவுமே இல்லாமல் எல்லோரும் இறைவனைத் தியானித்த வண்ணமே இருந்தோம்.

பின்னர் 'மினா' என்ற இடத்திற் கூடினோம். அங்கும் குறிப்பிட்ட மூன்று இடங்களிற் கல் எறிந்து தியானங்கள் பல புரிந்தோம். இவ்வாறு ஒவ்வோர் இடத்திலும் நிறைவேற்றிய கடமைகளுக்கான காரணத்தைப் படிப்படியாக அறிந்து கொள்ளலாம் என்று வாப்பா எனக்குக் கூறினார்.

மக்காவிலே கடமைகளை முடித்துக்கொண்டு மதீனா என்ற புனித நகரைச் சென்றடைந்தோம். 'மஸ்ஜிதுன்னபவி' என்ற பள்ளிவாசலிலே தங்கியிருந்து இறை வணக்கங்கள் செய்தோம். நபிகள் பெருமானாரின் அடக்கத் தலத்தையும், புனித தலங்களையும் சரித்திர சம்பந்தமான இடங்களையுந் தரிசித்தோம்.

''ஹஜ்ஜை ஒழுங்காக நிறைவேற்றியவர்கள் பாவங்களிலிருந்து மன்னிக்கப்படுவார்கள்'' என்று இஸ்லாத்திற் கூறப்பட்டுள்ளது. எனவே, வசதியும் வாய்ப்பும் கிடைத்தால் நீங்களும் ஹஜ்ஜுக்குப் புறப்படுங்கள். இவ்வாறு தாரிக் தமது மக்கா யாத்திரை அனுபவத்தைச் சுருக்கமாகக் கூறிமுடித்தார்.

## வினாக்கள்

I. 1 தாரிக் எந்தக் கப்பலில் யாத்திரை செய்தார்?

2. கப்பல் எப்படித் தோற்றம் அளித்தது?

3. யலம்லம் என்ற இடத்தில் என்ன நடந்தது?

4. ஹஜ் செல்பவர்கள் செய்யும் கருமங்கள் சிலவற்றைக் கூறுக?

5. தாரிக் மதீனாவுக்குச் சென்றது எதற்காக?

II. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் விடையாக அமையத்தக்கதாக வினாக்கள் எழுதுங்கள்.

1. தசரதன் கோசல நாட்டை ஆண்டான்.

2. துல்ஹஜ் மாதம் எட்டாம் நாள் ஹஜ்ஜுக் கடமை ஆரம்பமானது.

3. காசியப்பனின் தந்தை தாதுசேனன்.

4. சிகிரியா ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களை ஒத்திருக்கின்றன.

5. கூனியின் பேச்சினால் கைகேயி மனம் மாறினாள்.

# 25


## கதிர்காமம்

ஆடி பிறந்தது கதிர்காமத்திலே கொடியேறித் திருவிழா நடந்துகொண்டிருந்தது. காந்தனும் பெற்றோரும் கதிர்காமத்துக்குப் போனார்கள்.

அவர்கள் சென்ற பஸ்வண்டி யாத்திரிகர் விடுதிக்கு அயலில் நின்றது. அவர்கள் விடுதிக்குட் சென்று, தாம் கொண்டுபோன பொருள்களை ஓர் அறையில் வைத்தார்கள். பின்பு நீராடுவதற்காக மாணிக்க கங்கைக்குப் போனார்கள்.

மாணிக்க கங்கை அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. முத்துப் போன்ற தெளிந்த நீரிலே ஆண்களும் பெண்களும் ஆனந்தமாக நீராடிக்கொண்டிருந்தார்கள். இடையிடையே இருந்த மணல் மேடுகளில், சிறுவர்கள் கும்மாளமிட்டனர். சிற்சில இடங்களில் நீராடுவதற்கு வசதியாகப் படித்துறைகள் அமைக்கப் பட்டிருந்தன. கங்கையின் இரு கரையிலும் கண்ணுக் கெட்டிய தூரம் வரை மருத மரங்கள் நிழல் பரப்பிக்கொண்டு நின்றன.

கங்கைக் கரையை அடைந்த காந்தனுக்கு உற்சாகம் பிறந்தது. ஓடிச்சென்று ஆற்றில் இறங்கினான்; துள்ளிக் குதித்து நீராடி மகிழ்ந்தான். பெற்றார் நீராடி கரையேறிய பின்பும் காந்தன் குளித்துக் கொண்டேயிருந்தான்.



படம் 26. கதிர்காமம் முருகன் கோவில். அதன் பக்கத்திற் காணப்படுவது மாணிக்கப் பிள்ளையார் கோவில்.

''குளித்தது போதும்; வா'' என்று தந்தை கூப்பிட்டார். காந்தன் மனமின்றி வெளியேறினான். உடை மாற்றிக் கொண்டு மூவரும் மாணிக்க கங்கையின் மேலுள்ள பாலத்தின் வழியே அக்கரையை அடைந்தனர். அருச்சனைத் தட்டொன்றை வாங்கிக்கொண்டு கோவிலை நோக்கிப் போயினர். போகும் வழியில் வள்ளியம்மன் கோவில் இருந்தது. அதன் ஒரு புறத்திலே பள்ளிவாசல் ஒன்று இருந்தது. அங்கே ஏராளமான முஸ்லிம் மக்கள் கூடி நின்றனர்.

வள்ளியம்மன் கோவிலுக்கு எதிரில், சிறிது தூரத்தில் முருகன் கோவில் தெரிந்தது. பாதையெங்கும்

சனங்கள் நிறைந்திருந்தனர். சிலர் மொட்டை அடித் திருந்தனர். சிலர் உடம்பெங்கும் நீறு பூசி, உருத்தி ராக்கம் அணிந்திருந்தனர். சிலர் பரவசமாக ஆடிப் பாடினர். அப்பொழுது முருகன் கோவிலின் வாசலில் உள்ள மணி அடிக்கத் தொடங்கியது.

மணி ஓசையைக் கேட்ட தந்தையார், "பூசை ஆயத்தம் ஆகிறது. பூசை முடிந்ததும் திருவிழா நடக் கும். வாருங்கள்; கோவிலுக்குப் போவோம்" என் றார். அவர்கள் கோவிலுக்குச் செல்லும்பொழுது வாத்தியங்கள் முழங்கின. சங்கொலி கேட்டது. அரோகரா என்ற ஒலி எங்கும் ஒலித்தது.

பூசை ஆரம்பமாயிற்று. உள் வாயிலிலே திரைச் சீலைகள் தொங்கிக்கொண்டிருந்தன. முதலிலே பிள்ளை யார் கோவிலிற் பூசை நடந்து நிறைவேறியது. அதைத் தொடர்ந்து மகா தேவாலயம் எனப்படும் முருகன் கோவிலிற் பூசை நடந்தது. கப்புறாளை என்ற பூசாரியே முருகனுக்குப் பூசை செய்தார். அவர் வாயைத் துணியாற் கட்டியிருந்தார்; தூப தீபங் காட்டி, திரைக்கு முன் நின்று வழிபாடு செய்தார். சனங்கள் தலைகளின் மேற் கைகளைக் கூப்பி 'அரோ கரா', 'அரோகரா' என்று சொல்லிக் கும்பிட்டார் கள்.

பூசை முடிந்ததும் மூவரும் மதிலோரமாக நின்று இளைப்பாறினார்கள். அப்பொழுது ஒரு பெரிய யானை அசைந்து அசைந்து அங்கே வந்தது. அதனுடைய பாகனும் பக்கத்தில் வந்துகொண்டிருந்தான். அந்த யானை முதலிலே பிள்ளையார் வாசலுக்குச் சென்றது. அங்கு தனது முன்னங் கால்களை மடக்கி விழுந்து வணங்கியது. அவ்வாறே முருகன் கோவில் வாசலுக் கும் சென்று வணங்கியது. அந்த யானையைக் காந்தன்

மிக்க ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டு நின்றான். யானை பக்கத்திலிருந்த மண்டபத்துட் போய் நின்றது. கப்புறாளைமார் வண்ண வண்ண உடைகளால் அதனை அலங்கரித்தார்கள். யானையின் முதுகிலே பெட்டி போன்ற ஒன்றையும் விரித்த ஒரு சிறு குடையையும் வைத்துக் கட்டினார்கள். அதனைக் கண்ட காந்தன் "அப்பா, யானையை ஏன் சோடிக்கிறார்கள்? திரு விழா எப்போது தொடங்கும்?" என்று கேட்டான். "இந்த யானையிலேதான் சுவாமியை வைத்து வீதி வலம் வருவார்கள். இன்னும் கொஞ்ச நேரத்திலே திருவிழாத் தொடங்கிவிடும். அதோ சங்குகள் ஒலிக் கின்றன" என்று தந்தை சொன்னார்.

அப்பொழுது கப்புறாளைமார் இருவர் மற்றொரு கப்புறாளையை நடுவிலே விட்டு, சீலையால் மூடி அழைத்துச் சென்றனர். யானையை நோக்கி, அவர்கள் சென்றதைக் கண்ட காந்தன் அதிசயப்பட்டான். "இது என்ன அப்பா, ஒரு கோவிலிலும் இல்லாத புதுமை?" என்றான்.

"நடுவிலுள்ள கப்புறாளை சுவாமியைத் தூக்கிக் கொண்டு போகிறார். இனி, சுவாமியை யானையில் ஏற்றுவார்கள்" என்று தந்தை கூறினார். மறைத்துக் கொண்டுவந்த சுவாமியைக் கப்புறாளைமார் யானை யில் ஏற்றினர். பட்டுத் துணிகளையும் மாலைகளையுங் கொண்டு அலங்கரித்தனர்.

அப்பொழுது காந்தன் "அப்பா, சுவாமியைக் காணவில்லையே?" என்று கேட்டான்.

அதற்குத் தந்தை "இதுதான் இங்குள்ள புதுமை. மற்றைக் கோவில்களிற் போல் இங்கு சுவாமியின் உரு வத்தைப் பார்க்க முடியாது. ஏதோ இரகசியமான ஒன்

றைத்தான் யானையின் முதுகிலுள்ள பெட்டியுள் வைத்துத் திருவிழா நடத்துவார்கள்'' என்று கூறினார்.

சுவாமியுடன் வந்த கப்புறாளை யானையின் மேல் ஏறினார்; பீடத்தை அணைத்தபடியே வீற்றிருந்தார். தீபங்கள் ஒளி வீசின. தீவர்த்திகள் முன் சென்றன. கொடி, குடை, ஆலவட்டம் என்பன அசைந்தன. வாத்தியங்கள் இசைத்தன. நடனகாரர் நடனமாடினர். யானையின் முன்னே 'நிலமை' என்பவர் கம்பீர நடை நடந்து சென்றார். அவருக்குப் பின்னே வேட்டுவப் பெண்கள் சிலர் சென்றனர். ஏனைய சனங்களும் மெல்ல நகர்ந்தனர். காவடிகளும் கரகங்களும் ஆடின. அடியார்கள் துதிப் பாடல்களைப் பாடிக் கொண்டு பின்னே சென்றனர். கர்ப்பூரச் சட்டிகளைச் சுமந்தவாறு சென்றனர் சிலர்.

சுவாமி யானையில் வீதி வலம் வந்து வள்ளியம்மன் கோவிலுக்குச் சென்று திரும்பினார். அத்துடன் அன்றைய திருவிழா முடிவுற்றது.

கோவில் வாசலில், காந்தன் தனது நண்பனான காமினியைச் சந்தித்தான். அவன் காந்தனையும் பெற்றாரையும் கிரி விகாரைக்குக் கூட்டிச் சென்றான். கிரி விகாரை முருகன் கோவிலிலிருந்து சிறிது தூரத்தில் இருந்தது. அந்த விகாரை வட்ட வடிவில் உயரமாகக் கட்டப்பட்டிருந்தது. அதுவும் முருகன் கோவிலைப் போலச் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. அது சூரன் மலை என்றும் சொல்லப்படும்.

'மறுநாட் காலை காந்தனும் பெற்றோரும் கங்கையில் நீராடினார்கள். ஈர உடையுடன் கதிரை மலையை நோக்கி நடந்தார்கள்; காட்டுப் பாதை வழியே இரு மைல் வரை நடந்து மலையடிவாரத்தை அடைந்தார்

கள். அங்கிருந்து படிகள் வழியாக மெல்ல மெல்ல ஏறினார்கள். உச்சி மலையை அடைந்தார்கள். அங்கே வேல் வைக்கப்பட்ட முருகன் கோவிலை வணங்கினார்கள். சிறிது நேரம் களைப்பாறிய பின்பு மலையிலிருந்து இறங்கினார்கள்.

அன்று மாலை, செல்லக் கதிர்காமத்துக்குச் சென்று வழிபாடு செய்து திரும்பினார்கள்.

## வினாக்கள்

I. 1. கதிர்காமத்திற்கு அருகில் ஓடும் ஆறு எது? அந்த ஆற்றைப்பற்றி எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது?

2. கதிர்காமத்திலுள்ள விசேட இடங்கள் எவை?

3. கப்புறாளை என்பவர் யார்? அவரது கடமைகள் எவை?

4. கதிர்காமத்திலுள்ள புதுமை என்ன?

5. கதிர்காமத் திருவிழாக் காலத்தில் எவ்வெம் மதத்தினர் கூடுகின்றனர்? அவர்கள் அவ்வாறு அங்கு கூடுவதற்குரிய காரணம் என்ன?

II. பின்வருவன எவற்றைக் குறிக்கின்றன

1. குரவர்
2. முத்தமிழ்
3. நாற்றிசை
4. ஐம்பொறி
5. அறுசுவை

# 26

## கடன்காரன்

உலகம் சுழல உற்று நோக்கி
உலகம் யாவும் ஒளியைக் கொடுக்கும்,
பகலோன், பலநாள் களைப்பிலாழ்ந்தான்.
பக்க முள்ள கடலை யண்மித்
தாகம் தீர்க்கக் கடனாய்த் தண்ணீர்
பாகம் பண்ணித் தாருமென்றான்.
மேகம் தன்னில் நிறைத்துக் கடலும்
மேலே தண்ணீர் கடனாயீந்தான்.

சுற்றியாங்கே கடலை வைத்தும்
சோம்பல் பூமி தாகம் உந்த
பற்றி, அறம் செய் பகலோன் தன்னைப்
பார்த்துத் தண்ணீர் இரந்து நின்றான்.
உற்றான், கதிரோன் உள்ளம் உருகி
உதிர்த்தான், மேக உறையி னின்றும்
வற்றிடாது உறிஞ்சிப் பூமி
வறுமை தன்னைப் போக்க எண்ண.

செல்வம் மீது செல்லும் கண்ணான்
செருக்கன் கடலான் பூமி தன்னில்
உள்ள தண்ணீர் யாவுமிங்கு
இழுத்துக் கஜானா நிரப்பிக் கொண்டான்.
கள்ள மில்லா ஏழைப் பூமி
கவலை யின்னும் இழக்க வில்லை.
உள்ள முந்தித் தருமம் செய்த
உலகி னொளியான் கடன் காரன்தான்.

ஏ. இக்பால்

### விளக்கக் குறிப்புகள்

பகலோன் - சூரியன்
கதிரோன் - சூரியன்

## 27

# வளரும் பயிரை முளையிலே தெரியும்

பல ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்து நல்லூரில் வில்லவராயர் என்னும் ஒருவர் இருந்தார். அவர் தமிழ் அறிவு நிரம்பியவர். கவி பாடும் வல்லமை உள்ளவர். அவர் கச்சேரியில் முதலியாராக இருந்தார். அதனால், அவர் வாழ்ந்து வந்த வீதி வெகு பிரசித்த மானது.

அந்த வீதியின் இரு பக்கங்களிலும் நிழல் மரங்கள் நின்றன. அவை ஓங்கி உயர்ந்த மரங்கள். அந்த மரங் களின் நிழலிலே சிறுவர்கள் பலர் விளையாடிக் கொண்டு நின்றனர். சிலர் கிட்டியடித்து விளையாடி னர். சிலர் பம்பரம் ஆட்டி விளையாடினர். வேறு சிலர் ஓடிப்பிடித்து விளையாடினர்.

அப்பொழுது அந்த வீதியில் ஒருவர் வந்தார். அவர் காதிலே கடுக்கண்கள் மின்னின. தலையிலே தலைப் பாகையும், தோளிலே உத்தரீயமும் விளங்கின. முகத் திலே வியர்வை அரும்பி இருந்தது. வெகு தூரத்தி லிருந்து வந்தவர் போலக் காணப்பட்டார். ஒரு கையிற் குடையும், மறு கையிற் பையும் காணப் பட்டன.

அவர் சிறுவர் விளையாடும் இடத்துக்கு வந்தார். "தம்பி, முதலியார் வீடு எது?" என்று கேட்டார்.

"எந்த முதலியார்?" என்று சிறுவர்களில் ஒருவன் கேட்டான்.

''கச்சேரி முதலியார் வில்லவராயர்'' என்று அப் புதியவர் கூறினார்.

''கச்சேரி அலுவலாக வந்தீர்களோ?'' என்று சிறு வன் ஒருவன் கேட்டான்.

''இல்லை, நான் இந்தியாவிலிருந்து வருகிறேன். சில பாட்டுகள் பாடியிருக்கிறேன். அவரிடம் கொடுத்துப் பரிசில் பெற வந்துள்ளேன்'' என்றார் அவர்.



படம் 27. இந்தியாவிலிருந்து வந்த புலவரும் சிறுவன் சின்னத்தம்பியும்.

''ஓ நீங்கள் புலவரா? நல்லது. முதலியார் வீட்டு அடையாளத்தைச் சொல்லுகிறேன்; கேளுங்கள்'' என்று கூறிய சிறுவன் ஒரு பாட்டைப் பாடினான்.

"பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம் — மின்பிரபை
வீசு புகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்''.

''ஓகோ! வில்லவராய முதலியார் வீட்டு வாசலிலே கொன்றை மரம் நிற்கிறதா? வீட்டின் அடையாளத்தைப் பாட்டிலே சொல்லிவிட்டாயே! நீ மிகவும் கெட்டிக்காரன்'' என்று புலவர் அந்தச் சிறுவனைப் பாராட்டினார். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்' என்று சொல்லுவார்கள். முதலியார் வீட்டு வீதியிற் சிறு பையனும் நல்ல வெண்பாப் பாடுகிறானே என்று புலவர் நினைத்துக்கொண்டு சென்றார்.

சிறுவன் கூறிய அடையாளத்தைக கொண்டு புலவர் முதலியார் வீட்டை அடைந்தார்; தெருவிலே நடந்த செய்தியை அவருக்குச் சொன்னார்; பாட்டினாற் பதிலளித்த பையனைப் பாராட்டிப் பேசினார்; அந்தப் பாட்டையும் கூறினார்.

அப்பொழுது முதலியார் வீட்டுப்படலை திறந்தது. அந்தச் சிறுவன் அங்கு வந்தான். உடனே புலவர், ''இவன்தான் அந்தச் சிறுவன்; பாட்டினாற் பதிலளித்த பையன்'' என்றார்.

''இவனா? இவன் என் மகன் சின்னத்தம்பி அல்லனோ?'' என்றார் முதலியார். தம் மகனின் புலமையைக் கண்டு முதலியார் பெருமை கொண்டார்; மகிழ்ச்சி அடைந்தார். சின்னத்தம்பியின் புகழ் ஊரெங்கும் பரவியது. எல்லாரும் அவனைப் பாராட்டினார்கள்.

இவ்வாறு அப்பாடலைப் பாடி எல்லோராலும் பாராட்டப்பட்டபோது சின்னத்தம்பிக்கு வயது ஏழு என்பர். இச்சிறுவன் வளர்ந்து, பிற்காலத்தில் ஈழத்தின் புகழ்பெற்ற பெரும் புலவர் ஆனான்.

சின்னத்தம்பி இளமைக் காலத்தில் விளையாட்டுகளிலும் மாடுமேய்ப்பதிலும் தன் காலத்தைப் போக்கி

னான்; பாடசாலைக் கல்வியில் அதிகம் ஆர்வம் காட்ட வில்லை. பாடசாலைக்கு ஒழுங்காகச் சென்று கல்வி கற்காதபடியால் வில்லவராயர் தம் மகனைப் பலமுறை கண்டித்தார். மகனுக்கு உணவு கொடுக்க வேண்டா மெனத் தம் மனைவியிடம் கூறினார். அதனால், சின்னத் தம்பி தந்தைக்குத் தெரியாமல் வீட்டிற்குச் சென்று தாயிடம் உணவைப் பெற்று உண்டு வந்தான்.

கவி பாடும் வல்லமை இயல்பாகவே சின்னத்தம்பி யிடம் இருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டுகள் பல உண்டு. ஒரு முறை வில்லவராயர் அந்தாதி நூலைப் பாடத் தொடங்கினார். ஒரு நாள் ஒரு பாட்டில் ஓர் அடியை ஓர் ஓலையில் எழுதி வைத்துவிட்டுத் தம் கடமையின் நிமித்தம் வெளியே சென்றார். அவரில் லாத நேரம் அங்கு வந்த சின்னத்தம்பி அந்த ஓலை யைக் கண்டான். பாடல் ஒன்று குறையாக இருப்ப தைக் கண்டான். உடனே அப்பாடலில் மிகுதி அடி களை எழுதிப் பாடலை நிறைவு செய்து அந்த ஓலையை இருந்த இடத்தில் வைத்துவிட்டுச் சென்றான்.

தம் கடமையை நிறைவேற்றிய பின் வீட்டிற்கு வந்த வில்லவராயர், அப்பாடலை யாரோ எழுதி முடித் திருப்பதைக் கண்டார். சிறந்த முறையில் அப்பாடல் அமைந்திருப்பதையுங் கண்டு ஆச்சரியம் அடைந்தார். இடை நேரத்தில் இங்கு வந்தவர் யார்? என வில்லவராயர் மனைவியிடம் கேட்டார். ஆரம்பத்தில் அம்மையார் மகன் வந்ததைச் சொல்லச் சிறிது தயங் கினார். எனினும், கணவர் வற்புறுத்திக் கேட்டார். அப்பொழுது, சின்னத்தம்பியே அங்கு வந்தான் என வும் ஏதோ எழுதிக்கொண்டிருந்தான் எனவும் அம் மையார் கூறினார். வில்லவராயர் தம் மகனே அப்பாடலை நிறைவு செய்தான் என்பதை அறிந்தார். உடனே அவர் மகனை அழைத்துப் பாராட்டி அன்பு

செய்தார். அந்த அந்தாதி நூலைச் சின்னத்தம்பியே பாடி முடித்தான் என்பர்.

சின்னதம்பி பாடசாலைக்குச் சென்று கல்வியைக் கற்காதபோதிலுங் கல்வியறிவில் மிக்க வல்லமை உள்ளவனாக விளங்கினான். அவன் கல்வித் திறமையை வெளிப்படுத்திய நிகழ்ச்சிகளும் பல உண்டு. அக்காலத்தில் வண்ணைக் கணேசையர் என்னும் ஒருவர் இருந்தார். அவரது வீட்டிலே அறிஞர்கள் கூடியிருந்து நூல்களை ஆராய்வது வழக்கம். ஒரு முறை பல அறிஞர் சேர்ந்து இராமாயணத்தைப் படித்து அதிலுள்ள பாடல்களுக்குப் பொருள் சொல்லிக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு பாடலுக்குப் பொருள் தெளிவில்லாமல் இருந்தது. அங்கு இருந்த எவரும் அதற்குத் தெளிவான பொருள் சொல்லவில்லை. ஒவ்வொருவரும் தம் மனம்போனபடி பொருள் சொல்லிக்கொண்டிருந்தனர். அவ்வுரைகள் யாவும் அப்பாடலுக்குப் பொருத்தமற்றனவாக இருந்தன. அப்போது அங்கு ஒரு மூலையிற் சினனத்தம்பியும் இருந்தான். ஈற்றிலே சின்னத்தம்பி அப்பாடலுக்குப் பொருள் கூறினான். அவன் கூறிய பொருள் மிகப் பொருத்தமாக இருந்தது. அதனால், அவனின் கல்வித் திறமையை யாவரும் பாராட்டினர். கணேசையர் பெருமகிழ்ச்சி அடைந்தார். பண்டாரக்குளம் என்னும் இடத்தில் வயல் ஒன்றை அவனுக்கு நன்கொடையாக வழங்கினார்.

சின்னத்தமபிப் புலவர், ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலத்தில் வாழ்ந்தவர் ஆவர். இலங்கையில் உள்ள தமிழ்ப் புலவர்களுள் மதிப்புஞ் சிறப்பும் பெற்ற ஒருவராக அவர் வாழ்ந்தார்.

அக்காலத்திற் கரவெட்டியில் இருந்த வேலாயுத முதலியார் மீது ''கரவை வேலன் கோவை'' என்னும்

நூலைப் பாடிப் பரிசு பெற்றார். சண்டிருப்பாய் கல்வளை விநாயகர் மீது "கல்வளை அந்தாதி" என்னும் நூலையும், பறாளாய் விநாயகர் மீது "பறாளாய் விநாயகர் பள்ளு" என்னும் நூலையும் பாடினார். அவருடைய பாடல்கள் சுவையானவையும், ஓசைநயம் மிகுந்தவையும் ஆகும்.

## வினாக்கள்

1. வில்லவராயரைத் தேடி வந்தவர் தூரத்திலிருந்து வந்தவர் போலக் காணப்பட்டமைக்குக் காரணம் யாது?

2. வில்லவராயர் தம் மகனிடம் வெறுப்புக் கொண்டிருந்த காரணம் யாது? அவ்வெறுப்பு எதனால் நீங்கியது?

3. கொன்றை மரத்தின் பூவைப் 'பொன் பூ' எனப் புலவர் கூறியதற்குக் காரணம் யாது?

4. சின்னத்தம்பி புலவர் பாடிய நூல்கள் எவை?

5. பின்வரும் சொற்களை விளக்குக.
   கச்சேரி, உத்தரீயம், ஆர்வம், பூதலம், நன்கொடை, எடுத்துக்காட்டு.

28

# ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

பாத்திரங்கள்:—

ஒரு முதிய உழவன்

| | |
|---|---|
| சரத்<br>மணி<br>காசிம் | மூவரும் பத்து வயதான பள்ளிச் சிறுவர்கள் |

(காலை பத்து மணியிருக்கும். ஒரு மண் வீதி ஓரத்தில் ஒரு மாமரத்தின் கீழ், வயலில் வேலை செய்து களைத்த முதியவனான உழவன் ஒருவன் இளைப்பாறுகிறான். சரத், மணி, காசிம் மூவரும் அம்மரத்தின் கீழ் விழுந்து கிடந்த மாம்பிஞ்சுகளைப் பொறுக்கித் தின்று கொண்டிருக்கின்றனர். அந்த மண் வீதியில், பக்கத்தில் உள்ள உயர்ந்த மலையில் இருந்து உருண்டு வந்த ஒரு பாறாங் கல் விழுந்து கிடக்கிறது.)

மணி: (பாறாங்கல்லைக் காட்டி) சரத்! காசிம்! அங்கே பாருங்கள்! பெரிய ஒரு பாறாங்கல்!

சரத்: ஆம்; நாங்களும் பார்த்தோம்!

காசிம்: இரவு நல்ல மழைதானே! அதுதான் மலையில் இருந்து உருண்டு விழுந்திருக்க வேண்டும்

மணி: வழியில் வந்து விழுந்து கிடக்கிறது

காசிம்: கிடக்கட்டும்; எங்களுக்கென்ன?

சரத்: நல்லது; நாங்கள் ஏறி விளையாடலாம். இல்லையா?

மணி: நல்ல யோசனை; எங்கே ஏறிப் பார்ப்போம்!



படம் 28. முதிய உழவனும் பள்ளிச் சிறுவர்களும்

(மணி கல்லில் ஏறிக் குதிக்கிறான். சரத்தும் காசிமும் அவனைத் தொடர்ந்து ஏறி ஏறிக் குதிக்கிறார்கள். உழவன் இவர்களை அவதானித்துக் கொண்டிருக்கிறான்.

உழவன்: பிள்ளைகளே! பாறாங்கல் பாதையில் விழுந்து கிடக்கிறது. மக்கள் போக வரத் தடை யாக இராதோ?

காசிம்: எங்களுக்கென்ன? நாங்களா கல்லை உருட்டி விட்டோம்?

மணி: அதுதானே!

சரத்: பாறாங்கல் கிடக்கட்டும். வாருங்கள், நாங்கள் போவோம். ஆற்றில் நண்டு பிடிப்போம்.

(மூவரும் ஆற்றுக்குப் போக நடக்கிறார்கள்.)

உழவன்: (எழுந்து வருகிறான்) இங்கே வாருங்கள் பிள்ளைகள்! எங்கே போகிறீர்கள்? இந்தக் கல் அவ்வளவு பெரிய கல்லோ? ஒருவராலும் புரட்ட முடியாதோ?

மணி: நாங்கள் ஏன் கஷ்டப்பட வேண்டும்?

(காசிமும் சரத்தும் உழவனைப் பார்த்துக் கேள்வி யோடு தலை அசைக்கிறார்கள்.

உழவன்: நீங்கள் போய் வருகிற பாதைதானே; கல்லைப் புரட்டிவிட்டால் எல்லாருக்கும் நல்லது அல்லவா?

சரத்: வேறு யாரையும் கூட்டி வந்து புரட்டி விடுங் கள்! நாங்கள் போகிறோம்.

மணி: ஆம், ஆம். இது பெரிய கல். என்னால் அசைக்க முடியாது.

காசிம்: என்னாலும் முடியாது.

சரத்: ஐயோ! எனக்கும் இயலாது!

மணி: வாருங்கள் போவோம். ஆற்றிலே நண்டு பிடிப்போம்!

உழவன்: சுறுசுறுப்பான பிள்ளைகளே! இங்கு வாருங்கள்! உங்களுக்குக் கைகள் இல்லையா? உடம்பிலே பலம் இல்லையா? நீங்கள் என்ன கோழைகளா?

மூவரும்: (சற்றுக் கோபம் கொண்டு) யார் சொன்னது? நாங்கள் கோழைகள் இல்லை!

உழவன்: ஆனால், உங்களால் இந்தக் கல்லைப் புரட்ட முடியாமல் இருக்கிறதே! 'எங்களால் முடியாது' என்று கூறுகிறீர்களே?

மூவரும்: கல் மிகப் பெரிதாக இருக்கிறதே, தாத்தா! நாங்கள் என்ன செய்வோம்?

உழவன்: நீங்கள் ஒருவரும் கல்லை அசைத்துக் கூடப் பார்க்கவில்லை. முயற்சி செய்யாமல் எப்படி முடியாது என்று கூறலாம்?

(மூவரும் பாறாங்கல்லைக் கொஞ்சம் தயக்கத்துடன் பார்த்துக்கொண்டு நிற்கின்றனர்).

உழவன்: நீங்கள் நினைத்தால் முடியும்! பார்த்தால் சிங்கக் குட்டிகள் போல இருக்கிறீர்கள். உங்களை நீங்களே ஏன் குறைவாக நினைக்கிறீர்கள்?

(மூவரும் உற்சாகமும் தைரியமும் அடைகின்றனர்)

மணி: நான் இந்தக் கல்லைப் புரட்டுகிறேன் பார்!

(தன்னால் ஆன மட்டும் அசைத்துப் பார்க்கிறான். கல் அசையவில்லை) ம்ம்ம்..... என்னால் முடியாது. அசைக்கவே முடியாது.

சரத்: நான் புரட்டுகிறேன் பார்!

(அவனும் கல்லைத் தள்ளிப் பார்க்கிறான்; கல் அசையவில்லை)

என்னாலும் இயலாது; கல்லை ஆட்டவே முடியவில்லை.

காசிம்: உங்களால் முடியாதா? இதோ பார் நான் புரட்டிவிடுகிறேன்.

(அவனும் அசைத்துப் பார்க்கிறான். கல் அசையவில்லை).

என்னாலும் முடியாதப்பா!

(மூவரும் சோர்வடைந்து நிற்கின்றனர்).

மணி: எங்களுக்கேன் இந்தச் சம்பளமில்லாத வேலை? யாராவது செய்யட்டும்! வாருங்கள் நாங்கள் போவோம்!

உழவன்: யாராவது செய்யட்டுமா? ஏன் நீங்கள் செய்ய முடியாது? இது யார் நடக்கின்ற பாதை?

மூவரும: நாங்கள்தான்! ஆனால் நாங்கள் சிறுவர்கள்!

உழவன்: நீங்கள் சிறுவர்கள் என்பது சரி! ஆனால் இழிந்த பிறவி இல்லை; உயர்ந்த மனிதப் பிறவிகள். மனிதன் நினைத்தால் எதுதான் முடியாது? இது எங்கள் பாதை. (கல்லைக் காட்டி) இந்தத் தடையை

நாங்கள் அகற்றாவிட்டால் யார் அகற்றுவது? நாங்கள் செய்யாவிட்டால் யார் செய்வது?

(மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவாறு சற்று நேரம் யோசிக்கின்றனர்.)

உழவன்: என்ன யோசனை? யாரேனும் செய்யட்டும் என்ற எண்ணம் கூடாது; நாங்களே செய்வோம் என்ற நம்பிக்கை வேண்டும்.

சரத்: நாங்கள் இப்போது கல்லை அசைத்துத்தானே பார்த்தோம்.

மணி: ஆம். கல் அசையவில்லையே! நாம் என்ன செய்வது?

காசிம்: அதுதானே

உழவன்: உண்மை. ஆனால் நீங்கள் தனித்தனியாகத் தானே அசைத்துப் பார்த்தீர்கள்?

மூவரும்: மூவரும் சேர்ந்து தள்ளினால் அசைந்து விடுமா?

உழவன்: ஆம் பிள்ளைகளே, நிச்சயமாக! இவ்வுலகத்தில், தனி மனிதனாற் பெரிய காரியங்களைச் செய்து முடிக்க இயலாது. உலகத்தில் நடந்த பெரிய பெரிய காரியங்கள் எல்லாம் ஆளும் பேரும் சேர்ந்து செய்தவைதான்.

காசிம்: நான் ஒரு தனி ஆள்! என்னால் எதுவுமே செய்ய முடியாதா?

உழவன்: நல்ல கேள்வி! உன்னில் உனக்கு நம்பிக்கை நிச்சயம் இருக்க வேண்டும். ஒரு மனிதனின் தனி ஆற்றலிலும் பார்க்க, பல மனிதர்களின் கூட்டு ஆற்றலில் அதிக நம்பிக்கை இருக்க வேண்டும்.

சரத்: அப்படியென்றால்? நாங்கள் சேர்ந்தால் இக் கல்லைப் புரட்டிவிடலாம் இல்லையா?

உழவன்: நிச்சயமாக. இந்த வீதியைப் பாருங்கள்! ஒருவனின் உழைப்பினாலா இது உண்டானது? இல்லை. பலர் சேர்ந்து உழைத்ததின் பயன்! அதோ அங்கு போகும் காரைப் பாருங்கள்! அது தனி மனிதனாற் செய்யப்படவில்லை. பலர் சேர்ந்து உழைத்துத்தான் அதைச் செய்தார்கள். உலகத்தில் எல்லாம் அப்படித்தான்!

(மூவரும் உழவன் கூறுவதைக் கேட்டுவிட்டு வீதியிற் கிடக்கும் பாறாங்கல்லைப் பார்த்துக்கொண்டு சிந்திக்கிறார்கள்).

உழவன்: நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன். உங்களால் இக்கல்லைப் புரட்டிவிட முடியும்.

மூவரும்: (ஒருவரை ஒருவர் பார்த்து) ம்ம்ம்.... வாருங்கள் புரட்டுவோம். மூவரும் சேர்ந்து புரட்டுவோம். (மூவரும் சேர்ந்து உற்சாகத்துடன் பாறாங்கல்லைப் புரட்டுகிறார்கள். பாறாங்கல் அசையத்தொடங்குகிறது.)

மணி: கல் அசைகிறது! பாறாங்கல் அசைகிறது!

காசிம்: ஆம்! ஆம்; விடவேண்டாம்; தள்ளுங்கள், தள்ளுங்கள்.

சரத்: ஆம்! கல் நன்றாக அசைகிறது. நாம் புரட்டிவிடுவோம்.

(மூவரும் மகிழ்வோடு உழவனைப் பார்க்கின்றனர்.)

மூவரும்: நீங்களும் வந்து தள்ளுங்கள்.

(உழவன் உற்சாகத்துடன் ஓடிச் சென்று அவர்களுடன் சேர்ந்து பாறாங் கல்லைத் தள்ளுகிறான். கல் ஒரு முறை புரண்டு விழுகிறது). நாங்கள் புரட்டிவிட்டோம் (மூவரும் கைகொட்டித் துள்ளிக் குதிக்கின்றனர்)

உழவன்: (மூவரின் முதுகுகளிலும் தட்டி) நீங்கள் கெட்டிக்காரர்கள். இந்த நாட்டின் செல்வங்கள். இலங்கைத் திருநாடு உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் உங்களால் முடியாதது ஒன்றுமில்லை.

மூவரும் ஆம்! ஆம்! எங்களால் எதுவும் முடியும்!

உழவன்: பார்த்தீர்களா? ஒருவர் பலத்திலும் மூவர் பலம் எவ்வளவு சக்தி வாய்ந்தது!

(மூவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு)

மூவரும்: உண்மைதான்; உண்மைதான்.

உழவன்: நீங்கள் சூரர்கள்! வீரர்கள்.

மணி: நாங்களே இப்பாறாங் கல்லைப் புரட்டி அப்புறப் படுத்துவோமா?

சரத், காசிம்: செய்வோம்! செய்வோம்!

உழவன்: பொறுங்கள்! நீங்கள் யார் என்று இப்பொழுது உங்களுக்குத் தெரிகிறதா?

மூவரும்: ஆம், நாங்கள் இலங்கை மாதாவின் செல்வங்கள்!

உழவன்: (மூவரையும் வாரி அணைத்து) நன்றாகச் சொன்னீர்கள்! எனக்குக் களைப்பு நீங்கிவிட்டது. நான் வயலில் வேலை செய்யப் போகிறேன். நீங்கள்

இக்கல்லைப் பாதையிலிருந்து புரட்டி விடுவீர்கள். இல்லையா?

மூவரும்: நாங்கள் புரட்டுவோம். இத் தடையை நாங்கள் அப்புறப்படுத்துவோம். எங்கள் பாதையிலுள்ள தடைகளை நாங்களே அப்புறப்படுத்துவோம்!

உழவன்: நல்லது! இப்பொழுது இத் தடையை அகற்றுங்கள். வருங்காலம் உங்களுடையது!

மூவரும்: (கல்லைத் தள்ளிக் கொண்டு) நாங்களே அகற்றுவோம்! எங்கள் கைகளால் அகற்றுவோம்.

(முதிய உழவன் ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டு போகிறான்.)

## வினாக்கள்

1. பாதையில் விழுந்து கிடந்த பாறாங் கல்லைச் சிறுவர்கள் ஏன் அப்புறப்படுத்த எண்ணவில்லை?

2. அவர்களிடம் இருந்த தப்பான எண்ணங்கள் எவை?

3. உழவன் எப்படிப்பட்டவன்?

4. பின்வருவன யார் யார் கூற்றுக்கள்?

(அ) எங்களுக்கென்ன, நாங்களா கல்லை உருட்டி விட்டோம்?
(ஆ) நீங்கள் தனித்தனியாகத்தானே அசைத்துப் பார்த்தீர்கள்?
(இ) நாங்கள் ஏன் கஷ்டப்பட வேண்டும்?
(ஈ) நாங்கள் இலங்கை மாதாவின் செல்வங்கள்.
(உ) இலங்கைத் திருநாடு உங்கள் கைகளில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

5. உலகத்தில் நடைபெறும் பெரிய காரியங்கள் எப்படிச் செய்யப்படுகின்றன?

## மொழிப் பயிற்சி IV

அ. பின்வரும் முற்பகுதிகளுக்கேற்ற பிற்பகுதிகளைத் தெரிந்து இணைத்து வாக்கியமாக்கி எழுதுக.

| முற்பகுதி | பிற்பகுதி |
|---|---|
| 1. விடியற்காலையில் இரண்டு சிறுவர்கள் | பொன் பூச் சொரியும். |
| 2. வீட்டின் அடையாளத்தை நீ | அவனுடைய வேலை. |
| 3. வாசலிடைக் கொன்றை மரம் | பாட்டிலே சொல்லி விட்டாய். |
| 4. சின்னத்தம்பி அறிவில் | நடுக்கடலை அடைந்தது. |
| 5. கப்பல், புறப்பட்ட சிறிது நேரத்தில் | சந்தைக்குப் போனார்கள். |
| 6. யானைகளைப் பார்த்துக் கொள்ளுவது | சிறந்து விளங்கினான். |

ஆ. அடைப்புக் குறிக்குள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக.

1. நான் (வந்தேன், வந்தோம்).
2. நாம் (படிக்கிறேன், படிக்கிறோம்)
3. நாங்கள் (ஓடுவோம், ஓடுவீர்).
4. நீ (பார்த்தாய், பார்த்தீர்).
5. நீங்கள் (செய்கிறாய், செய்கிறீர்கள்).
6. சிறுவன் (கூறினான், கூறினார்).
7. சிறுமி (கழுவினாள், கழுவினார்).

8. மாணவர் (விளையாடினான், விளையாடினர்).

9. யானை (எழுந்தது, எழுந்தன).

10. கைகள் (உயர்ந்தது, உயர்ந்தன).

இ. அடைப்புக் குறிக்குள் உள்ள பொருத்தமற்ற சொற்களைத் தெரிவு செய்க.

1. (நான், நாங்கள்) பாடம் படித்தோம்.
2. (நீ, நீங்கள்) எப்போது சென்றீர்கள்?
3. (நான், நாங்கள்) படம் பார்த்தேன்.
4. (நீ, நீங்கள்) தண்ணீர் குடித்தாய்.
5. (புத்திரன், புத்திரி) பிறந்தாள்.
6. (அவன், அவள், அவர்) கதை சொன்னார்.
7. (சேவகன், சேவகர்) காவல் செய்தான்.
8. (காகம், காகங்கள்) அழுக்கை உண்டன.
9. (மலர், மலர்கள்) மலர்ந்தன.
10. ''அரசன் – அரசி'', ''சிறுவன் – சிறுமி''— இவற்றில் அரசன், சிறுவன் என்பன ஆண்பாலைக் குறிக்குஞ் சொற்கள். அரசி, சிறுமி என்பன பெண்பாலைக் குறிக்குஞ் சொற்கள்.

கீழேயுள்ள ஆண்பாற் சொற்களுக்குரிய பெண்பாற் சொற்களையும், பெண்பாற் சொற்களுக்குரிய ஆண்பாற் சொற்களையும் எழுதுக.

| | |
|---|---|
| 1. தந்தை .............. | 6. கிழவன் ........... |
| 2. கணவன் ............ | 7. ........... உழத்தி |
| 3. .......... எசமாட்டி | 8. ............ தோழி |
| 4. ............. இடைச்சி | 9. மாமன் .......... |
| 5. மாணவன் .......... | 10. ஆசிரியன் ........ |

உ. பின்வருஞ் சொற்களின் கருத்துள்ள வேறொரு சொல் எழுதுக.

| | |
|---|---|
| 1. பிற்பகல் ............ | 6. அண்மை ........ |
| 2. வர்த்தகம் .......... | 7. ஒளி .............. |
| 3. கவி .................. | 8. சுத்தம் ............ |
| 4. வீதி .................. | 9. உயர்வு ............ |
| 5. புத்தகம் ............ | 10. முன்பு .......... |

ஊ. பின்வருஞ் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. திருப்பி + காட்டினான் = ......................
2. ஓடி + பிடித்து = ..............................
3. பூ + சொரியும் = ..............................
4. ஆல் + இலை = ..............................
5. பதில் + அளித்த = ..............................
6. துயர் + அறிந்து = ..............................
7. பால் + அன்னம் = ..............................
8. பேர் + என்ன = ..............................
9. தரையை + கண்டோம் = ......................
10. வால் + ஆட்டியது = ......................

எ. பின்வருஞ் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கிய மாக்கி எழுதுக.

1. நிழல், வீதியின், அந்த, இரு பக்கத்திலும், நின்றன, மரங்கள்.
2. சின்னத்தம்பி, பொருள், ஈற்றிலே, கூறினான், அப்பாடலுக்கு.

3. பாடசாலையில், எங்கள், சங்கக் கூட்டம், மாணவர், ஆரம்பமானது.

4. மாளிகை, போல, பெரிய, கப்பல், ஒரு தென் பட்டது.

5. கிரை, அவன், கண்டான், விதை, இருப்பதை, கூடையில், அங்கு, ஒரு

ஏ. இங்கே சில விடைகள் உண்டு. அவற்றுக்குரிய வினாக்கள் கீழே கலந்து எழுதப்பட்டுள்ளன. விடைகளுக்குரிய வினாக்களைத் தெரிவு செய்க.

1. ..................................................

விடை: சின்னத்தம்பிப் புலவரின் தந்தையார் பெயர் வில்லவராயர்.

2. ..................................................

விடை: சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய நூல்களுள் ஒன்று கரவை வேலன் கோவை.

3. ..................................................

விடை: மக்கா நகரம் சவூதிஅறபியா தேசத்தில் உண்டு.

4. ..................................................

விடை: மொரன் நகரத்துச் சிறுவன் பெயர் மக்சுற்றோ.

5. ..................................................

விடை: "பொன் பூச் சொரியும்" என்னும் பாடலைப் பாடியவர் சின்னத்தம்பிப் புலவர்.

வினா: மக்கா நகரம் எங்கு உண்டு?

வினா: சின்னத்தம்பிப் புலவரின் தந்தையார் பெயர் என்ன?

வினா; ' பொன் பூச் சொரியும்'' என்னும் பாடலைப் 5 பாடியவர் யார்?

வினா: சிஃானத்தம்பிப் புலவர் இயற்றிய நூல்களில் 2 ஒன்றுகூறுக.

வினா: மொான் நகரத்துச் சிறுவன் பெயர் என்ன?

ஐ. பின்வருவன ஒவ்வொன்றையும் பற்றிப் பப்பத்து வாக்கியங்கள் எழுதுக.

4 பலா மரம், நெல், ஆடு.

# 29

## இஸ்லாமிய ஆண்டு

பௌத்த சமயம், இந்து சமயம், இஸ்லாமிய சமயம், கிறிஸ்தவ சமயம் ஆகிய சமயங்களைச் சேர்ந்த மக்கள் இந்நாட்டில் வாழ்கின்றனர். ஒவ்வொரு சமயத்தைப் பின்பற்றுவோரும் தத்தம் சமய ஒழுங்கு முறைப்படி வாழ்க்கை நடத்துகின்றனர். ஒவ்வொரு சமயத்தாருக்கும் உரிய விழாக்கள், கொண்டாட்டங்கள், பெருநாள்கள் என்பன குறிக்கப்பட்ட விசேட தினங்களில் நடைபெறுகின்றன.

பௌத்தர்களும் இந்துக்களும் சித்திரை மாதத்திலே தம் புத்தாண்டைக் கொண்டாடுகின்றனர். அவர்களின் ஆண்டு புராதன இந்திய முறைப்படி கணிக்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள் ஜனவரி மாதத்திலே தம் வருடப் பிறப்பைக் கொண்டாடுவர். அவ்வாண்டு கிறீஸ்துநாதர் பிறப்பிலிருந்து ஆரம்பிக்கிறது. முஸ்லிம்கள் முஹர்ரம் மாதத்திலே தமது புது வருடத்தைக் கொண்டாடுவர்.

இஸ்லாமிய ஆண்டு பிறந்த கதை சுவையானது. அது முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்ச்சி ஒன்றை நினைவுறுத்துகிறது.

நபிகள் நாயகம் அவர்கள் மக்காவிலே இஸ்லாம் சமயத்தைப் பற்றிப் போதனை செய்துகொண்டிருந்தார்கள்; அப்பொழுது அங்கே பல எதிர்ப்புகள் தோன்றின. எதிரிகள், நபிகள் நாயகம் அவர்களுக்கும் அவர்களின் தோழர்களுக்கும் பல துன்பங்களைச் செய்தனர்.

ஒரு நாள் இரவு நபிகள் நாயகம் அவர்கள் வீட்டை எதிரிகள் சுற்றி வளைத்துக்கொண்டனர். அன்றிரவு நபிகள் நாயகம் அவர்களைக் கொன்றுவிடு வதற்காகவே அவர்கள் அங்கு வந்திருந்தனர். இவ் வேளையில் ''நீர் மக்காவை விட்டு மதீனாவுக்குச் செல் லும்'' என்று இறைவன் நபிகள் நாயகம் அவர்களுக் குக் கட்டளை இட்டான். நபிகள் நாயகம் அவர்கள் தம் மருமகன் அலி (றழி) அவர்களைப் பார்த்து ''என்னைக் கொல்வதற்காக எதிரிகள் நம் வீட்டைச் சூழ்ந்துகொண்டார்கள். எனது இடத்தில் நீங்கள் படுத்துக்கொள்ளுங்கள். நான் வெளியே செல்லப் போகிறேன். உங்கள் போர்வையை எனக்குத் தாருங் கள். எனது போர்வையால் நீங்கள் போர்த்துக் கொள்ளுங்கள்'' என்றார்கள். அலி (றழி) அவர்கள் நாயகம் அவர்கள் சொற்படியே செய்தார்கள். நபிகள் நாயகம் அவர்கள் வெளியேறும்போது எதிரி கள் யாவரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

வெளியே சென்ற நாயகம் அவர்கள் அபூபக்கர் சித்தீக் (றழி) அவர்களின் வீட்டுக்குச் சென்றார்கள்; கதவைத் தட்டினார்கள். நடு இரவிலே கதவு தட்டப் படுவதை அபூபக்கர் (றழி) கேட்டு ஆச்சரியத்துடன் கதவைத் திறந்தார்கள். அங்கே நபிகள் நாயகம் நிற்பதைக் கண்ட அபூபக்கர் (றழி) அவர்கள் ''எங்கள் அருமை நாயகமே, இந்த நேரத்திலே தாங்கள் இங்கு வந்த காரணம் யாதோ?'' என்றார்கள்.

''எதிரிகள் என்னைக் கொல்லத் திட்டமிட்டுவிட் டார்கள். இப்பொழுது அவர்கள் என் வீட்டைச் சூழ்ந்துகொண்டு நிற்கிறார்கள். என்னை மதீனாவுக்குச் செல்லும்படி இறைவன் கட்டளை இட்டிருக்கிறான். நீங்களும் என்னுடன் துணைக்கு வருகிறீர்களா'' என் றார்கள் நபிகள் நாயகம் அவர்கள்

"தங்களுடன் வருவதைப் பெரும் பாக்கியமாகவே நான் கருதுகிறேன். இதோ வந்துவிட்டேன்" என்று சொன்னபடி அபூபக்கர் (றழி) அவர்கள் உடனே புறப்பட்டுச் சென்றார்கள்.

இரவோடு இரவாக இருவரும் மதீனாவை நோக்கி நடந்தார்கள். எதிரிகள் தமது அடிச் சுவட்டைப் பின்பற்றி வரக்கூடும் என்ற பயத்தினால் இருவரும், தம் குதிக் கால்களினாலேயே நடந்து சென்றார்கள். இரவு முழுதும் நடந்து விடியற் காலை ஒரு குகையை அடைந்தார்கள். பகலில் நடந்துகொண்டிருந்தால், தம்மைத் தேடி வரும் எதிரிகள் பிடித்துவிடுவார்கள் என்று எண்ணி இருவரும் அந்தக் குகையினுட் சென்று மறைந்திருந்தார்கள்.

மக்காவிலே நாயகம் அவர்களின் வீட்டைக் காத்துக் கொண்டிருந்த எதிரிகள் விடியற் காலை கதவு திறக்கப்பட்டதும் உருவிய வாளுடன் உள்ளே பாய்ந்தார்கள். வீட்டைச் சோதனை செய்தார்கள். நபிகள் நாயகம் அவர்கள் படுக்கையில் அலி (றழி) அவர்கள் படுத்திருப்பதைக் கண்டு ஏமாந்தார்கள்.

நபிகள் நாயகம் அவர்கள் தப்பிவிட்டார்கள் என்பதை நினைக்க அவர்களுக்குக் கோபம் வந்தது. அலி அவர்களைப் பிடித்து "எங்கே உமது மாமனார்? உண்மையைச் சொல்லும்" என்றார்கள்.

"நான் அவரைக் காத்துக்கொண்டிருக்கவில்லையே. நீங்கள் தானே காத்துக்கொண்டிருந்தீர்கள்? இந்த வாசல் வழியாகத்தானே வெளியே சென்றார்கள்" என்றார் அலி (றழி) அவர்கள். ஆவேசத்துடன் வெளி

யேறிய அவர்கள் அபூபக்கர் (றழி) அவர்கள் வீட்டுக்குச் சென்று அவரை விசாரித்தார்கள். அவரும் அங்கு இல்லையென்று தெரிந்ததும் இருவரும் தப்பி ஓடி விட்டாரகள் என்று தீர்மானித்தார்கள்.

உடனே தப்பியோடிய இருவரில் எவரையேனும் பிடித்துத் தருபவர்களுக்கு நூறு ஒட்டகம் சன்மானமாகக் கொடுக்கப்படும் என்று மக்கா முழுவதும் அறிவித்தார்கள். இந்த அறிவித்தலைச் கேட்டு, பலா நபிகள் நாயகம் அவர்களையும் அபூபக்கர் (றழி) அவர்களையும் தேடிப் புறப்பட்டார்கள்.

இவ்வாறு புறப்பட்டுச் சென்றவர்களிற் சிலர் நபிகள் நாயகம் அவர்களும் அபூபக்கர் (றழி) அவர்களும் தங்கியிருந்த குகைக்கு அருகே வந்து தேடினார்கள். குதிரைகளின் அடிச் சத்தங்களைக் கேட்ட அபூபக்கர் (றழி) அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து ''எங்கள் நாயகமே! எதிரிகளோ பலர் வந்திருக்கிறார்கள். ஆனால் நாம் இருவர் மட்டுமே இருக்கிறோம்'' என்றார்கள்.

அப்பொழுது நபிகள் நாயகம் அவர்கள் ''நாம் இருவர் அல்லர்; மூவர் இருக்கிறோம். அல்லாஹ்வும் நம்முடன் இருக்கிறான். ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்'' என்றார்கள். அவர்களைத் தேடி வந்த எதிரிகள் அக்குகை வாயிலைச் சிலந்தி வலை மூடியிருப்பதைக் கண்டு உள்ளே செல்லாது திரும்பிவிட்டார்கள்.

நபிகள் நாயகம் அவர்களும் அபூபக்கர்(றழி) அவர்களும் மூன்று பகலும் மூன்று இரவும் அக்குகையிலே தங்கியிருந்தார்கள். பின் அங்கிருந்து புறப்பட்டு மதீனாவை அடைந்தார்கள். இவ்வாறு மக்காவை விட்டு மதீனாவுக்குச் சென்ற சம்பவமே 'ஹிஜ்ரத்' எனப்படும். இந்நிகழ்ச்சியிலிருந்தே இஸ்லாமிய ஆண்டு கணிக்கப்பட்டு வருகிறது. இதனை ஹிஜ்ரி ஆண்டென்றும் கூறுவர்.

## வினாக்கள்

I. 1. இலங்கையில் உள்ள சமயங்கள் எவை?

2. எதிரிகள் ஏன் நபிகள் நாயகம் அவர்களின் வீட்டுக்கு வந்தார்கள்?

3. அவர்கள் ஏன் ஏமாந்தார்கள்?

5. இஸ்லாமிய ஆண்டு எதிலிருந்து ஆரம்பமாகிறது?

II. பின்வருந் தொடர் வாக்கியங்களைத் தனித்தனி வாக்கியங்களாகப் பிரித்தெழுதுக.

1. பாத்துமா நன்றாகப் படித்ததாற் பரீட்சையிற் சித்தியடைந்தாள்.

2. கண்ணன் சந்தைக்குச் சென்று காய் கறிகள் வாங்கி வந்தான்.

3. மணியடிக்க ஆசிரியர் வகுப்புக்கு வந்தார்.

4. கமலா பாட்டுப் பாடியபோது மாணவர் கைதட்டிப் பாராட்டினர்.

5. எட்டயபுரத்திற் பிறந்த பாரதியார் இனிமையான கவிதைகளைப் பாடியுள்ளார்.

6

# 30

## மணி மொழி

எண்ணியதற் கேற்பவே கன்மபயன் யாவர்க்கும்
எண்ணியதே யன்றி யிலது.

அல்லும் பகலும் அகத்தின் அழுக்ககல
ஒல்லும் வழியால் உழை.

படைப்பினங்கள் எல்லாம் பரன்குடும்பம் துன்பம்
துடைக்குநரே மிக்கார் பரற்கு.

அடியார்க் கடியான் அருள்புரியுந் தோறும்
அடியார்க் கருளும் இறை.

அண்டை அகத்துறைவான் அச்சமற்று வாழவிடான்
விண்டலத்துச் சென்றடையான் வீடு.

இளைஞர் குறைக்கிரங்கி மூத்தோர்க் கடங்கார்
கிளைஞர் எமக்கல் லவர்.

பொறுமை இறையிடத்த சாத்தான் பொறுமை
யிலாமை பிறக்கு மிடம்.

மௌலவி முஹம்மது உமர்

விளக்கக் குறிப்புகள்

பரன் — கடவுள்.
கிளைஞர் — நட்பினர், உறவினர்.

31

## சிவப்பு ரோசா

சுவரிலிருந்த அழகான படத்தைக் கண்ணன் ஆவலோடு பார்த்தான். அது கண்ணனின் தமையன் வரைந்த படம். பாடசாலையில் நடந்த ஓவியப் போட்டியில் முதற் பரிசு பெற்ற படம். அந்தப் படத்தை முதல் நாள் இரவுதான் வீட்டுச் சுவரிலே தொங்கவிட்டார்கள். அதை அன்று காலைதான் கண்ணன் கண்டான்.

படத்திலே அழகான கொன்றை மரமொன்று வரையப்பட்டிருந்தது. அந்த மரத்தின் கிளைகளிலே பொன்னிறமான பூக்கள் பூத்து நிறைந்திருந்தன. காற்றுக்கு மெதுவாக அசைவன போன்று மரக் கிளைகள் தோன்றின. மரத்தின் கீழுள்ள புல் வெளியிலே மாடொன்று மேய்ந்து கொண்டு நின்றது. நன்றாகக் கொழுத்திருந்த அந்த மாடு வாலை மடக்கி ஈக்களை விரட்டுவது போல இருந்தது. மாட்டின் கூரிய கொம்புகள் வளைந்திருந்தன. அதன் கழுத்திலிருந்த சதங்கைகள் சூரிய வெளிச்சம் பட்டு மினுங்கிக்கொண்டிருந்தன. நீர் வழிந்த தோற்றமுடைய மாட்டின் கண் பார்ப்பதற்கு இரக்கத்தினைத் தருவதாக இருந்தது.


அன்று விடுமுறை. தந்தையும் தமையனும் வயலுக்குச் சென்றுவிட்டார்கள். தாய் காய்கறி வாங்கச் சந்தைக்குப் போய்விட்டாள்; திரும்பி வரவில்லை. தனிமையிலிருந்த கண்ணனாற் சும்மா இருக்க முடியவில்லை.

ஓடிச் சென்று தான் முன்பு வரைந்து வைத்திருந்த படங்களை எடுத்துப் பார்த்தான். கருமையான கடதாசியிலே வண்ண வண்ணச் சுண்ணக் கட்டிகளினால் வரைந்து வைத்திருந்த படங்கள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தன. அவன் வரைந்த மாம்பழங்கள், தோகை விரிக்கும் மயில், துள்ளும் காவடியாட்டக்காரன் முதலிய படங்கள் மிக நன்றாக இருந்தன.

தான் வரைந்த மாம்பழப் படத்தை மீண்டும் ஒரு முறை பார்த்தான். பழைய நினைவுகள் திரும்பி வந்தன. கடந்த வருடம் அவனது தாய், முற்றிய மாங்காய்களை வைக்கோலால் மூடிப் பழுக்க வைத்தாள். சில நாட்கள் சென்றபின் அவற்றைப் பிரித்துப் பார்த்தபொழுது, அவை சிவந்து கனிந்து பழுத்திருந்தன. அப்பழங்களைப் படமாக வரைய வேண்டும் போல அவனுக்குத் தோன்றியது. அன்று வரைந்ததே இந்த மாம்பழப் படம்.

'இன்றும் படங்கள் வரைய வேண்டும்' என்று கண்ணன் எண்ணினான். தமையனின் மேசையில் இருந்த கடதாசிகளையும், வண்ணங்களையும் பெரிய தூரிகை ஒன்றையும் எடுத்துக்கொண்டு வந்தான். கிண்ணம் ஒன்றிலே தண்ணீரையும் கொண்டுவந்தான்.

வீட்டு முற்றத்திலே பூத்துக் குலுங்கும் சிவப்பு றோசா மலர்களை வரைய வேண்டுமென்ற ஆசை உண்டானது. சிவப்பு நிறமென்றால் அவனுக்கு என்றுமே விருப்பந்தான். றோசாவின் இதழ்களை வட்ட வட்டமாகச் சிவப்பு நிறத்தினாலே தீட்டினான். பச்சை வண்ணத்தால் இலைகளை தீட்டினான். அதே வண்ணத்தினால் நீண்ட தண்டினையும் வரைந்தான். பெரிய பெரிய றோசாப் பூக்கள் பார்ப்பதற்கு அழகாக இருந்தன.



படம் 29. கண்ணன் படம் வரைகிறான்.

படத்தைச் சுவரிலே சார்த்தி வைத்துவிட்டுச் சிறிது தூரத்திலே போய் நின்று பார்த்தான். இடுப்பிலே கைகளை வைத்தபடி தலையைச் சாய்த்துப் பார்த்தான். அவனுடைய தமையனும் இப்படித்தான் பார்ப்பது வழக்கம். வரைந்த பூக்கள் நன்றாகத்தான் இருக்கின்றன என எண்ணினான். அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தான். காய்கறி வாங்கச் சென்ற தாய் வீட்டிற்கு வந்து சமைக்கத் தொடங்கிவிட்டாள்.

'போதுமான அளவு கடதாசிகள் இருக்கின்றன. இன்னும் சில படங்களை வரைய வேண்டும்' என்று அவன் எண்ணினான். தனது மனதிற்கு உவப்பான வகையிலே வட்டங்களையும் கோடுகளையும் வரைந்து

இடைவெளிகளிலே வண்ணங்களைப் பூசிமெழுகி நிரப்பினான். பல நிற வட்டங்கள் பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தன. அப்பொழுது யாரோ வீட்டுப் படலையைத் திறக்குஞ் சத்தம் கேட்டது. கண்ணன் எழுந்து நின்று எட்டிப் பார்த்தான். தனது தந்தையும் தமையனும் வருவதைக் கண்டான். அவனது மனத்திலே பயம் வந்தது. 'ஐயையோ, அண்ணாவிடம் கேட்காமல் அவருடைய கடதாசிகளையும் வண்ணங்களையும் எடுத்து விட்டேன்! அவர் அடிப்பாரோ?' என்று எண்ணிப் பயந்தான்.

தான் வரைந்த படங்களை 'விறு விறு' என்று அள்ளிச் சுருட்டிக் கொண்டுபோய் அலுமாரிக்குப் பின்னால் அவன் ஒளித்து வைத்தான். ஒன்றுந் தெரியாதவன் போல அடுப்படிப் பக்கஞ் சென்றான்.

உள்ளே வந்த தமையன் மேசையைப் பார்த்தான். வண்ணப்பெட்டி ஒரு புறமும் தூரிகை ஒரு புறமும் கிடந்தன. மேசை ஈரமாய்க் கிடந்தது. அவனுக்குக் கோபம் வந்தது. 'இது கண்ணனின் விளையாட்டாகத் தான் இருக்க வேண்டும்' என்று நினைத்தான்.

''அம்மா, அம்மா, எங்கே கண்ணன்? அவன் இங்கே செய்து வைத்திருக்கும் வேலையை வந்து பாருங்கள்'' என்று கத்தினான்.

''ஏன், என்ன நடந்தது?'' என்று கேட்டுக்கொண்டு தாய் அங்கு போனாள். கண்ணன் தாயின் பின்னாற் பதுங்கிப் பதுங்கிச் சென்றான்.

அவனைக் கண்ட தமையன் ''என்ன செய்துகொண்டிருந்தாய்? உண்மையைச் சொல்'' என்று வெருட்டினான்.

“வேறொன்றும் செய்யவில்லை, நாலைந்து படங்கள் கீறிப் பார்த்தேன்” என்று தாயின் முகத்தைப் பார்த்துக்கொண்டு கண்ணன் கூறினான்.

“ஓ, நீயும் படம் கீறத் தொடங்கிவிட்டாயா? கொண்டு வா பார்ப்போம்” என்று தந்தை கேட்டார். கண்ணன் தான் ஒளித்து வைத்த படங்களை எடுத்து வந்து எல்லோருக்கும் காட்டினான்.

கண்ணன் வரைந்த ஓவியங்களைக் கண்டு தந்தையும் தாயும் தமையனும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்கள் ஓவியத்தைக் கையிலெடுத்துப் பார்த்து மகிழ்வதைக் கண்டு கண்ணனின் பயம் பறந்தது.

கண்ணன் ஒய்வு நேரங்களிலே தான் வரைந்து ஒளித்து வைத்திருந்த எல்லாப் படங்களையும் ஓடிப் போய் எடுத்து வந்தான்; எல்லாருக்கும் காட்டினான். தந்தையும் தாயும் தமையனும் படங்களை ஒவ்வொன்றாகப் பார்த்து மெச்சினார்கள்.

“படங்கள் நன்றாக இருக்கின்றன. நிறங்களை மிகவும் சிறப்பாக உபயோகித்திருக்கின்றாய்” என்ற தமையனின் பாராட்டுரை கண்ணனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஓவியம் வரைவதிலே கண்ணனுக்கு மேலும் பயிற்சியளிக்க எண்ணிய தந்தை ஓர் ஆசிரியரை ஒழுங்கு செய்து தருவதாகக் கூறினார்.

“இந்தச் சிவப்பு றோசா ஓவியத்தை உலகச் சிறுவர் ஓவியப் போட்டிக்கு அனுப்புவோம்” என்று தமையன் கூறினான். கண்ணனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

## வினாக்கள்

1. படம் வரைய வேண்டும் என்ற ஆசை கண்ணனுக்கு எவ்வாறு தோன்றியது?

2. மாம்பழப் படம் வரைவதற்கு கண்ணனைத் தூண்டிய நிகழ்ச்சி எது?

3. வண்ணச் சுண்ணக் கட்டிகளினாற் கண்ணன் வரைந்த படங்களிலே எவை மிக நன்றாக விளங்கின?

4. தான் வரைந்த படங்களைக் கண்ணன் ஏன் அலுமாரிக்குப் பின்னால் ஒளித்து வைத்தான்?

5. உங்களுக்குப் பிடித்த ஓவியம் ஒன்றைப் பற்றி விளக்கிக் கூறுக.

II. கீறிட்ட இடங்களைப் பொருத்தமாக நிரப்புக.

1. ஆடு கத்தும் என்பது போல நாய் ................

2. யானைக்கு இலத்தி என்பது போல ஆட்டுக்கு .......

3. வாழைக்குக் குட்டி என்பது போல தென்னைக்கு ................

4. குயில் கூவும்; மயில் ..............

5. சேவல் என்பதற்குப் பேடு; களிறு என்பதற்கு ................

# 32


## துடிப்பான சிறுவன்

அப்பொழுது அந்தச் சிறுவனுக்கு ஐந்து வயது இருக்கும். தொமஸ் அல்வா எடிசன் என்பது அவனுடைய முழுப் பெயர். எல்லாரும் அவனை 'அல்' என்று செல்லமாகப் கூப்பிடுவார்கள்.

ஒரு நாள் 'அல்' தன் தாயைத் தேடிக்கொண்டு சமயலறைக்குப் போனான். அந்தப் பக்கமாக வந்த தந்தை அவனைக் கண்டார். அவனுடைய காற்சட்டையின் பின்புறத்தில் ஏதோ அழுக்காக இருந்தது. மஞ்சள் நிறமான பசை போல அது தென்பட்டது. ஏதோ குழப்படி செய்துவிட்டுத்தான் அவன் போகிறான் என்பது தந்தைக்குத் தெரிந்துவிட்டது. அவர் மகனைக் கூப்பிட்டார். ''உண்மையைச் சொல். இப்பொழுது என்ன செய்துகொண்டிருந்தாய்?'' என்று தந்தையார் உறுக்கிக் கேட்டார்.

''ஒன்றும் இல்லை அப்பா, முட்டை ...... குஞ்சு ........ பொரி'' என்று 'அல்' தடுமாறினான்.

தந்தையாருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. 'குபீர்' என்று சிரித்துவிட்டார். ''பரவாயில்லை பயப்படாதே, என்ன நடந்தது சொல்லு'' என்று மீண்டுங் கேட்டார்.



படம் 30. சிறுவன் எடிசனும் அவனுடைய தந்தையாரும்.

''இல்லை, அப்பா; கோழிகள் அடை காப்பதைப் பார்த்துக்கொண்டு நின்றேன். எவ்வளவு நேரம் எடுக்கிறது குஞ்சு பொரிக்க? பாவம் கோழிகள்! முட்டையின் மீது இருந்து களைத்துப் போய்விட்டன. நான் கோழிகளுக்கு உதவி செய்தேன்'' என்று 'அல்' மறுமொழி சொன்னான்.

''கோழிகளுக்கு உதவி செய்தாயா? எப்படி செய்தாய்?'' என்று தகப்பனார் கேட்டார்.

''முட்டைகளின் மேல் நானே குந்தியிருந்து அடை காத்தேன்'' என்றான் மகன்.

தம்முடைய மகனின் செய்கையை கேட்ட தகப்பனுக்கு வேடிக்கையாகவும் இருந்தது. கோபமும் வந்தது.

''சரி, போ, போ; இனிமேல் இப்படி எல்லாம் செய்யாதே'' என்று எச்சரிக்கை செய்தார்.

தொமஸ் அல்வா எடிசனின் தந்தை ஓர் உணவு விடுதியை நடத்தி வந்தார். தாயார் பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாக இருந்தவர். அவர்கள் அமெரிக்காவிலுள்ள மிலான் என்னும் இடத்தில் வாழ்ந்தவர்கள். அவர்களுடைய மகனான 'அல்' சுறுசுறுப்பு மிகுந்தவன். ஒரு கணமும் சும்மா இருக்கமாட்டான். பரபர என்று ஓயாமல் எதையேனும் செய்து கொண்டே இருப்பான். ஏதாவது புதுப்புது விளையாட்டுகளில் ஈடுபடுவான்.

இதனால் அவன் சில தொல்லைகளுக்கு உள்ளானதும் உண்டு. ஒரு நாள் விளையாடிக்கொண்டிருந்த சமயம் தகப்பனாரின் தானியக் களஞ்சியத்துக்கு நெருப்பு வைத்துவிட்டான். நல்ல வேளை அது பெரு நெருப்பாகிவிடுவதற்கு முன் யாரோ பெரியவர்கள் கண்டு, நெருப்பை அணைத்துவிட்டார்கள். அவ்வாறு செய்யவில்லையானால், அந்த ஊரே எரிந்து சாம்பலாய்ப் போயிருக்கும்.

வேறொரு நாள் 'அல்' ஒரு தண்ணீர்க் கால்வாய்க்குள்ளே தவறி விழுந்துவிட்டான். மகனைக் காணவில்லையே என்று பெற்றோர் திகைத்தனர். எங்கும் தேடினர். கடைசியிலே நீச்சலில் நிபுணனான ஒருவன் 'அல்' லைத் தேடிப்பிடித்துக் காப்பாற்றினான்.

மற்றொரு நாள் 'அல்' ஓர் எலிப்பொறியைக் கண்டான். அது எப்படி வேலை செய்கிறது என்று அறிய அவன் ஆசைப்பட்டான். பொறியை எடுத்தான். அதைப் புரட்டிப் பார்த்தான்; இழுத்தும் தள்ளியும் அழுத்தியும் பார்த்தான். இப்படியெல்லாம் சோதனை செய்து பார்த்தபோது, அந்தப் பொறி அவனுடைய விரலின் நுனியை நறுக்கிவிட்டது. அவனுடைய தாய் விரலுக்கு மருந்து கட்டிவிட்டாள்; மகனைத் தேற்றினாள்.

'அல்' லின் குழப்படிகள் நாளுக்கு நாள் அதிகமாயின. அவன் தனது குறும்புச் செயல்களாலே தனக்கும் பிறருக்கும் தொல்லையை உண்டாக்கினான். 'இவனுக்கு எட்டு வயது ஆகிறது. பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவோம். அங்கேயாவது இவன் அடங்கி நடக்கிறானா பார்ப்போம்' என்று 'அல்' லின் தந்தை நினைத்தார். தமது எண்ணத்தைத் தம் மனைவிக்குத் தெரிவித்தார். அவளும் 'மகனைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்புவதுதான் நல்லது' என்று சம்மதித்தாள். அடுத்த நாள் அவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள். 'இனி அவன் திருந்திவிடுவான்' என்று எண்ணி ஆறுதற் பெருமூச்சு விட்டார்கள்.

ஆனால், அவன் குணம் மாறவில்லை. பள்ளிக்கூடத்திலும் அவன் அமைதியாக இருக்கவில்லை. அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்டான்; ஆசிரியரிடமும் கேட்டான்; மாணவர்களிடமும் கேட்டான். பாடப்புத்தகங்களில் அவனின் கவனம் செல்லவில்லை. அவற்றை அவன் அக்கறையோடு படிக்கவில்லை. வகுப்பிலே பாடம் நடக்கும்போது, அவன் கதைத்துக்கொண்டு இருப்பான்; பின்னால் இருக்கும் தன் நண்பன் பக்கம் திரும்புவான்; ஏதாவது கதை கொடுப்பான் அல்லது ஆசிரியரையே இடையிற் குழப்புவான்; கேள்விகள் கேட்பான்.

அவனுடைய செயல்கள் ஆசிரியருக்குக் கோபமூட்டின. அவராற் பொறுக்க முடியவில்லை. அவர் எடிசனை ஏசினார். "அடே நீ ஒரு மட்டிப்பயல். விழல் விசரன்" என்று ஆசிரியர் ஏசினார்.

அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. வீட்டுக்கு மீண்டவுடன், நேரே தாயாரிடம் போனான். "அம்மா, நான் விழலனா?" என்று அவளைப் பார்த்துக் கேட்டான். தாய் ஒன்றும் பேசவில்லை. அடுத்த நாள் அவனைப் பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டாம்

என்று அவள் சொன்னாள். தானே பள்ளிக்கூடத்துக்குப் போனாள். தன் மகனை ஏசிய ஆசிரியரைச் சந்தித்தாள். அவரோடு பேசிய பிறகு, தன் மகனை இனி அந்த ஆசிரியரிடம் அனுப்புவதில்லை என்ற முடிவுக்கு வந்தாள்.



படம் 31. எடிசனின் ஆய்கூடத்திற் பரிசோதனை நடைபெறுகின்றது.

எடிசனின் கல்வி வீட்டிலேயே தொடர்ந்து நடந்தது. அவனுடைய தாய் அவன் படிப்பில் உதவி செய்தாள். பெருந்தொகையான புத்தகங்களை வாங்கிக் கொடுத்தாள். இரசாயனப் புத்தகங்களையும் விஞ்ஞானப் புத்தகங்களையும் எடிசன் ஆசையோடு வாசித்தான். வீட்டின் பக்கத்திலிருந்த ஒரு கொட்டில் மூலையை அவன் ஆய்கூடமாகப் பாவித்தான். அங்கே தன் பரிசோதனைகளைச் செய்தான். பழைய கம்பிகள், தகடுகள், சுருள்கள், பற்றரிகள் போன்ற ஓட்டை உடைசற் பொருள்களைச் சேகரித்து அங்கே வைத்திருந்தான். கைச் செலவுக்கு என்று பெற்றோர்

கொடுக்கும் காசை எல்லாம் அந்த ஊரிலுள்ள மருந்துக் கடைக்குக் கொண்டுபோவான். பலவகை மருந்துகளையும், தூள்களையும், கரைசல்களையும் வாங்குவான். அவைகளைக் கொண்டு தன் பரிசோதனைகளை நடத்திக்கொண்டிருப்பான்.

இப்படியாக, வீட்டிலே கல்வி கற்று வந்த எடிசன் வளர்ந்து பெரியவன் ஆனான். தனது தாயின் அன்பையும் உதவியையும் அவன் ஒரு போதும் மறக்கவில்லை.

பிற்காலத்திலே தொமஸ் அல்வா எடிசன் புகழ் பெற்ற விஞ்ஞான அறிஞராக மதிக்கப்பட்டார். ஆயிரக்கணக்கான கருவிகளையும் உபகரணங்களையும் கண்டறிந்தார். புதிய புதிய சாதனங்களை ஆக்கினார்; ஒலியைப் பதிவு செய்யும் முறையைக் கண்டு பிடித்தார்; தந்தியடிக்கும் முறைகளிலே பல திருத்தங்களைச் செய்தார்; அசையும் படக்காட்சி நுட்பத்தை அறிமுகப்படுத்தினார். மின் விளக்குக் குமிழ்களைச் செய்வதற்காக அவர் நடத்திய ஆராய்ச்சிகள் விரிவானவை. அந்தக் காலத்திற் பெரும்பாலான வீடுகளில் எண்ணெய் விளக்குகளே பயன்பட்டன. சில வீடுகளில் வாயு விளக்குகளும் பயன்பட்டன. மின் சாரத்தைக் கையாண்டு வீடுதோறும் மின்குமிழ்களை எரியச் செய்யும் வழக்கம் அப்போது இருக்கவில்லை.

தொமஸ் அல்வா எடிசன் ஒரு மின் விளக்கைச் செய்வதற்கு முயன்றார். கண்ணாடிக் குமிழொன்றில் இருந்த காற்றை அகற்றினார். அதனுள்ளே மெல்லிய கம்பி இழை ஒன்றைப் பொருத்தினார். அந்த இழையின் ஊடே மின்னோட்டத்தைச் செலுத்தினார். இழையிலே சூடு ஏறியது. அது பிரகாசித்தது. ஆனால், அந்தப் பிரகாசம் நெடுநேரம் நீடிக்கவில்லை. சிறிது நேரத்திலே இழை உருகியது. பின்னர் விளக்கு அணைந்துவிட்டது.

விரைவிலே உருகி அணையாது, நெடுநேரம் நின்று எரியும் இழையை எப்படிச் செய்வது என்று எடிசன் யோசித்தார். பல்வேறு உலோகங்களைப் பரிசோதித்துப் பார்த்தார். இறுதியிலே ஒரு நூற்கட்டையை எடுத்தார். நூலைத் துண்டுதுண்டாக வெட்டி ஓர் உலையிலிட்டுக் கருக்கினார். இவ்வாறு பெற்ற காபன் இழையைக் கண்ணாடிக் குமிழுட் பொருத்தினார். அது நன்றாக எரிந்தது. நாற்பது மணித்தியாலம் ஒளி தந்தது.

எடிசனின் உற்சாகம் அதிகமாயிற்று. காபன் இழையை ஆக்குவதற்கு மிகச் சிறந்த பொருள் எது என்று ஆராய்ந்தார். அப்படிப்பட்ட ஒரு பொருளைத் தேடிக் கொண்டுவரும் பொருட்டு உலகெங்கும் ஆட்களை அனுப்பினார். அவர்கள் ஆயிரக்கணக்கான மைல் தூரம் பயணம் செய்தனர். தூர தேசங்களுக்குப் போயினர். பலவித பொருள்களைக் கொண்டுவந்தனர். எடிசன் அவைகளைப் பயன்படுத்தி மின்குமிழ்கள் செய்தார். கடைசியில், யப்பானிலிருந்து பெற்ற ஒருவகை மூங்கிலே காபன் இழை செய்வதற்கு மிகவும் உவப்பானது என்று கண்டார். கண்ணாடிக் குமிழின் உருவத்தையும் மாற்றினார். எடிசன் புதிதாகச் செய்த மின்குமிழ் நல்ல வெளிச்சத்தைத் தந்தது. நெடுங்காலம் நின்று எரிந்தது.

இன்று நாம் பயன்படுத்தும் மின்குமிழ்களுக்கும் எடிசன் ஆக்கிய மின்குமிழ்களுக்கும் வித்தியாசங்கள் உண்டு. ஆயினும் எடிசனின் பணிகளே நவீன மின் விளக்குகள் உருவாகுவதற்கு வழி வகுத்தன.

இவ்வாறு, எடிசன் செய்த ஆராய்ச்சிகள் இன்றும் நமக்குப் பயன்படுகின்றன. இசைத்தட்டுகளைச் சுழல வைத்துப் பாட்டுகளைக் கேட்கிறோம். படமாளிகைக்

குச் சென்று படக்காட்சிகளைப் பார்க்கிறோம். வீடு தோறும் மின் விளக்குகளைப் பயன்படுத்துகிறோம். இவையெல்லாம் எடிசனின் ஆராய்ச்சிகள் மூலம் எமக்குக் கிடைத்த பலன்கள்.

## வினாக்கள்

I

1. 'அல்' என்னும் சிறுவன் கோழிகளுக்கு எப்படி உதவி செய்ய முயன்றான்?
2. 'அல்' பள்ளிக்கூடம் போகத் தொடங்கியது எத்தனை வயதில்?
3. ஆசிரியர் ஏன் எடிசனை ஏசினார்?
4. எடிசன் விஞ்ஞானம் படித்தது எங்கே? எப்படி?
5. எடிசனின் கண்டுபிடிப்புகள் சில கூறுக.

II பின்வருவோர் ஒவ்வொருவரைப் பற்றியும் பதினைந்து வரிகள் எழுதுக.

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்.
2. சுப்பிரமணிய பாரதியார்.
3. சின்னத்தம்பிப் புலவர்.
4. தோமஸ் அல்வா எடிசன்.

# 33

## கொடுத்தார்க்குக் குறைவில்லை

பஸ்றா என்னும் நகரத்திலே றாபியா என்னும் முஸ்லிம் பெண்மணி வாழ்ந்து வந்தார். அவர் இறைவனிடத்திலே மிக்க பக்தி உள்ளவர். தமக்கு ஏதாவது கஷ்டம் ஏற்படும்பொழுது அதை நீக்கும்படி இறைவனையே வேண்டுவார். வேறு யாரிடத்திலும் வேண்டுதல் செய்வதில்லை.


ஒரு நாள் அவர் இரவுச் சாப்பாட்டைச் சாப்பிட ஆயத்தஞ் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய வீட்டுக்கு இரண்டு விருந்தாளிகள் வந்து சேர்ந்தார்கள். அவரிடம் இரண்டு உரொட்டித் துண்டுகள் மட்டுமே இருந்தன. அவற்றை எப்படி அவர்களுக்குக் கொடுப்பது என்று அவர் யோசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு பிச்சைக்காரன் அங்கே வந்து, ''பிச்சை தாருங்கள், அம்மா'' என்றான். அவர் தம்மிடம் இருந்த இரண்டு உரொட்டித் துண்டுகளையும் அந்தப் பிச்சைக்காரனுக்கு கொடுத்துவிட்டார்.

இதைக் கண்ட விருந்தாளிகள் இருவரும் ஆச்சரியப்பட்டார்கள். 'நாம் விருந்தாளிகளாக வந்திருக்கிறோம் என்று தெரிந்தும், இருந்த உரொட்டிகளைப் பிச்சைக்காரனுக்குக் கொடுத்துவிட்டாரே; இவர்

வந்தவருக்கு விருந்து கொடுத்து உபசரிக்கமாட்டார் போலும்' என்று எண்ணி மனம் வருந்தினார்கள்.

சிறிது நேரத்தில், அயல் வீட்டு வேலைக்காரி ஒருத்தி அங்கே வந்தாள். அவள் ஒரு தட்டிலே ஏதோ வைத்து மூடிக் கொண்டுவந்திருந்தாள். ''எங்கள் எசமானி இதை உங்களுக்குக் கொடுக்கும்படி சொன்னார்'' என்று தட்டை றாபியாவிடம் நீட்டினாள்.

றாபியா மூடியைத் திறந்து பார்த்தார். அங்கே பதினெட்டுத் துண்டு உரொட்டிகள் காணப்பட்டன. ''இவை எனக்கு அனுப்பப்பட்டவை அல்ல என்று நினைக்கிறேன். நீ இவற்றைத் திருப்பிக்கொண்டு போய் உன் எசமானியிடம் கொடு'' என்றார் றாபியா.



படம் 32. றாபியாவும் விருந்தாளிகளும்.

''இல்லை; தங்களிடமே கொடுக்கும்படி என் எசமானி கூறினார்'' என்றாள் அந்த வேலைக்காரி.

''இல்லை, இல்லை; இது எனக்காய் இருக்க முடியாது; நீ கொண்டுபோய் உன் எசமானியிடம் கொடு'' என்றார் றாபியா. வேலைக்காரி திரும்பிச் சென்றாள்.

சிறிது நேரத்தில் அந்த வேலைக்காரி அதே தட்டுடன் திருப்பி வந்தாள். அப்பொழுதும் றாபியா மூடியைத் திறந்து பார்த்தார். அங்கே இருபது உரொட்டித் துண்டுகள் காணப்பட்டன. ''சரி, இந்த முறை இது எனக்குத்தான் அனுப்பப்பட்டிருக்கிறது'' என்று தட்டை வாங்கிக்கொண்டார். வேலைக்காரி போய் விட்டாள்.

இதைக் கண்ட விருந்தாளிகள் மேலும் ஆச்சரியப் பட்டார்கள். றாபியாவைப் பார்த்து ''முதலாம்முறை ஏன் உரொட்டிகளைத் திருப்பி அனுப்பினீர்கள்?'' என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் ''நீங்கள் பசியாயிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், அந்த இரண்டு உரொட்டித் துண்டுகளையும் உங்களுக்குத் தர எனக்கு வெட்கமாயிருந்தது. அப்பொழுது பிச்சைக்காரன் வந்தான். நம்மை விட அவன் அதிக பசியாய் இருப்பான் என்று எண்ணி, சந்தோஷமாக அவனிடம் அந்த இரு உரொட்டித் துண்டுகளையும் கொடுத்தேன். 'என் நாயனே, உனக்காக ஒருவருக்குப் பிச்சையளித்தால் அதைப் போலப் பத்து மடங்காகத் திருப்பித் தருவதாக நீ கூறியிருக்கிறாய். உனது திருவாக்கிலே முழு நம்பிக்கை வைத்து, என்னிடம் இருந்த உரொட்டித் துண்டு இரண்டையும் உன் பேரிலே, பிச்சைக்காரனிடம் கொடுத்துவிட்டேன். எனது விருந்தாளிகளை உபசரிப்பதற்கு நீயே வழி காட்டு' என்று பிரார்த்தனை செய்தேன். ஆகவே, முதலாம்

முறை பதினெட்டு உரொட்டித் துண்டுகள் வந்த போது, அவை இரண்டின் பத்து மடங்கு அல்லாத படியால் திருப்பிவிட்டேன். இப்பொழுது இருபது துண்டுகள் வந்திருக்கின்றன. அதனால், ஏற்றுக் கொண்டேன். வாருங்கள் சாப்பிடுவோம்'' என்றார். மூவரும் இருந்து சாப்பிட்டார்கள்; பசி தீர்ந்த பின் விருந்தாளிகள் நன்றி சொல்லி விடைபெற்றுச் சென்றார்கள்.

## வினாக்கள்

I. 1. றாபியாவின் நல்ல குணங்கள் எவை?

2. விருந்தாளிகள் வரும்பொழுது றாபியா என்ன செய்துகொண்டிருந்தார்?

3. விருந்தாளிகள் ஏன் மனம் வருந்தினார்கள்?

4. றாபியா முதலாம் முறை அனுப்பப்பட்ட உரொட்டியை ஏன் திருப்பி அனுப்பினார்?

5. பிச்சை கொடுப்பது பற்றி இறைவன் கூறியிருப்பது என்ன?

II. பின்வரும் சொற்களைப் பெயராகவும் வினையாகவும் வரத்தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

1. ஓடு
2. ஆடு
3. கரை
4. அலை
5. அணை

34

அஜீஸ் கான்

## மேன்மக்கள்

இஸ்லாமிய சரித்திரத்திலே கலீபாக்களின் ஆட்சி மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின் முதலாவது கலீபாவாக அபூபக்கர் சித்தீக் (றழி) அவர்களும், இரண்டாவது கலீபாவாக உமர் பாறூக் (றழி) அவர்களும் ஒருவர் பின் ஒருவராகப் பதவிக்கு வந்தனர். மூன்றாவது கலீபாவாகப் பதவியேற்றவர்களே உதுமான் (றழி) அவர்களாவர். உதுமான் (றழி) அவர்கள் உயர் குணமெல்லாம் அமையப்பெற்றவர். தரும சிந்தையும், சேவை மனப்பான்மையும் உள்ளவர். தமக்கு முன்னிருந்த கலீபாக்களைப் போன்றே சமுதாயத்திலே சிறந்த மதிப்பைப் பெற்றிருந்தார். தமது சௌகரியம் எதையும் சிந்திக்காது நாட்டு மக்களின் மகிழ்ச்சியையே எப்பொழுதும் சிந்தித்தார். அவர்களின் முழு நேரமும் பொதுநல சேவைக்காகவே செலவிடப்பட்டது.

இவ்வாறு சிறப்பான முறையில் முஸ்லிம் இராச்சியத்தை ஆட்சி செய்து வந்த உதுமான் (றழி) அவர்களுக்கு வேலைக்காரர்கள் பலர் இருந்தனர். இஸ்லாமிய ஆட்சி படிப்படியாக வளர்ச்சியடைந்துகொண்டு வந்ததால், பல வேலைகளையுங் கவனிக்க வேலைக்காரர்கள் பலர் இருப்பது அவசியந்தானே? இவ்வாறு, நியமிக்கப்பட்டிருந்த வேலைக்காரர்களில் ஒருவன் கலீபா உதுமான் (றழி) அவர்களுக்கு ஒரு பிழையைச் செய்துவிட்டான். இளகிய மனம் படைத்தவராயினும் கலீபா அவர்கள் அவன்மீது கோபம் கொண்

டார்கள். அவர்கள் நினைத்திருந்தால் அவ்வேலைக்காரனை வேலையிலிருந்து உடனடியாக நீக்கிவிட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறெல்லாம் செய்யாமல் வேலைக்காரனைக் கோபத்துடன் கூப்பிட்டார். அவனுக்குத் தகுந்த புத்தி புகட்டும் எண்ணத்துடன் அவனது காதைப் பிடித்துப் பலமாக முறுக்கினார். வேலைக்காரனோ கலீபா இத்துடன் விட்டுவிடட்டும் என நினைத்து வலி தாங்க முடியாதவன்போன்று ''ஆஅஅ'' என்று அலறினான்; காதைப் பொத்திக் கொண்டு கீழே குந்திவிட்டான்.

மறுகணமே கலீபா அவர்களின் சிந்தனையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. வேலைக்காரனின் செவியை முறுக்கியது அவனுக்குப் புத்தி புகட்டுவதற்காகவன்றி அவனைத் தொல்லைப்படுத்துவதற்காக அன்று. இருந்தும் அவன் பட்ட வேதனைக்காக மனம் வருந்தினார்கள். தாம் அவனுக்குக் கொடுத்த தண்டனை கூடிவிட்டதோ என்று எண்ணினார்கள். எனவே, மேலதிக தண்டனையை அவனுக்கு வழங்கியமைக்காகத் தாம் அரசர் என்ற வகையிலும், மனிதர் என்ற வகையிலும் இறைவனின் கோபத்துக்கு உள்ளாக வேண்டி வரும் என்பதை எண்ணி மனம் வருந்தினார்கள்.

எனவே, உதுமான் (றழி) அவர்கள் காதைப் பிடித்துக்கொண்டு கதறிய அவ்வேலைக்காரனை இரக்கத்தோடு அழைத்தார்கள். வேலைக்காரனோ அவர்களின் எண்ணத்தை உணராதவனாக நடுங்கிக் கொண்டு பக்கத்தே வந்து நின்றான்.

''உன் வேதனையைக் கண்டு என் மனம் மிகவும் புண்பட்டுவிட்டது. நான் உன் காதை எவ்வாறு பலமாக முறுக்கினேனோ அவ்வாறே நீயும் என் காதைப் பிடித்து உன் ஆத்திரம் அடங்கும் வரையும் நன்றாக முறுக்கி விடு'' என்று கூறினார்கள்.

வேலைக்காரனோ கலீபா இவ்வாறு கூறுவார் என எதிர்பார்க்கவில்லை. மிகவும் ஆச்சரியம் அடைந்தான். கலீபாவின் நேர்மையையும், இறைவன் மேல் உள்ள பற்றையும், நீதி செய்யும் முறையையும் அன்றே நேரடியாகத் தெரிந்துகொண்டான்.

அவனது மனதில் ஏற்கனவே இருந்த பயம் நீங்கியது. உடனே கலீபா அவர்களை பற்றுதலோடும் பணிவோடும் நோக்கி, "எசமானே! நான் தங்களுக்கு ஏற்கனவே பெரிய பிழைகளைச் செய்துள்ளேன். தாங்கள் தந்த தண்டனை எந்த வகையிலும் கூடியதன்று. தங்கள் புனிதமான உடம்பில் நான் எவ்வித தீங்கும் செய்ய ஒருபோதும் விரும்பமாட்டேன்" என்றான் வேலைக்காரன்.

"முடியவே முடியாது! எசமான் இடும் கட்டளைப்படி நடப்பது வேலைக்காரனுடைய கடமை. அப்போதுதான் எசமானுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் உண்டாகும். என் விருப்பப்படி நீ நடந்தால் மட்டுமே நான் திருப்தி அடைவேன்" என்று மறுபடியும் வேலைக்காரனைக் கலீபா உதுமான் (றழி) வற்புறுத்தினார்கள்.

வேலைக்காரனுக்கோ பெரிய சங்கடமாயிருந்தது. கலீபாவின் கட்டளையிலிருந்து எவ்விதத்திலும் தப்ப அவனால் முடியவில்லை. இறுதியில் கலீபாவின் காதை முறுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அப்பாவியாகிய அவ்வேலைக்காரன் கலீபாவின் செவியை மெதுவாகத் திருகினான், கலீபாவோ "இல்லை! இல்லை! நன்றாக முறுக்கு! பலமாக முறுக்கு!" என்று வேலைக்காரனிடங் கட்டளை இட்டார்.

வேலைக்காரனோ மேலும் பயந்து நடுநடுங்கியவனாக ''எசமானே! நீங்கள் எவ்வாறு இறைவனுக்கும் அவ வனது மறுவுலகத் தண்டனைகளுக்கும் பயப்படுகிறீர் களோ அவ்வாறே நானும் பயப்படுகிறேன். இந்நாட் டின் தலைவரான தங்களுக்கு எவ்விதமான பிழையை யும் இனிமேற் செய்ய நான் துணியமாட்டேன். தங் களுக்கு என்னால் உண்டான சிரமங்களுக்கு உங்களிடத் தில் மன்னிப்புக் கோருகிறேன்'' என்று கூறினான்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட கலீபா, உதுமான் (றழி) அவர்கள் தம் கண்களில் நீர் ததும்ப அவ் வேலைக்காரனைப் பரிவோடு தழுவிக்கொண்டார். அன்று முதல் அவ்வேலைக்காரன் எசமானுக்கு மிகவும் நம்பிக்கையுள்ளவனாய் உழைத்து வந்தான்.

அதன் பின்னர் உதுமான் (றழி) அவர்கள் ''இறை வனே! நான் முழு மனத்துடன் இவ்வேலைக்காரனின் பிழைகளை மன்னித்துவிட்டேன். அவ்வாறே நீயும் அவனுடைய பிழைகளை மன்னித்து அவன் நல்லவனாக வாழ அருள் புரிவாயாக'' என்று தம் இரு கரங் களையும் ஏந்தியவாறு பிரார்த்தித்தார்கள்.

எவரது மனத்தில் இறைவனைப் பற்றிய அச்சம் இருக்கிறதோ அவர்களெல்லாம் மேன்மக்கள் ஆவர்.

## வினாக்கள்

1. கலீபா உதுமான் (றழி) அவர்களிடம் காணப் பட்ட உயர் குணங்கள் யாவை?

2. கலீபா உதுமான் (றழி) அவர்கள் வேலைக்காரனை எவ்வாறு தண்டித்தார்கள்?

3. கலீபா தம் காதை முறுக்கும்படி வேலைக்காரனிடம் கேட்டுக்கொண்டதற்குக் காரணமென்ன?

4. கலீபா அவ்வேலைக்காரனை விடுதலை செய்ததன் காரணம் என்ன?

5. மேன்மக்கள் என்போர் யாவர்?

# 35

## கடதாசி பேசுகிறது

கணேசன் மேசை விளக்கின் முன் இருந்து பாடங்களைப் படிக்கத் தொடங்கினான். அவனது மேசையிலே புத்தகங்களும் பத்திரிகைகளும் இருந்தன. அவன் தன் வரைதற் கொப்பியை எடுத்துச் சில சித்திரங்களை வரைந்தான். ஐந்தாம் ஆண்டுத் தமிழ்ப் புத்தகத்தில் ஒரு பாடத்தை எடுத்துப் படித்தான். பத்திரிகையை எடுத்து வாசித்தான். கண்கள் கனத்தன. நித்திரை வந்தது. மேசையின் மேலே சாய்ந்து தூங்கி விட்டான்.

சிறிது நேரத்தில் மேசையிலே சிறு சலசலப்புக் கேட்டது. பத்திரிகையின் இதழ்கள் 'மடக் மடக்' என்று அடித்துக்கொண்டன. அடுக்கி வைக்கப்பட்டிருந்த கடதாசிகள் சில அங்கும் இங்கும் பறந்தன. மேசைக்குப் பக்கத்திலிருந்த கூடையுள் இருந்தும் ஒரு முணுமுணுப்புக் கேட்டது. கடதாசி, பத்திரிகைகள் எல்லாம் ஒன்றுடனொன்று பேசிக்கொண்டிருந்தன. குப்பையுட் கிடந்த கடதாசி ஒன்று, புதிய கடதாசி ஒன்றைக் கிட்ட அழைத்தது. "தோழா, நீ பிறந்த ஊரை விட்டுப் பிற ஊருக்கு வந்திருக்கிறாய், நான் பிறந்த ஊருக்கே நாளைக்குப் புறப்படுகின்றேன்" என்றது.

"அப்படியா சங்கதி? நல்லது; நீ பாக்கியசாலி! முன்பெல்லாம் குப்பையிற் போட்ட கடதாசிகளை எவருமே தேடமாட்டார்கள்; தூக்கி வீசிவிடுவார்கள். குழி தோண்டிப் புதைத்துவிடுவார்கள். நெருப்புக் கொளுத்தி எரித்துவிடுவார்கள். ஆனால், இன்று உங்க

ளுக்கெல்லாம் பெருமை உண்டாகியிருக்கிறது. அதனாலே காசு கொடுத்து வாங்குகிறார்கள். உங்களைப் பக்குவமாகக் கட்டி வண்டிகளில் ஏற்றிப் பிறந்த ஊருக்கே அனுப்பி வைக்கிறார்கள். அங்கு போய் விட்டாற் பேசவும் வேண்டுமா? நீங்களும் என்னைப் போல், புத்தம் புதுக் கடதாசிகளாக மாறிவிடலாம். உங்களுக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது'' என்றது புதிய கடதாசி.

அப்பொழுது மேசையிற் கிடந்த பேனா எழுந்து நின்றது. ''நண்பா, நான் உன்னோடு நன்கு பழகியிருக்கின்றேன். ஆனால், உன்னுடைய வரலாறு எனக்குத் தெரியாது. முழுக் கதையையுஞ் சொல்லு. கேட்போம்'' என்றது. கடதாசி பேசத் தொடங்கியது.

''நான் பிறந்த இடம் வாழைச்சேனை. அங்கு பெரிய கடதாசித் தொழிற்சாலை ஒன்று உண்டு. அது கிழக்கு இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானது. அத்தொழிற்சாலையில் எங்களை ஆக்கும் பல பெரிய எந்திரங்கள் இருக்கின்றன.

''கிழக்கிலங்கையில் ஏராளமான வயல்கள் உண்டு என்பது உனக்குத் தெரியும் அல்லவா? அந்த வயல்களிற் கிடைக்கும் வைக்கோலைக் கொண்டுதான் நான் செய்யப்பட்டேன்.

''கூட்டுத்தாபனத்தார் வயல்களிலிருந்து வைக்கோலைக் கட்டி வண்டிகளில் ஏற்றி வந்தார்கள். அந்த வைக்கோலைப் பட்டடையாகக் குவித்து வைத்தார்கள். வைக்கோற் பட்டடைகள் தொழிற்சாலையின் ஒரு புறத்திற் காட்சியளித்தன.

''தொழிலாளர் வைக்கோல் வெட்டும் எந்திரத்தின் உதவியால் வைக்கோலைச் சிறுசிறு துண்டு

களாக வெட்டினார்கள். அவற்றைப் பெரிய தொட்டிகளிற் போட்டார்கள். வெட்டிய துண்டுகளுடன் சோடாத் தூளையும் வேறு சில மருந்துகளையுங் கலந்தார்கள்! அந்தக் கலவையை மூன்றரை மணித்தியாலங்களாகக் காய்ச்சினார்கள். அப்படிக் காய்ச்சும் போது வைக்கோலிலுள்ள பழுப்புப் பகுதி கரையநார்கள் மட்டும் மிஞ்சின. இந்த நிலையில் அதனைக் "கூழ்" என்று கூறினார்கள். இந்தக் கூழைச் சுழலும் பீப்பாவின் உதவியோடு தண்ணீராற் கழுவினார்கள். அவ்வாறு கழுவிச் சுத்தமான நார்களைப் பிரித்தெடுத்தார்கள். (இந்த நார்கள் மரகதப் பச்சை நிறமாக இருந்தன. இந்த நிறத்தை நீக்கும் பொருட்டு ஒரு வகைத் திரவத்தைக் கலந்தார்கள். இவ்வாறு பெற்ற வைக்கோற் கூழுடன் மரக் கூழையுங் கலந்தார்கள். அந்தக் கலவைக்கு மேலுஞ் சில மருந்து வகைகளைச் சேர்த்துப் பக்குவஞ் செய்தார்கள். பக்குவஞ் செய்த பின் எந்திரத்தின் மூலம் சுத்தப்படுத்தினார்கள். கூழைக் கலக்கி வடி தட்டுகளுடே ஓடவிட்டார்கள். பின்னர், பல வகைப் பெட்டிகள், உருளைகள், தட்டுகள் ஆகியவற்றினூடே அந்தக் கூழைச் செலுத்தினார்கள். அதன்பின் நுண்ணிய கம்பி வலைகளினாற் செய்யப்பட்ட ஒரு வாரின் மீது அதை அனுப்பினார்கள். அப்பொழுது கூழிலுள்ள நீரின் பெரும்பகுதி வடிந்து நீண்ட காகிதத் தாள் பிறந்தது. அப்படிப் பிறந்த காகிதத் தாள் ஈரமாயிருந்தது. மெத்தை போன்ற கம்பள வார்களிலே தவழ்ந்து தவழ்ந்து சென்றது. நீராவியாற் சூடாக்கப்பட்ட உருளைகள் மீது உருண்டு புரண்டது. இங்கே அக்காகிதத் தாளிலிருந்த கடைசிச் சொட்டு நீருங் காய்ந்து போய்விட்டது. இந்த நிலையில் வழவழப்பின்றி முரடாக இருந்தது. தொழிலாளர்கள், அதனை உருக்கு உருளைகள் மூலம் அழுத்தஞ் செய்து மென்மையாக்கினார்கள். கடைசியில் அப்பெரிய காகிதத் தாள் உருளையாக உருண்டு வெளியே வந்தது. அந்த உருளையிலுள்ள காகிதத் தாளைத் துண்டுத்துண்டாக வெட்டினார்கள். அப்பொழுது நான் என்னுடைய இப்போதைய வடிவத்தைப் பெற்றேன்

"அதன் பின்பு, எனது பிரயாணம் ஆரம்பமானது நான் பிறந்த இடத்தை விட்டுப் பிரிந்தேன். நான் நேராகக் கொழும்பிலுள்ள கூட்டுத்தாபன விற்பனை நிலையத்துக்குச் சென்றேன். அங்கு வந்த கணேசன் என்பவன் என்னை வாங்கினான். தன் வீட்டுக்குக் கொண்டுவந்தான். என்னையும் உன்னையும் சந்திக்க வைத்தான். இதுதான் நண்பா, எனது வரலாறு. இனி, நீ சொல்ல வேண்டியதைச் சொல்லு; எழுத வேண்டியதை எழுது. நான் அவற்றையெல்லாம் என் உடம்பிலே ஏற்றுக்கொள்வேன். கணேசன் பார்க்கவும் படிக்கவும் கூடியவாறு பேணி வைப்பேன்."

இவ்வாறு கடதாசி தன் வரலாற்றைக் கூறி முடித்தது. திடீரெனக் கணேசன் கண் விழித்தான். அப்பொழுதுதான் இதுவரை கண்டது ஒரு கனவு என்பதை அவன் உணர்ந்தான்.

## வினாக்கள்

1. இலங்கையிலே கடதாசித் தொழிற்சாலை எங்கே இருக்கிறது?
2. கடதாசி செய்வதற்கு வேண்டிய முக்கிய மூலப் பொருள் எது?
3. வைக்கோற் கூழ் செய்யும் முறையைக் கூறுக.
4. பழைய கடதாசிகளின் உபயோகம் என்ன?
5. காகிதத்தின் உபயோகங்கள் எவை?

36

## எங்கள் நாடு

எங்கும் மாமணி விற்பொலி யுங்கதிர்
எங்குந் தாமரை யன்னம் படுமலர்
மங்கு றாத வளந்திக ழுந்திரு
மாவலி கங்கை நாடெங்கள் நாடே.

அணியி ளங்கதி ராயிர முள்ள
அருக்கன் போய்க்குட பாலிடை மேவ
மணிகொ ணர்ந்து மணிவிளக் கேற்றிடும்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே

வேணிச் சங்கரர் தொண்டர்கள் என்று
வீடு தோறும் இரப்பவர்க் கெல்லாம்
மாணிக்க மள்ளிப் பிச்சை கொடுத்திடும்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே

பொன்னு லோகம் பொருவுநன் னாட்டின்
பொழிலிற் றோகை மயில்நின் றுலாவும்
வன்ன வேலன் கதிரைக்கும ரேசன்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே.

(கதிரைமலைப் பள்ளு)

### விளக்கக் குறிப்புகள்

வில்-ஒளி; வேணி-பின்னிய சடை; அருக்கன்-சூரியன்; பொழில்-பூஞ்சோலை; குடபால்-மேற்குத் திசை.

14.270
8.561
18.032

40.863

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன்கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உமது சகோதரர்களுக்கு வழங்கத் தக்கமுறையிற் கவனமாக வைத்துப் படிக்க.

பாடசாலைப் பெயர் : ........................................................

| | மாணவர் பெயர் | ஆண்டு | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 1987 | P. Sasi | | |
| 1988 | P. Sasileka | | |
| 1989 | | | |
| 1990 | | | |
| 1991 | | | |
| 1992 | | | |